
# 2000 அவ்யக்த முரளி



<u>பொருளடக்கம் - 9</u>

**18.01.2000** பிரம்மாபாபாவிற்கு சமமாக தியாகம், தபஸ்யா மற்றும் சேவையின் வைப்ரேஷன் (எண்ண அலைகளை) உலகில் பரப்புங்கள்!

**15.02.2000** மனதைத் தூய்மையாக, புத்தியைத் தெளிவாக வைத்து 'டபுள் லைட்' பரிஷ்தா ஸ்திதியினுடைய அனுபவம் செய்யுங்கள்!

**03.03.2000** பிறந்த நாளின் விசேஷ பரிசு -சுபமான பாவனை மற்றும் அன்பு பாவனையை எமர்ஜ் (வெளிக்கொணர்ந்து) கோபம் என்னும் மகா எதிரியின் மீது வெற்றி அடையுங்கள்! (சிவ ஜெயந்தி)

**19.03.2000** பணிவு மற்றும் படைப்பின் சமநிலை மூலம் ஆசீர்வாதங்களின் கணக்கை சேமிப்பு செய்யுங்கள்!

**30.03.2000** மனதைச் சரியாக வைத்திருப்பதற்காக இடையிடையே **5-**நொடிகள் எடுத்துக் கொண்டு மனதின் பயிற்சி செய்யுங்கள்!

**11.11.2000** சம்பூர்ணத்தின் சமீபத்தின் மூலம் பிரத்யக்ஷதாவின் சிரேஷ்ட சமயத்தை சமீபத்தில் கொண்டு வாருங்கள்!

**25.11.2000** தந்தைக்குச் சமமாக ஆவதற்காக இரண்டு விஷயங்கள் மீது உறுதியாக இருங்கள் -சுய மரியாதையில் இருப்பது மற்றும் அனைவருக்கும் மரியாதை அளிப்பது!

**16.12.2000** சாக்ஷாத் பிரம்மாதந்தைக்குச் சமமாக கர்ம யோகி பரிஷ்தா ஆகுங்கள் அப்போது சாக்ஷாத்காரம் ஆரம்பமாகும்!

**31.12.2000** சேமிப்பின் கணக்கை அதிகரித்து அகண்ட மகாதானி ஆகுங்கள்!

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

## 18.01.2000 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பிரம்மாபாபாவிற்கு சமமாக தியாகம், தபஸ்யா மற்றும் சேவையின் வைப்ரேஷன் (எண்ண அலைகளை) உலகில் பரப்புங்கள்!

இன்று மிகவும் சக்திவானாகிய நிறைந்த பாப்தாதா தன்னுடைய சக்திசாலி குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றைய தினம் நினைவு நாளாக இருப்பது சக்திசா-யான நாளாகவும் இருக்கிறது. இன்றைய தினம் அனைத்துக் குழந்தைகளுக்கும் சர்வ சக்திகளையும் மனம் விரும்பிக் கொடுக்கும் தினம் (உயில்) உலகில் அனேக விதமான வில் அதாவது உயில் இருக்கும் ஆனால் பிரம்மாபாபா, தந்தையிடமிருந்து கிடைத்த அனைத்து சக்திகளையும் குழந்தைகளுக்கு உயில் எழுதிக் கொடுத்து விட்டார். இந்த மாதிரி ஆன்மீக உயிலை வேறு யாரும் எழுதிக் கொடுக்க முடியாது. தந்தை சிவபாபா பிரம்மாபாபாவை ஸ்தூலமாக இவ்வுலகில் பொறுப்பாளர் ஆக்கினார். மேலும் பிரம்மாபாபா குழந்தைகளுக்கு பொறுப்பாளர் ஆகுக என்ற வரதானத்தைத் தந்து, (உயில்) செய்து கொடுத்தார். இந்த வில் குழந்தைகளுக்கு சகஜமாக சக்திகளின் அனுபவத்தை செய்வித்துக் கொண்டிருக்கிறது. ஒன்று தன்னுடைய முயற்சி மூலம் சக்திகளின் பிராப்தி! இது பிரபுவின் உயில் மூலம் கொடுப்பினை! இது பிரபுவின் வரதானம்! இந்த பிரபுவின் வரதானம் நடந்து கொண்டிருக்கிறது. வரதானத்தில் முயற்சி செய்வதற்கான கடின உழைப்பு இருப்பதில்லை ஆனால் சுலபமாக மற்றும் இயல்பாகவே கருவி ஆக்கி, நடத்திக் கொண்டிருக்கின்றனர். (அன்று) எதிரில் கொஞ்சம் பேர் தான் இருந்தார்கள், ஆனால் பாப்தாதாவிடமிருந்து, விசேஷமாக பிரம்மாபாபாவிடமிருந்து விசேஷமாக இந்த வில் கிடைத்தது. மேலும் எந்தக் குழந்தைகளுக்கு தந்தை வில் செய்திருந்தாரோ அந்த அனைத்து

குழந்தைகளும் (ஆதி ரத்தினங்கள் மற்றும் சேவையின் பொறுப்பிலிருக்கும் குழந்தைகள்) நல்ல முறையில் காரியத்தில் ஈடுபடுத்தினார்கள் என்பதையும் பாப்தாதா பார்த்தார். மேலும் அந்த அன்பின் காரணமாக இந்த பிராமண குடும்பம் ஒவ்வொரு நாளும் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. குழந்தைகளின் விசேஷத்தின் காரணமாக இந்த வளர்ச்சி ஏற்பட வேண்டும் என்று இருந்தது, மேலும் அது ஆகிக் கொண்டிருக்கிறது. பொறுப்பாளர் ஆகியிருக்கும் மற்றும் ஒத்துழைப்பு கொடுக்கும் இரண்டு விதமான குழந்தைகளில் இரண்டே விசேஷங்கள் மிக நல்லதாக இருந்தது. முதல் விசேஷம், ஸ்தாபனையின் ஆதி ரத்தினமாக இருந்தாலும் சேவையின் ரத்தினமானாலும் சரி, இரு பாலரிடமும் குழுவின் ஒற்றுமை மிக மிக நல்லதாக இருந்தது. யாரிடமும் ஏன்? என்ன? எப்படி என்ற எண்ணமே இல்லை. இன்னொரு விசேஷம் -ஒருவர் கூறினால் இன்னொருவர் ஏற்றுக் கொள்கிறார். இந்த அதிகப்படியான சக்திகளின் உயி-ன் விசேஷம் வாயு மண்டலத்தில் இருந்தது. எனவே பொறுப்பாளராகியிருக்கும் ஆத்மாக்களுக்கு பாபா, பாபா தான் தென்பட்டுக் கொண்டிருந்தார்.

அந்த மாதிரி நேரத்தில் பொறுப்பாளராக ஆகியிருக்கும் குழந்தைகளுக்கு உள்ளப்பூர்வமாக அன்பை வழங்குகிறார். தந்தையின் அதிசயமோ இருக்கவே இருக்கிறது ஆனால் குழந்தைகளின் அதிசயமும் குறைந்தது அல்ல. மேலும் அந்த நேரத்தின் குழு நாம் அனைவரும் ஒன்று என்ற ஒற்றுமை தான் இன்று வரை சேவையை வளர்ச்சியடையச் செய்து கொண்டிருக்கிறது. ஏன்? பொறுப்பாளர் ஆகியிருக்கும் குழந்தைகளின் அஸ்திவாரம் உறுதியாக இருந்தது. இன்றைய தினமும் குழந்தைகளின் அதிசயத்தின் பாடலை பாப்தாதா பாடிக் கொண்டிருந்தார். நாலா புறங்களிலிருந்தும் குழந்தைகள் அன்பின் மாலையை அணிவித்தார்கள். மேலும் தந்தை குழந்தைகளின் அதிசயக் காரியத்தை புகழ் பாடிக் கொண்டிருந்தார். இவ்வளவு காலம் நடக்கும் என்று நினைத்தீர்களா? எவ்வளவு காலம் கடந்து சென்று விட்டது. அனைவரின் வாயிலிருந்தும் உள்ளத்திலிருந்தும் இப்பொழுது செல்ல வேண்டும், செல்ல வேண்டும் என்பதே வெளி வந்தது, ஆனால் இப்பொழுது அவ்யக்த ரூபத்தின் சேவை நடக்க வேண்டும் என்று பாப்தாதா தெரிவித்திருந்தார். சாகார பாபா காலத்தில் இவ்வளவு பெரிய

ஹால் கட்டினாரா? பாபாவின் மிகச் செல்லமான இரட்டை வெளிநாட்டுக் குழந்தைகள் வந்திருந்தனரா? விசேஷமாக இரட்டை வெளிநாட்டினருக்கு அவ்யக்த பாலனை மூலமாக ஆன்மீக ஜென்மம் கிடைக்க வேண்டும் என்றிருந்தது, இவ்வளவு அனைத்துக் குழந்தைகளும் வர வேண்டும் என்றிருந்தது. எனவே பிரம்மாபாபாவிற்கு தன்னுடைய பௌதீக உடலை விட வேண்டியதாக இருந்தது. இரட்டை வெளிநாட்டினருக்கு நாம் அவ்யக்த பாலனைக்குப் பாத்திரமானவர்கள் என்ற போதை இருக்கிறது.

பிரம்மாபாபாவின் தியாகம் விசேஷமாக நாடகத்தில் அடங்கியிருக்கிறது. தொடக்கத்திலிருந்து பிரம்மாபாபாவின் தியாகம் மற்றும் குழந்தைகள் உங்களுடைய பாக்கியம் அடங்கியிருக்கிறது. அனைவரையும் விட தியாகத்தின் நம்பர் ஒன் உதாரணமாக பிரம்மாபாபா ஆனார். அனைத்தும் பிராப்தி ஆகி இருந்தும் தியாகம் செய்வதைத் தான் தியாகம் என்று சொல்வது. நேரத்திற்குத் தகுந்தாற்போல் பிரச்சனைகளின் காரணமாக செய்யும் தியாகத்தை சிரேஷ்ட தியாகம் என்று கூற முடியாது. பார்த்தீர்கள் என்றால் தொடக்கத்திலிருந்தே உடல், மனம், பணம், செல்வம், சம்மந்தம் என்ற அனைத்து பிராப்திகள் இருந்த போதிலும் தியாகம் செய்தார். உடலையும் தியாகம் செய்தார். அனைத்து சாதனங்கள் இருந்த போதிலும் அவர் பழையதிலேயே இருந்தார். சாதனங்கள் வரத் தொடங்கி விட்டன. சாதனங்கள் இருந்த போதிலும், சாதனாவில் உறுதியாக இருந்தார். பிரம்மாவின் இந்த தபஸ்யா குழந்தைகள் உங்கள் அனைவரின் பாக்கியத்தை உருவாக்கிச் சென்றது. நாடகப்படி அந்த மாதிரி தியாகத்தின் உதாரண ரூபம் பிரம்மா தான். மேலும் இந்த தியாகம் தான் எண்ண சக்தியின் சேவைக்கான விசேஷ பங்கை உருவாக்கியது. அதனால் எண்ண சக்தி மூலம் புதுப்புது குழந்தைகள் வேகமாக வளர்ச்சியை அடைந்து கொண்டிருக்கிறார்கள். அப்படி பிரம்மாபாபாவின் தியாகத்தின் விதையைக் கேட்டீர்களா?

பிரம்மாவின் தபஸ்யாவின் பலன் குழந்தைகளாகிய உங்களுக்கு கிடைத்துக் கொண்டிருக்கிறது. தபஸ்யாவின் பிரபாவம் இந்த மதுபன் பூமியில் நிரம்பியிருக்கிறது. கூடவே குழந்தைகளும் இருக்கிறார்கள், குழந்தைகளின் தபஸ்யாவும் இருக்கிறது, ஆனால் பொறுப்பானவர்

என்றோ பிரம்மாபாபாவைத்தான் கூறுவோம். மதுபன் தபஸ்யா பூமிக்கு யாரெல்லாம் வருகிறார்களோ அந்த பிராமணக் குழந்தைகளும் இங்கே உள்ள வாயுமண்டலம், வைப்ரேஷன் சகஜயோகி ஆக்கி விடுகிறது என்று அனுபவம் செய்கிறார்கள். யோகா செய்வதற்கு கடினமாக அனுபவம் ஆவதில்லை, சுலபமாக செய்ய முடிகிறது. மேலும் எப்படிப்பட்ட ஆத்மா வந்தாலும் அவரும் ஏதாவது அனுபவம் செய்துதான் செல்கிறார். ஏதாவது தனக்குள் மாற்றம் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை செய்து தான் செல்கிறார். இது பிரம்மா மற்றும் பிராமணக் குழந்தைகளின் தபஸ்யாவின் பிரபாவம். கூடவே சேவையின் விதியாகவும் விதவிதமான வகையான சேவையை குழந்தைகள் நடைமுறையில் செய்வித்து காண்பித்தது, அதே விதிகளை இப்பொழுது நீங்கள் விஸ்தாரத்தில் கொண்டு வந்து கொண்டிருக்கிறீர்கள். எனவே எப்படி பிரம்மாபாபாவின் தியாகம், தபஸ்யா, சேவையின் பலன் குழந்தைகள் உங்கள் அனைவருக்கும் கிடைத்துக் கொண்டிருக்கிறதோ அதே போல் ஒவ்வொரு குழந்தையும் தன்னுடைய தியாகம், தபஸ்யா மற்றும் சேவையின் அதிர்வலைகளை (வைப்ரேஷன்) உலகில் பரப்ப வேண்டும். எப்படி அறிவியலின் பலம் தன்னுடைய பிரபாவத்தை பிரத்யக்ஷ ரூபத்தில் காண்பித்துக் கொண்டிருக்கிறது. அந்த மாதிரி அறிவியலை உருவாக்குவதும் அமைதி பலம். அமைதி பலத்தை இப்பொழுது பிரத்யக்ஷமாக (வெளிப்படையாக) காண்பிப்பதற்கான நேரம் இது. அமைதி பலத்தின் வைப்ரேஷனை அதிவேகத்தில் பரப்புவதற்கான சாதனம் -மனம், புத்தியின் ஒருமுகப்பட்ட நிலை. இந்த ஒருமுகப்பட்ட நிலையின் பயிற்சியை அதிகரிக்க வேண்டும். ஒருமுகப்பட்டதின் சக்திகள் மூலமாகத்தான் வாயுமண்டலத்தை உருவாக்க முடியும். குழப்பத்தின் காரணமாக சக்திசாலியான வைப்ரேஷன் உருவாக முடிவதில்லை. ஒருமுகப்பட்ட சக்தி அதிகம் வேண்டும் என்று இன்று பாப்தாதா பார்த்தார். இப்பொழுது தன்னுடைய சகோதர, சகோதரிகளின் துக்க நிகழ்வுகள் மாறி விட வேண்டும் என்று அனைத்துக் குழந்தைகளுக்கும் ஒரே ஒரு திட எண்ணம் இருக்க வேண்டும். உள்ளத்தில் இரக்க உணர்வு இருக்க வேண்டும். அறிவியலின் சக்தி இவ்வளவு குழப்பத்தை ஏற்படுத்த முடியும் என்றால், இத்தனை அனைத்து பிராமணர்களின் அமைதியின் சக்தி, இரக்கமனமுடைய பாவனை மூலமாக குழப்பத்தை மாற்றம் செய்ய முடியாதா என்ன? எப்பொழுது செய்யத்தான்

வேண்டும், நடக்கத்தான் வேண்டும் என்றால் இந்த விசயத்தின் மேல் விசேஷ கவனம் வையுங்கள். எப்பொழுது நீங்கள் கிரேட், கிரேட் கிராண்ட் ஃபாதரின் (முப்பாட்டனாரின்) குழந்தைகள் என்றால், அனைவருமே உங்களுடைய தலைமுறையினர், கிளைகள், குடும்பத்தினர் மற்றும் நீங்களே அனைத்து பக்தர்களின் இஷ்ட தேவனாகவும் இருக்கிறீர்கள், நான் இஷ்ட தேவன் என்ற போதை இருக்கிறதா? பக்தர்கள் கதறிக் கொண்டிருக்கிறார்கள், அதை நீங்கள் கேட்கிறீர்களா? ஹே! இஷ்ட தேவனே என்று அவர்கள் கதறுகிறார்கள், நீங்கள் அதைக் கேட்க மட்டும் தான் செய்கிறீர்களா, அவர்களுடைய கூக்குரலுக்கு பதில் தருவதில்லையா? எனவே பக்தர்களின் இஷ்ட தேவனே இப்பொழுது அவர்களுடைய கூக்குரலைக் கேளுங்கள், கேட்க மட்டும் செய்யாதீர்கள், அவர்களுக்கு பதிலும் கூறுங்கள் என்று பாப்தாதா கூறுகிறார். என்ன பதில் கொடுப்பீர்கள்? மாற்றம் ஆவதின் வாயுமண்டலத்தை உருவாக்குங்கள். உங்களுடைய பதில் அவர்களுக்குக் கிடைக்கவில்லை என்றால் அவர்களும் அலட்சியமானவர்களாக ஆகி விடுகிறார்கள். கதறுகிறார்கள் பிறகு அமைதியாகி விடுகிறார்கள்.

பிரம்மாபாபாவிற்கு ஒவ்வொரு காரியம் செய்வதில் இருந்த உற்சாகத்தைப் பார்த்திருக்கிறீர்கள். எப்படி தொடக்க காலத்தில் சாவி வேண்டும் என்ற ஊக்கம் இருந்தது. இப்பொழுது கூட பிரம்மாபாபா சிவபாபாவிடம் வீட்டுச் சாவியைக் (சொர்க்கம்) கொடுங்கள் என்று கூறுகிறார் ஆனால் உடன் செல்பவர்கள் தயாராக வேண்டும் இல்லையா! தனியாக என்ன செய்வார்? இப்பொழுது உடன் செல்ல வேண்டுமா? உடன் செல்ல வேண்டும் இல்லையா? எனவே ஒருவேளை தந்தை சாவி கொடுக்கிறார் என்றால், குழந்தைகள் எப்பொழுதும் தயாராக இருக்கிறார்களா என்று குழந்தைகளிடம் கேளுங்கள் என்று பிரம்மாபாபா கூறுகிறார். எவரெடியாக இருக்கிறீர்களா அல்லது ரெடியாக இருக்கிறீர்களா? ரெடியாக அல்ல, எவரெடியாக இருக்க வேண்டும். தியாகம் தபஸ்யா மற்றும் சேவை என்ற மூன்று பரீட்சைகளும் முடிந்ததா? பிரம்மாபாபா தான் அன்புக் கண்ணீர் வடிக்கிறேன் என்று புன்சிரிக்கிறார் மேலும் பிரம்மாபாபா அந்தக் கண்ணீர்த் துளிகளை முத்துக்குச் சமமாக இதயத்தில் நிரப்பவும் செய்கிறார், ஆனால் அனைவரும் எப்பொழுது எவரெடி ஆவார்கள் என்ற

எண்ணமும் ஓடுகிறது. தேதி கொடுக்க வேண்டும் நாங்களோ எவரெடி என்று நீங்கள் கூறுவீர்கள் ஆனால் உங்கள் துணைவர்களாக உங்களுடன் இருக்கிறார்களே அவர்களையும் ஆக்குங்கள் அல்லது அவர்களை விட்டு விட்டுச் சென்று விட்டார் என்று நீங்கள் கூறுவீர்கள் ஆனால் அவருக்கோ இந்தப் படைப்பை படைக்க வேண்டியதாக இருந்தது. வேகமாக வளர்ச்சி செய்வதின் பொறுப்பு இருந்தது. எனவே அனைவரும் எவரெடியாக இருக்கிறீர்களா, ஒருவர் அல்ல, அனைவரையும் உடன் அழைத்துச் செல்ல வேண்டும் இல்லையா? அல்லது தனியாகச் செல்வீர்களா? அனைவரும் எவரெடியாக இருக்கிறீர்களா அல்லது ஆகி விடுவீர்களா? பதில் கூறுங்கள். குறைந்தது 9-லட்சமோ உடன் செல்ல வேண்டும். இல்லையென்றால் எவர்கள் மீது ராஜ்யம் செய்வீர்கள்? தன் மேல் ராஜ்யம் செய்வீர்களா? எவரெடி ஆகுங்கள் மேலும் எவரெடி ஆக்குங்கள்! என்ற சுபபாவனை தான் பிரம்மாபாபாவிடம் குழந்தைகளுக்காக இருக்கிறது.

இன்று வதனத்தில் அனைத்து விசேஷ ஆதி ரத்தினங்களும், சேவையின் ஆதி ரத்தினங்களும் வெளிப்பட்டார்கள். நாங்களோ தயார் என்று அட்வான்ஸ் பார்ட்டி கூறுகிறது. எந்த விசயத்திற்காக தயாராக இருக்கிறார்கள்? பிரத்யக்ஷத்தின் முரசு கொட்டியது என்றால் நாங்கள் அனைவரும் பிரத்யக்ஷமாகி புது உலகப் படைப்பிற்கு பொறுப்பாளர் ஆவோம் என்று அவர்கள் கூறுகிறார்கள். நாங்களோ புது உலகைப் படைப்பவரே வாருங்கள் என்று வரவேற்கிறோம். இப்பொழுது அனைத்துக் காரியங்களும் உங்கள் மீது இருக்கிறது. வந்து விட்டார்.... வந்து விட்டார்... என்ற முரசு கொட்டுங்கள். முரசு கொட்டத் தெரியாதா? முரசு கொட்ட வேண்டும் இல்லையா? தேதியைக் கேட்டு வாருங்கள் என்று பிரம்மாபாபாவும் கூறுகிறார். தேதி இல்லாமல் காரியமும் நடப்பதில்லை என்று நீங்களும் கூறுகிறீர்கள் இல்லையா? எனவே இதற்கான தேதியை நிச்சயம் செய்யுங்கள். தேதியை முடிவு செய்ய முடியுமா? தந்தையோ நீங்களே நிச்சயம் செய்யுங்கள் இன்றே முடிவு செய்யுங்கள் என்று கூறுகிறார். மாநாட்டின் தேதியை முடிவு செய்தீர்கள், இதற்காகவும் மாநாடு நடத்துங்களேன். வெளி நாட்டினர் என்ன நினைக்கிறீர்கள், தேதியை நிச்சயம் செய்ய முடியுமா? தேதியை நிர்ணயம் செய்வீர்களா? ஆம் அல்லது இல்லை என்று கூறுங்கள். நல்லது -தாதி ஜானகியுடன் ஆலோசனை செய்து செய்யுங்கள். நல்லது.

பாரதம் மற்றும் வெளி நாடுகளின் நாலா புறங்களிலும் உள்ள, பாப்தாதாவின் மிக நெருங்கிய, மிக அன்பான மற்றும் விலகியிருக்கும், அனைத்துக் குழந்தைகளும் அன்பில் மூழ்கியிருந்து அன்பில் ஐக்கியமான சொரூபத்தில் அமர்ந்திருக்கிறார்கள் என்று பாப்தாதா பார்க்கிறார். கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் மேலும் சந்திப்பின் ஊஞ்சலில் ஆடிக் கொண்டிருக்கிறார்கள். தூரமாக இல்லை, ஆனால் கண்களின் எதிரில் கூட இல்லை, நிரம்பியிருக்கிறார்கள். அப்படி நேரெதிரில் சந்திப்பு செய்து கொண்டிருக்கும் மற்றும் அவ்யக்த ரூபத்தில் அன்பில் ஐக்கியமாகியிருக்கும் குழந்தைகளுக்கு, எப்பொழுதும் தந்தைக்குச் சமமாக தியாகம், தபஸ்யா மற்றும் சேவையின் நிரூபணம் கொடுக்கும் உண்மையான குழந்தைகளுக்கு, எப்பொழுதும் ஒருமுகப்பட்ட சக்தி மூலம் உலகை மாற்றம் செய்யக் கூடிய உலகை மாற்று குழந்தைகளுக்கு, எப்பொழுதும் தந்தைக்குச் சமமாக தீவிர முயற்சி மூலமாக பறக்கும் டபுள் லைட் குழந்தைகளுக்கு, பாப்தாதாவின் மிகுந்த அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

வரதானம்: தன்னுடைய அன்பின் சீதள சொரூபம் மூலமாக கொடூரமான ஜுவாலா ரூபத்தையும் பரிவர்த்தனை செய்யும் அன்பானவர் ஆகுக!

அன்பின் பிரதிபலனில் வரமளிக்கும் தந்தை குழந்தைகளுக்கு எப்பொழுதும் ஒவ்வொரு நேரமும், ஒவ்வொரு ஆத்மாவிடமிருந்து, ஒவ்வொரு சூழ்நிலையிலும் அன்பானவர் ஆகுக. ஒருபொழுதும் தன்னுடைய அன்பு சொரூபத்தை அன்பின் செயல்களை அன்பான விவகாரத்தை அன்பான உறவு தொடர்பை விடக் கூடாது, மறக்கக் கூடாது. ஏதோ நபரானாலும் இயற்கையானாலும், மாயா எப்படிப்பட்ட கொடூரமான ரூபத்தில் வந்தாலும், ஜுவாலா சொரூபத்தை தாரணை செய்து எதிரில் வந்தாலும், அதை எப்பொழுதும் அன்பின் சீதளம் (குளிர்ச்சி மூலம் பரிவர்த்தனை (மாற்றம்) செய்து கொண்டிருங்கள். அன்பான பார்வை, உள் உணர்வு மற்றும் காரியம் மூலமாக அன்பு நிறைந்த உலகைப் படைக்க வேண்டும்.

சுலோகன்: கடினங்களைக் கடந்து செல்வதினால் பலம் வருகிறது, எனவே அவற்றைக் கண்டு பயப்படாதீர்கள்!

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 15.02.2000 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# மனதைத் தூய்மையாக, புத்தியைத் தெளிவாக வைத்து 'டபுள் லைட்' பரிஷ்தா ஸ்திதியினுடைய அனுபவம் செய்யுங்கள்!

இன்று பாப்தாதா தனது சுய ராஜ்ய அதிகாரிக் குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார். சுய ராஜ்யம் பிராமண வாழ்க்கையின் பிறப்புரிமை. பாப்தாதா ஒவ்வொரு பிராமணரையும் சுய ராஜ்யத்தினுடைய சிம்மாசனதாரி ஆக்கி உள்ளார். சுய ராஜ்யத்தின் அதிகாரம் பிறந்ததிலிருந்தே ஒவ்வொரு பிராமண ஆத்மாவிற்கும் கிடைத்து விடுகிறது. எந்தளவு சுய ராஜ்ய ஸ்திதியில் இருக்கிறீர்களோ அந்தளவே தன்னிடம் லைட், மைட்'ன் அனுபவம் செய்வீர்கள்.

பாப்தாதா இன்று ஒவ்வொரு குழந்தையுடைய நெற்றியின் மீது ஒளியின் கிரீடத்தைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார். எந்தளவு தன்னிடம் சக்தியைத் தாரணை செய்துள்ளீர்களோ, அந்தளவே நம்பர்வார் ஒளியின் கிரீடம் ஜொலிக்கின்றது. பாப்தாதா எல்லாக் குழந்தைகளுக்கும் எல்லா சக்திகளையும் அதிகாரத்தில் தந்துள்ளார். ஒவ்வொருவருமே மாஸ்டர் சர்வ சக்திவான் ஆனால் தாரணை செய்வதில் நம்பர்வார் ஆகி உள்ளீர்கள். எல்லா சக்திகளின் ஞானமும் அனைவரிடமும் உள்ளது, தாரணையும் உள்ளது ஆனால் ஒரு விஷயத்தில் வித்தியாசம் ஆகி விடுகிறது என பாப்தாதா பார்த்தார். எந்த ஒரு பிராமண ஆத்மாவிடம் கேட்டாலும் -ஒவ்வொரு சக்தியின் வர்ணனை கூட மிக நன்றாகச் செய்வார்கள், பிராப்தியின் வர்ணனை கூட மிக நன்றாகச் செய்வார்கள் ஆனால் வித்தியாசம் என்னவெனில், எந்த நேரத்தில் எந்த சக்தி தேவையோ, அந்த நேரத்தில் அந்த சக்தியைக் காரியத்தில் ஈடுபடுத்த முடியவில்லை. இந்த சக்தியின் அவசியம் இருந்தது என சிறிது நேரத்திற்குப் பின் உணர்கின்றனர். பாப்தாதா குழந்தைகளுக்குக் கூறுகின்றார் -எந்த ஒரு பிரச்சனையும் வந்தால்

உங்கள் முன்னால் அதனால் நிற்க முடியாத அளவிற்கு சர்வ சக்திகளின் ஆஸ்தி அவ்வளவு சக்திசாலியானது; பிரச்சனையிலிருந்து விடுபட்டவர் ஆக முடியும். சர்வ சக்திகளை வெளிப்பட்ட ரூபத்தில் நினைவில் மட்டும் வையுங்கள் மற்றும் தக்க சமயத்தில் காரியத்தில் ஈடுபடுத்துங்கள். ஆதலால் தனது புத்தியின் தொடர்பை தெளிவாக வையுங்கள். எந்தளவு புத்தியின் தொடர்பு தெளிவாக மற்றும் சுத்தமாக உள்ளதோ, அந்தளவு தீர்மானிக்கும் சக்தி கூர்மையாவதால் எந்த சமயம் எந்த சக்தி தேவையோ அதை காரியத்தில் ஈடுபடுத்த முடியும், ஏனென்றால் நேரத்திற்கு ஏற்றவாறு பாப்தாதா ஒவ்வொரு குழந்தையும் தடைகளிலிருந்து விடுபட்டவராக, பிரச்சனைகளிலிருந்து விடுபட்டவராக, கடின முயற்சியிலிருந்து விடுபட்டவராக பார்க்க விரும்புகிறார். எல்லோருமே ஆகத்தான் வேண்டும் ஆனால் நீண்ட காலத்தினுடைய இந்த பயிற்சி தேவை. பிரம்மாபாபாவுடைய விசேஷ சம்ஸ்காரத்தைப் பார்த்தீர்கள்தானே -உடனடி தானம் மஹா புண்ணியம்! வாழ்க்கையின் ஆரம்பத்திலிருந்தே ஒவ்வொரு காரியத்திலும் உடனடியாக தானமும், உடனடியாக காரியமும் செய்தார். பிரம்மாதந்தையின் விசேஷம் -தீர்மானிக்கும் சக்தி சதா துரிதமாக இருந்தது ஆதலால் பாப்தாதா முடிவையும் பார்த்தார். அனைவரையும் கூடவே அழைத்துப் போக வேண்டும். பாப்தாதாவுடன் கூட செல்பவர்கள்தானே அல்லது பின்னால் வருபவர்களா? எப்போது கூடவே செல்ல வேண்டும் என்றால் பிரம்மாதந்தையைப் பின்பற்றுங்கள். கர்மத்தில் பிரம்மாதந்தையைப் பின்பற்றுங்கள் மற்றும் ஸ்திதியில் நிராகாரி சிவதந்தையைப் பின்பற்றுங்கள்! பின்பற்றத் தெரியும்தானே?

இரட்டை வெளிநாட்டிருக்கு பின்பற்றத் தெரியுமா? பின்பற்றுவதோ மிக எளிதுதானே. எப்போது பின்பற்றத்தான் வேண்டும் என்றால் ஏன், என்ன, எப்படி,... இவை முடிந்து விடும். மற்றும் எல்லோருக்கும் அனுபவமும் உள்ளது, வீண் சங்கல்பத்திற்கான காரணம் இந்த ஏன், என்ன, எப்படி,... இவைதான் ஆதாரமாகின்றன. தந்தையைப் பின்பற்றுவதால் இவை அனைத்தும் முடிவடைந்து விடுகின்றன. எப்படி இல்லை -இப்படி! இப்படி போ, இப்படி செய் என புத்தி சீக்கிரமாக முடிவு செய்கிறது. எனில் பாப்தாதா இன்று விசேஷமாக எல்லாக் குழந்தைகளுக்கும், முதல் முறையாக வந்தவராகவும் இருக்கலாம், பழையவராகவும்

இருக்கலாம், இந்த சமிக்ஞையை அளிக்கின்றார் தனது மனதை தூய்மைமையாக வைத்திருங்கள்! நிறைய பேருடைய மனதில் இப்பவும் கூட வீண் மற்றும் எதிர்மறையின் கறை இருக்கிறது; இதனால் முயற்சியில் சிரேஷ்ட வேகத்தில், தீவிர வேகத்தில் தடை வருகிறது. பாப்தாதா சதா ஸ்ரீமத் தருகிறார், மனதில் சதா ஒவ்வொரு ஆத்மா மீதும் சுப பாவனை, சுப விருப்பம் வையுங்கள் -இதுதான் தூய மனம்! அபகாரம் செய்பவருக்கும் கூட உபகாரம் செய்யும் உள்ளுணர்வு வையுங்கள் -இதுதான் தூய மனம்! தன் மீதோ அல்லது பிறர் மீதோ வீண் சங்கல்பம் வருவது என்பது தூய மனம் இல்லை. எனில் தேவை தூய மனம் மற்றும் சுத்தமான, தெளிவான புத்தி! தீர்மானியுங்கள், தன்னைத் தானே கவனத்துடன் பாருங்கள், மேலோட்டமாக அல்ல, சரியாக இருக்கிறேன், சரியாக இருக்கிறேன். இல்லை, சிந்தித்துப் பாருங்கள் -மனம், புத்தி தெளிவாக உள்ளதா, சிரேஷ்டமாக உள்ளதா? அப்போது டபுள் லைட் ஸ்திதி உருவாக முடியும். தந்தைக்குச் சமமான ஸ்திதி உருவாக்குவதற்கு இதுவே சகஜ சாதனமாகும் மற்றும் இந்தப் பயிற்சி இறுதியில் அல்ல, நீண்ட காலம் தேவை. எனில் சோதனை செய்ய வருகிறதா? தன்னை சோதனை செய்யுங்கள், மற்றவரை அல்ல. பாப்தாதா முன்பும் சிரிப்பூட்டுகிற விஷயத்தைக் கூறியுள்ளார், பல குழந்தைகளுக்கு தூரத்துப் பார்வை மிகக் கூர்மையாக உள்ளது மற்றும் கிட்டப் பார்வை பலகீனமாக உள்ளது. ஆதலால் பிறரைத் தீர்மானிப்பதில் மிகவும் புத்திசாலியாக இருக்கிறார்கள். தன்னை சோதனை செய்வதில் பலகீனமாகக் கூடாது.

பாப்தாதா முன்பும் கூறியிருந்தார், எப்படி இது இப்போது உறுதியாக ஆகி விட்டது, நான் பிரம்மாகுமாரி/ பிரம்மாகுமார் என்பது; போகும்போதும், வரும்போதும், நினைக்கும்போதும் நாம் பிரம்மாகுமாரி, பிரம்மாகுமார் பிராமண ஆத்மா ஆவேன்! இப்படி இந்த இயல்பான நினைவை இன்னும் இயல்பானதாக்குங்கள் -நான் பரிஷ்தா ஆவேன்! அமிர்தவேளை எழுந்திருக்கும் போதே இதை நான் பரிஷ்தா, பரமாத்ம ஸ்ரீமத்படி கீழே இந்த சாகார உடலில் வந்துள்ளேன், அனைவருக்கும் செய்தி அளிப்பதற்காக அல்லது சிரேஷ்ட கர்மம் செய்வதற்காக என்பதை உறுதியானதாக ஆக்குங்கள். காரியம் முடிந்தது மற்றும் தனது சாந்தியின் ஸ்திதியில் நிலைத்து விடுங்கள். உயர்ந்த ஸ்திதியில் சென்று விடுங்கள். ஒருவர் மற்றவரை பரிஷ்தா

ரூபத்தில் பாருங்கள். உங்களுடைய உள்ளுணர்வு மற்றவர்களையும் மெல்லமெல்ல பரிஷ்தா ஆக்கி விடும். உங்களுடைய உள்ளுணர்வு மற்றவர் மீதும் தாக்கத்தை ஏற்படுத்தும். நாம் பரிஷ்தாக்கள் என்பது உறுதியாக உள்ளதா? பரிஷ்தா பவ! என்ற வரதானம் அனைவருக்கும் கிடைத்துள்ளதுதானே? ஒரு நொடியில், நிமிடம் அல்ல, 10-நொடியில் இல்லை, ஒரு நொடியில் நினைத்தோம் மற்றும் ஆகினோம், இத்தகைய பயிற்சி உள்ளதா? நல்லது, யாரால் ஒரு நொடியில் ஆக முடியுமோ, இரண்டு நொடியில் இல்லை, ஒரு நொடியில் ஆக முடியுமோ, அவர்கள் ஒரு கையால் கைத்தட்டுங்கள். ஆக முடியுமா? அப்படியே கைத்தூக்கக் கூடாது. இரட்டை வெளிநாட்டினர் கை உயர்த்தவில்லையே, நேரம் எடுத்துக் கொள்கிறதா, என்ன? நல்லது, யார் கொஞ்சம் நேரம் தேவை என நினைப்பவர்கள், ஒரு நொடியில் இல்லை, கொஞ்ச நேரம் எடுத்துக் கொள்கிறது என்பவர்கள் கை உயர்த்துங்கள். (அதிகமானோர் கை உயர்த்தினர்). நல்லது ஆனால் இறுதி நேரத்துப் பேப்பர் ஒரு நொடிக்கானது, அப்போது என்ன செய்வீர்கள்? அசானக் வர வேண்டும் மற்றும் ஒரு நொடியில் வர வேண்டும். கை தூக்கியதால் நஷ்டம் ஏதும் இல்லை, உணர்ந்தீர்களே இதுவும் மிக நல்லது, ஆனால் இந்தப் பயிற்சியை செய்தாக வேண்டும். செய்யத்தான் வேண்டும் அல்ல, செய்ய வேண்டும். இந்த பயிற்சி மிக மிக மிக அவசியமானது. இருந்தாலும் பாப்தாதா இன்னும் கொஞ்சம் நேரம் தருகின்றார். எத்தனை நேரம் தேவை? 2,000'ம் வருஷம் வரை வேண்டுமா! 21'ம் நூற்றாண்டில் நீங்கள் அனைவரும் பந்தயம் கட்டியுள்ளீர்கள், பறைசாற்றுவோம் என, நினைவிருக்கிறதா? பந்தயம் கட்டியுள்ளீர்கள் -பொன் உலகம் வந்து விடுமா அல்லது சூழ்நிலை உருவாக்குவீர்களா, பந்தயம் கட்டியுள்ளீர்கள்தானே! என்றால் அதுவரைக்கும் நிறைய நேரம் இருக்கிறது. எந்தளவு தன் மீது கவனம் வைக்க முடியுமோ, வைக்க முடியுமோ என்பதும் இல்லை, வைத்தாக வேண்டும். எப்படி தேக உணர்வில் வர எவ்வளவு நேரமாகிறது, இரண்டு நொடிகள்? எப்போது விரும்பாவிடினும் கூட ஆனால் தேக உணர்வில் வந்து விடுகிறீர்கள் எனில் எவ்வளவு நேரமாகிறது? ஒரு நொடியா அல்லது அதை விடக் குறைவாகவா? தெரிய வருவதில்லை தேக உணர்வில் வந்து விட்டோம் என்பது. அது போல் இந்த பயிற்சி செய்யுங்கள் -என்ன வேண்டுமானாலும் ஆகட்டும், என்ன வேண்டுமானாலும் செய்து கொண்டிருங்கள் ஆனால் இதுவும்கூடத் தெரியக்கூடாது, நான்

ஆத்ம-உணர்வில், சக்திசாலியான ஸ்திதியில் இயல்பானவனாகி விட்டேன் என்பது. பரிஷ்தா ஸ்திதியும் இயல்பானதாகி விட வேண்டும். எந்தளவு தனது இயல்பை பரிஷ்தா போல் ஆக்குவீர்களோ, அப்போது இயற்கை ஸ்திதியை இயல்பானதாக்கி விடும். எனில் பாப்தாதா எவ்வளவு காலம் கழித்துக் கேட்கலாம்? எவ்வளவு நேரம் வேண்டும்? ஜெயந்தி (சகோதரி) கூறுங்கள் -எவ்வளவு நேரம் வேண்டும்? வெளிநாட்டினர் சார்பாக நீங்கள் கூறுங்கள் -எவ்வளவு நேரம் வெளிநாட்டினருக்குத் தேவை. ஜனக் (தாதி ஜானகி) கூறுங்கள். (தாதிஜீ கூறினார்கள், இன்றே ஆக வேண்டும், நாளை இல்லை) ஒருவேளை இன்றே ஆக வேண்டுமென்றால் இப்போது எல்லோரும் பரிஷ்தா ஆகி விட்டீர்களா? ஆகி விடுவோம் அல்ல. ஒருவேளை ஆகி விடுவோம் என்றால் எது வரை? பாப்தாதா இன்று பிரம்மாதந்தையுடைய எந்த சம்ஸ்காரம் பற்றிக் கூறினார்? -உடனடி தானம் மகா புண்ணியம்! பாப்தாவிற்கு ஒவ்வொரு குழந்தை மீதும் அன்பு உள்ளது, எனில் இவ்வாறு நினைக்கிறார் ஒரு குழந்தை கூட குறைவானராகக் கூடாது. நம்பர்வார் ஏன்? எல்லோருமே நம்பர்-1 ஆனார்கள் என்றால் எவ்வளவு நன்றாக இருக்கும். நல்லது. இன்று நிறைய குழுக்கள் வந்துள்ளன.

குழுக்களுடன் சந்திப்பு -முக்கிய சமாசாரம்: நிர்வாகக்குழு, மதுபன் வாசிகள், மீடியா துறை, ஸ்பார்க் துறை, சமூக துறை, அரசியல் துறை, மத சேவை துறை, ரத யாத்திரைப் பிரிவு, வெளிநாட்டிலுள்ள சர்வதேச சேவைக் குழு என பல துறையினர் விசேஷமாக வந்துள்ளனர். எல்லாத் துறையினருக்கும் பாப்தாதா கூறுகின்றார், எப்படி இப்போது மதத்தலைவர்கள் வந்தனர், நம்பர்-1'காரர்கள் அல்ல, இருப்பினும் ஒரே மேடையில் எல்லோரும் சேர்ந்தனர் மற்றும் அனைவரது வாயிலிருந்தும் வெளி வந்தது -நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து ஆத்மீக சக்தியைப் பரப்ப வேண்டும் என்பது. அப்படி ஒவ்வொரு துறையினரும், யாரெல்லாம் வந்துள்ளீர்களோ, அந்தந்தத் துறையைச் சேர்ந்தவர்கள் நமது துறையினருக்கு செய்தி எது வரைச் சேர்ந்துள்ளது? என்ற இந்த ரிசல்ட் காட்ட வேண்டும்.

இரண்டாவது -ஆத்மீகத்தின் அவசியம் மற்றும் நாமும் சகயோகி ஆக வேண்டும் என்ற இந்த ரிசல்ட். தினசரி வரும் மாணவன் ஆக மாட்டார்கள் ஆனால் சகயோகி ஆக முடியும். எனில் இது வரை

ஒவ்வொரு துறையினரும் என்ன சேவை செய்தீர்களோ, எப்படி இப்போது மதத்தலைவர்களை அழைத்தீர்கள், அது போல ஒவ்வொரு தேசத்திலும் ஒவ்வொரு துறையினருக்கும் செய்யுங்கள். முதலில் இந்தியாவில் செய்யுங்கள், பின்பு சர்வ தேசங்களிலும் செய்யுங்கள், ஒவ்வொரு துறையிலிருக்கும் வெவ்வெறு வகையினரும் ஒன்று கூடட்டும் மற்றும் நாமும் கூட சகயோகி ஆக வேண்டும் என்ற இந்த அனுபவம் ஆகட்டும். இத்தகைய ஒவ்வொரு துறையின் முடிவு எதுவரை ஆகியுள்ளது? மற்றும் இனி மேலுக்கான திட்டம் என்ன? ஏனெனில் ஒரு துறையில், ஒவ்வொருவரும் ஒருவேளை லட்சியம் வைத்து, அருகில் கொண்டு வந்தால், பின் எல்லாத் துறையிலும் யாரெல்லாம் சகயோகியாக அருகில் வருகிறார்களோ, அவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து, ஒரு பெரிய குழுவாக ஆகி விடும். மற்றும் ஒருவர் மற்றவரைப் பார்த்து ஊக்கம் உற்சாகத்திலும் வருவார்கள். இப்போது ஆங்காங்கே சிதறிக் கிடக்கின்றனர், ஒரு இடத்தில் சிலர், இன்னொரு இடத்தில் சிலர் என. நல்ல நல்லவர்களாகவும் உள்ளனர் ஆனால் முதலில் குழுவை ஒன்று சேர்த்துங்கள், பின்பு அனைவரும் ஒன்று சேர்ந்த குழுவை மதுபனில் செய்வோம். எனில் இப்படி யாராவது திட்டம் வகுத்துள்ளீர்களா? கண்டிப்பாக செய்திருப்பீர்கள். இவ்வாறு பல பேர் சிதறிக் கிடக்கின்றனர் என்று வெளிநாட்டினருக்கும் செய்தி அனுப்பியிருக்கிறீர்கள்தானே. பாரதத்தில் பார்த்தாலும்கூட நல்ல நல்ல சகயோகி ஆத்மாக்கள் ஒவ்வொரு இடத்திலிருந்தும் வெளி வந்துள்ளனர் ஆனால் குப்தமாக இருந்து விடுகின்றனர். அவர்களைச் சந்தித்து, ஏதாவது சிறப்பு நிகழ்ச்சி ஏற்பாடு செய்து, அனுபவத்தின் கொடுக்கல்-வாங்கல் செய்யுங்கள் அதனால் வித்தியாசம் தெரிய வரும், அருகில் வந்து விடுவார்கள். ஒரு துறையில் 5-பேர் இருப்பார்கள், இன்னொன்றில் 8-இருக்கலாம், இன்னொன்றில் 20-30 கூட இருக்கலாம். குழுவில் வருவதால் முன்னேறி விடுவார்கள். ஊக்கம் உல்லாசம் அதிகமாகும். எனில் இது வரை எந்தெந்தத் துறையினருடைய சேவை நடந்ததோ, அவற்றின் முடிவுகள் வெளி வந்திருக்க வேண்டுமே! கேட்டீர்களா, எல்லாத் துறையினரும் கேட்டுக் கொண்டுதானே இருக்கிறீர்கள். எல்லாத் துறையினரும் இன்று விசேஷமாக வந்தவர்கள் அனைவரும் கை உயர்த்துங்கள். அதிகம் உள்ளனர். எனில் இப்போது எத்தனை பேர், யார்-யார், எத்தனை சதவிகிதம் சமீப

சகயோகிகள்? என்ற இந்த முடிவைத் தர வேண்டும். பின்பு அவர்களுக்காக மனங்கவரும் நிகழ்ச்சி ஒன்று செய்வோம். சரிதானா!

இரட்டை வெளிநாட்டினர்: மற்றபடி இரட்டை வெளிநாட்டினர், மீட்டிங்'காரர்கள், குழுவில் வந்தவர்கள், என அனைவருக்கும் பாப்தாதா மிக்க சிநேகம் நிறைந்த வாழ்த்துக்களை அளிக்கின்றார். நன்றாக தைரியம் வைக்கிறீர்கள். பாப்தாதா சேவையின் ஊக்கம் உற்சாகம் மற்றும் தைரியத்தின் முடிவை நன்றாகப் பார்த்தார். மற்றபடி ஒன்று செய்ய வேண்டும் -சேவை மற்றும் சுய முன்னேற்றத்தின் சமநிலை! சேவை மிக நன்றாகவே நடந்து கொண்டிருக்கிறது மற்றும் சேவை தான் தடையற்றவராக ஆக்கியுள்ளது. எனில் எல்லா இரட்டை வெளிநாட்டினருக்கும் பாப்தாதா எப்போதுமே அன்பு நினைவுகளை அளிக்கின்றார் மற்றும் சதா அன்பு நினைவுகள் கூடவே இருக்கும். நல்லது.

சேவை வாய்ப்பு -மகாராஷ்ட்டிரா: நன்றாக உள்ளது, பாதி ஹால் மகாராஷ்ட்டிரா தான். மகாராஷ்ட்டிராவில் சேவை நன்றாக வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கிறது; எனில் மகாராஷ்ட்டிராவால் 9-லட்சம் சீக்கிரம் உருவாக்க முடியும். அப்படித்தானே! 9-லட்சம் உருவாக்குவதில் நம்பர்-1 எடுப்பீர்கள்தானே. நன்றாக உள்ளது. உங்கள் எல்லோருக்குமே குஷி ஏற்படுகிறதுதானே. ஒருவேளை உங்கள் பரிவாரத்தில் வளர்ச்சி ஏற்பட்டது எனில் குஷி அடைவீர்கள்தானே. எனில் மகாராஷ்ட்டிரா வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கிறது மற்றும் இது போல் எல்லா ஜோன்களும் வளர்ச்சி அடைந்து, சீக்கிரமாக சம்பன்னம், சம்பூர்ணமாகி தந்தையுடன் கூடவே செல்ல முடியுமா. கூடவே செல்ல வேண்டும், இதை மறந்து விடக்கூடாது. பாப்தாதா முன்பேயும் கூறியிருந்தார், அன்பினால் செல்லவில்லை என்றால் வலுக்கட்டாயமாக அழைத்துச் செல்வோம். கூடவே வரவில்லை என்றால் கடைசியிலும்கூட கூட்டிக்கொண்டு செல்வோம் ஆனால் மகிழ்ச்சி இருக்காது. நல்லது.

நாலாபுறமும் உள்ள உள்நாடு வெளிநாட்டில் சாகார ரூபத்தில் அல்லது சூட்சும ரூபத்தில் சந்தித்துக் கொண்டிருக்கும் எல்லா சுய ராஜ்ய அதிகாரி ஆத்மாக்களுக்கு, சதா இந்த சிரேஷ்ட அதிகாரத்தை தனது முகம் மற்றும் நடத்தை மூலம் பிரத்யக்ஷம் செய்யக்கூடிய விசேஷ

# 2000 அவ்யக்த முரளி

ஆத்மாக்களுக்கு, சதா பாப்தாதாவை ஒவ்வொரு அடியிலும் பின்பற்றக் கூடிய, சதா மனதைத் தூய்மையாக மற்றும் புத்தியைத் தெளிவாக வைத்திருக்கக்கூடிய அத்தகைய தானாகவே தீவிர முயற்சி செய்யும் ஆத்மாக்களுக்கு, சதா கூடவே இருக்கக்கூடிய மற்றும் கூடவே செல்லக்கூடிய டபுள் லைட் குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே!

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵
✵✵✵✵✵✵✵✵

## 03.03.2000 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பிறந்த நாளின் விசேஷ பரிசு -சுபமான பாவனை மற்றும் அன்பு பாவனையை எமர்ஜ் (வெளிக்கொணர்ந்து) கோபம் என்னும் மகா எதிரியின் மீது வெற்றி அடையுங்கள்! (சிவ ஜெயந்தி)

இன்று பாப்தாதா தனது பிறவி துணையாளர்களுக்கு, கூடவே சேவையில் துணையானவர்களைக் கண்டு புன்சிரிக்கிறார். இன்று உங்கள் அனைவருக்கும் பாப்தாதாவின் அலௌகீக பிறப்பு, கூடவே பிறப்பின் துணையாளர்களின் பிறந்த தினத்தின் மகிழ்ச்சி, ஏன்? இப்படிப்பட்ட நியாரா, மிகவும் அன்பான அலௌகீக பிறவி வேறு எவருக்கும் நிகழ முடியாது. இவ்வாறு ஒருபோதும் கேட்டிருக்க முடியாது, தந்தையின் பிறந்த நாளும் அது! மேலும் குழந்தைகளின் பிறந்த நாளும் அதுவே! இந்த நிôயரா மற்றும் பியாரா அலௌகீக வைரத்திற்குச் சமமான பிறந்த நாளை இன்று நீங்கள் கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள். இந்த அலௌகீக பிறவி அந்தளவு விசித்திரமானது, அதனை பகவானாகிய தந்தை தனது குழந்தைகளின் பிறந்த நாளைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறார் என்னும் நியாரா மற்றம் பியாரா நிலை கூடவே நினைவிலிருக்கிறது. பரமாத்மா குழந்தைகளின், சிரேஷ்ட ஆத்மாக்களின் பிறந்த நாளைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறார். உலகில் ஒரு பேச்சுக்காக கூறுகையில், நம்மைப் படைப்பவர் பகவான், பரமாத்மா! ஆனால் அவரை அறிவதுமில்லை, அவரது நினைவில் செல்வதுமில்லை ஆனால் நீங்களனைவரும் அனுபவத்துடன் கூறுகிறீர்கள். நாம் பரமாத்ம வம்சத்தினர், பரமாத்மா நமது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார், நாம் பரமாத்மாவின் பிறந்த நாளைக் கொண்டாடுகிறோம்.

## 2000 அவ்யக்த முரளி

இன்று அனைத்து புறங்களிலிருந்தும் ஏன் இங்கே வந்து சேர்ந்துள்ளீர்கள்? வாழ்த்துக்களைத் தெரிவிக்க மற்றும் வாழ்த்துக்களைப் பெறுவதற்காக ஆக, பாப்தாதா விசேடங்களை தன்னுடன் பிறந்தவர்களுக்கு வாழ்த்துக் களைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார். சேவையில் உடன் இருப்பவர்களையும் வாழ்த்துகிறார். வாழ்த்துக்ளின் கூடவே பரம் சினேகத்தின் முத்து, வைர நகைகளின் மழையைப் பொழிகிறார். அன்பின் முத்துக்களைப் பார்த்துள்ளீர்கள், இல்லையா! அன்பின் முத்துக்களை அறிவீர்கள் தானே! பூக்களின் மழை, கனக (தங்கம்) மழை என்னவோ அனைவரும் பொழிகின்றனர் ஆனால் பாப்தாதா உங்கள் அனைவர் மீதும் பரம அன்பு, அலௌகீக சினேகத்தின் முத்துக்களின் மழையைப் பொழிகிறார். ஒரு மடங்கல்ல, கோடி, கோடி, பல கோடி மடங்கு உள்ளப்பூர்வமாக வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டிருக்கின்றனர். நீங்கள் அனைவரும் கூட உள்ளப் பூர்வமாக வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டிருக்கின்றீர்கள். அவையும் பாப்தாதாவிடம் வந்து சேர்ந்து கொண்டிருக்கின்றன. ஆக இன்று கொண்டாட வேண்டிய, வாழ்த்துக்களைத் தெரிவிக்க வேண்டிய நாள். கொண்டாடும் போது என்ன செய்கிறீர்கள்? பேண்ட் வாசிக்கின்றீர்கள். ஆக பாப்தாதா அனைத்து குழந்தை களின் மனதின் குஷியின் பேண்ட், வாத்தியம் மற்றும் பாடல்களைக் கேட்டுக் கொண்டிருக்கின்றனர். பக்தர்கள் அழைத்துக் கொண்டிருக்கிறார்கள், குழந்தைகள் நீங்கள் பாபாவின் அன்பிலே மூழ்கி விடுகிறீர்கள். அவ்வாறு மூழ்கி விடுவது, தெரியும் தானே! இந்த மாதிரி மூழ்கி விடுவதுவே அவரைப் போன்று ஆக்குகிறது.

பாப்தாதா குழந்தைகளை தன்னை விட்டு பிரிக்க முடியாது, குழந்தைகளும் தனியாகி விட விரும்புவதில்லை ஆனால் எப்போதாவது மாயாவின் விளையாட்டால் கொஞ்சம் ஒதுங்கி விடுகின்றனர். பாப்தாதா, குழந்தைகளின் காவலன் நான் என்கிறார், ஆனால், குழந்தைகள் குறும்பு செய்வார் இல்லையா! மாயை அவ்வாறு சேட்டைக்காரர்களாக ஆக்கி விடுகிறது. உண்மையில் அவ்வாறு அவர்கள் இல்லை. மாயை ஆக்கி விடுகிறது! பாபாவின் காவலிலிருந்து நீக்கி விடுகிறது. பிறகும் கூட பாப்தாதா பாதுகாவலாகி அருகாமையில் கொண்டு விடுகிறார். பாப்தாதா அனைத்து குழந்தைகளிடமும் கேட்கிறார் : ஒவ்வொருவரும் வாழ்க்கையில் என்ன விரும்புகிறீர்கள்?

வெளிநாட்டினர் இரண்டு விசயங்களை விரும்புகின்றனர். இரட்டை வெளிநாட்டினரின் மிக விருப்பமான இரண்டு வார்த்தைகள் என்ன? (கம்ப்ளைண்ட் மற்றும் கம்பைண்டு) இவ்விரண்டும் அவர்களுக்குப் பிடிக்கும். அவ்வாறு விருப்பம் எனில், ஒரு கையை உயர்த்துங்கள், பாரதவாசிகளுக்குப் பிடித்தமா? வாழ்க்கைத் துணையும் (கம்ப்பேனியன்) தேவை. கூட்டுத் துணையும் தேவை. கூட்டுத் துணையும் (கம்பெனி) அவசியம். கம்பெனி இல்லாமலும் இருக்க முடியாது, கம்பேனியன் இல்லாமலும் இருக்க முடியாது. உங்கள் அனைவருக்கும் என்ன கிடைத்துள்ளது? வாழ்க்கைத் துணை (கம்பேனியன்) கிடைத்துள்ளாரா? ஆம், அல்லது இல்லை கூறுங்கள். (ஆம்) கம்பெனி கிடைத்துள்ளது? (ஆமாம்) முழு கல்பத்திலும் இம்மாதிரியான வாழ்க்கைத் துணை, கூட்டுத் துணை (கம்பெனி) கிடைத்துள்ளதா? ஒருபோதும் நம்மை விட்டுப் பிரியாத வாழ்க்கைத் துணைவன், எவ்வளவு தான் குறும்பு செய்தாலும் பிறகும் அவர் உதவி புரிபவராகவே ஆகிறார்! உங்களது உள்ளத்தின் பிராப்திகளை, அந்த அனைத்து பிராப்திகளையும் பூர்த்தி செய்கிறார், ஏதேனும் கிடைக்காது உள்ளதா? அனைவரது உள்ளமும் கூறுகிறதா? அல்லது ஒரு மரியாதைக்காக ஆமாம் என்று கூறுகிறீர்களா? எதை அடைய வேண்டுமோ அதை அடைந்து விட்டோம் என பாடவும் செய்கிறீர்கள். அல்லது இனிமேல் தான் அடைய வேண்டுமா? அல்லது அடைந்து விட்டீர்களா? இப்போது அடைவதற்கு ஏதுமில்லை. அல்லது இன்னும் ஏதேனும் சிறு சிறு ஆசைகள் இன்னும் பாக்கி உள்ளனவா? பாப்தாதா கூறுகிறார் -இன்னும் பாக்கி உள்ளது. (பாபாவை வெளிப்படுத்தும் ஆசை பாக்கி உள்ளது) இதுவோ பாபாவின் ஆசை, அனைத்து குழந்தைகளுக்கும் தெரிந்து விட வேண்டும். பாபா வந்துள்ளார், ஆனால் சிலருக்கு தெரியாமலிருந்து விட்டது..... பாப்தாதாவின் விசேஷ ஆசையாவது, அனைவருக்கும் குறைந்த பட்சம் நமது நிரந்தர தந்தை வந்து விட்டார் என்பது தெரியவாவது செய்யட்டும்! ஆனால், குழந்தைகளின் எல்லைக்குட்பட்ட அன்பின் ஆசைகள் முழுமையாகி விடட்டும். ஒவ்வொருவரும் விரும்புகின்றனர், மேடையில் வர வேண்டும், இந்த ஆசை உள்ளதா? (இப்போதோ பாபாவே அனைவரின் அருகே (மேடையிலிருந்து கீழே) இறங்கி விடுகிறார்) இந்த ஆசையும் பூர்த்தியாகி விட்டது. திருப்தியான ஆத்மாக்கள், வாழ்த்துக்கள்! ஏனெனில், அனைத்து குழந்தைகளும் புத்திசாலிகள். எப்படி சமயமோ

அப்படியே சொரூபமாக ஆகியே தீர வேண்டும். எனவே பாப்தாதாவும் நாடகத்தின் பந்தனத்தில் இருக்கிறார் இல்லையா! ஆக அனைத்து குழந்தைகளும் ஒவ்வொரு நேரத்தின் அனுசாரமும் திருப்தியாக இருக்கின்றனர், மேலும் திருப்தியின் மணியாகி ஜொலித்துக் கொண்டிருக்கின்றனர். ஏன்? நீங்களே கூறுகிறீர்கள். எதை அடைய வேண்டுமோ அதனை அடைந்து விட்டோம் இது பிரம்மாபாபாவின் மிகவும் அனுபவப் பூர்வ செயல் ஆகும். ஆக, பிரம்மாபாபாவின் சொல் எதுவோ அதுவே அனைத்து பிராமணர்களின் சொல்லாகும். ஆக பாப்தாதா அனைத்து குழந்தைகளுக்கும் இதையே மீண்டும் ஞாபகப்படுத்துகிறார், சதா பாபாவின் கூடவே இருங்கள்! பாபா அனைத்து சம்பந்தங்களின் அனுபவம் செய்வித்துள்ளார். பாபாவே அனைத்து உறவும் என கூறவும் செய்கிறீர்கள். அனைத்து உறவுமாக இருக்கும் போது, எப்படி சுயமோ அப்படி செயலில் ஏன் ஈடுபடுத்த மாட்டேன் என்கிறீர்கள்? அவ்வாறு அனைத்து உறவுகளின் சம்மந்தங்களை அனுபவம் செய்து வந்தீர்கள் என்றால், துணைவனும் இருப்பார், துணையும் இருக்கும். வேறு எந்த துணையின் பக்கமும் மனம், புத்தி போக முடியாது. பாப்தாதா உங்களுக்கு வழங்க முன் வருகிறார். அனைத்து உறவுகளின் அனுபவத்தையும் தர முன் வரும்போது, சர்வ சம்மந்தங்களின் சுகத்தை எடுங்களேன்! சம்மந்தங்களை செயலில் ஈடுபடுத்துங்கள்!

பாப்தாதா, ஒரு சில குழந்தைகள், சில சில சமயங்களில் தங்களை தனியாக, சற்று மனச்சோர்வாக அனுபவம் செய்வதைப் பார்க்கும் போது பாப்தாதாவிற்கு இரக்கம் வருகிறது, இப்படிப்பட்ட சிரேஷ்ட துணை கிடைத்த பிறகும் அதனை காரியத்தில் என் ஈடுபடுத்தமாட்டேன் என்கிறார்கள்? பிறகு என்ன கூறுகிறார்கள்? ஐயோ! ஐயோ! பாப்தாதா கூறினார் -ஐயோ! ஐயோ! எனக் கூறாதீர்கள்! ஐயோ என்னும் வார்த்தை எதிர்மறையானது. ஆஹா நேர்மறையானது, எனவே ஐயோ! ஐயோ! என்று ஒருபோதும் கூறாதீர்கள். ஆஹா! என்பதையே நினைவு செய்யுங்கள். பாபாவை துணையாக, துணைவராக வைத்துக் கொண்டு பறந்தீர்கள் என்றால், மிகவும் ஆனந்தம் பிறக்கும்! அந்த துணை, மற்றும் துணைவர் இரண்டு ரூபத்தையும் நாள் முழுவதும் நடைமுறையில் கொண்டு வாருங்கள். இப்படிப்பட்ட துணைவர் பிறகு கிடைப்பாரா? நீங்கள் ஒருவேளை புத்தியின் மூலமாகவோ சரீரத்தின் மூலமாகவோ

களைத்துப் போகிறீர்கள் என்றால், இரண்டு விதத்திலும் மாலிஷ் செய்ய துணைவனான பாபா தயாராக உள்ளார். உங்கள் மனதை மகிழ்விக்கவும் சதா ரெடியாக உள்ளார். பிறகு எல்லைக்குட்பட்ட பொழுது போக்கு நிகழ்ச்சியெல்லாம் தேவையே படாது. அம்மாதிரி அவரை உபயோகிக்க வருகிறதா? அல்லது மிகவும் மேலான பாபா, டீச்சர், சத்குரு.... அவரைப் போய்...? என்று நினைக்கிறீர்களா? ஆனால் அனைத்து சம்மந்தங்களும் உள்ளனவே! புரிந்ததா? இரட்டை வெளிநாட்டினரே! நல்லது! அனைவரும் பிறந்த நாள் கொண்டாட வந்துள்ளீர்கள். இல்லையா? கொண்டாட வேண்டுமில்லையா? யாருடைய பிறந்த நாளைக் கொண்டாடுகிறீர்களோ அவர்களுக்கு பரிசு கொடுக்கிறீர்களா? இல்லையா? (கொடுக்கிறார்கள்) இன்று நீங்களனைவரும் தந்தையின் பிறந்த நாளைக் கொண்டாட வந்துள்ளீர்கள். பெயர் என்னவோ சிவராத்திரி! ஆக தந்தையின் பிறந்த நாளை சிறப்பாகக் கொண்டாட வந்துள்ளீர்கள். ஆக, பிறந்த நாள் பரிசாக என்ன கொடுத்தீர்கள்? அல்லது வெறும் மெழுகுவர்த்தி மட்டும் தான் ஏற்றுவோம் .... கேக் வெட்டுவோம் ... இப்படித்தான் கொண்டாடுவீர்களா? இன்று என்ன பரிசு கொடுத்தீர்கள்? அல்லது நாளை தருவீர்களா? சிறிதாய் இருந்தாலும் சரி, பெரிதானாலும் சரி, பரிசு என்பதைக் கொடுக்கிறார்கள் இல்லையா? அப்படியென்றால், என்ன கொடுத்தீர்கள். சிந்திக்கிறார்கள்! நல்லதாகத் தர வேண்டும்! தருவதற்குத் தயாரா? பாப்தாதா என்ன கூறுவாரோ அதைத் தருவீர்களா? அல்லது உங்களது விருப்பப்படி தருவீர்களா? (பாபா என்ன கூறுகிறாரோ அதையே தருவோம்) பார்ப்போம்,! அதற்கு கொஞ்சம் தைர்யம் வேண்டும்! தைரியம் உள்ளதா? மதுபன்காரர்களிடம் தைரியம் உள்ளதா? பாரதவாசிகளிடம் தைரியம் உள்ளதா? வெளிநாட்டவர், பாண்டவர்கள், சக்திகள் தைரியம் உள்ளதா? கை என்னவோ நன்றாக உயர்த்துகின்றனர் மிக நன்று! இதுவே தந்தைக்கு வாழ்த்துக்களாகக் கிடைத்துவிட்டது. நல்லதுலி இப்போது கூறட்டுமா? யோசித்துதான் சொல்வோம் என கூறமாட்டீர்களே? இந்த வோம்...வோம்... என்று கூறக் கூடாது. ஒரு விசயத்தை பாப்தாதா பெரும்பாலோரிடம் பார்த்தார். சிறுபாலோரிடம் அல்ல! பொரும்பாலோரிடம்! என்ன பார்த்தார்? ஏதேனம் சூழ்நிலை வருகிறதென்றால், பெரும்பாலோரிடம் ஒன்று, இரண்டு, மூன்று நிலைகளில் கோபத்தின் அம்சம் விரும்பாவிட்டாலும் வெளிவந்து விடுகிறது. சிலரிடம் மிகப் பெரியதாக கோபம் வருகிறது. சிலரிடம்

ஆவேசமாக வெளிப்படுகிறது. சிலரிடம் மூன்றாவது நிலையான சிடுசிடுப்பின் ரூபத்தில் தெரிகிறது. சிடுசிடு என்று விழுவது தெரிகிறதா? இதுவும் கூட கோபத்தின் அம்சமே! ஆனால் சற்று லேசானது. மூன்றாவது இலேசானது. முதலாவது மிக வேகமானது, இரண்டாவது அதைவிட கொஞ்சம். பிறகு சொல் என்னவோ அனைவரதும் மிக ராயல் ஆகி விட்டது. ராயல் ரூபத்தில் எப்படி கூறுகிறார்கள்? விசயம் அப்படிப்பட்டதல்லவா? ஆவேசம் வரத்தானே செய்யும். எனவே பாப்தாதா அனைவரிடமிருந்தும் இந்த பரிசைப் பெற விரும்புகிறார்கள். கோபத்தை விடுங்கள், கோபத்தின் அம்சம் கூட வரக் கூடாது. ஏன்? கோபத்தில் வந்து சேவைக்கு இடையூறு (டிஸ் சர்வீஸ்) செய்கிறார்கள். ஏனெனில், கோபம் ஏற்படுவது இரண்டு பேருக்கு இடையே தனியாக நிகழ்வதில்லை. இரண்டு பேருக்கு இடையே நடக்கும் போது எல்லோருக்கும் தெரிகிறது. மனதால் எவர்மீதாவது வெறுப்பின் அம்சம் வந்தாலும், மனதிலும் அந்த ஆத்மாவின் பொருட்டு ஆவேசம் கட்டாயம் வருகிறது. பாப்தாதாவிற்கு டிஸ்சர்வீஸ் காரணமாக பிடிப்பதில்லை. எனவே கோபம் அம்சமாத்திரம் கூட வரலாகாது. எப்படி பிரம்மச்சர்யத்தின் மீது கவனம் வைக்கிறீர்கள், அவ்வாறு காமம் மகாஎதிரி, கோபமும் மகா எதிரி, என்று தான் கூறப்பட்டுள்ளது. சுபபாவனை அன்பு பாவனை வெளிவருவதில்லை. பிறகு மூட் ஆ்ஃப் செய்து விடுகின்றனர். அந்த ஆத்மாவிடமிருந்து ஒதுங்கி விடுகின்றனர். அவர்கள் எதிரிலேயே வருவதில்லை. பேசமாட்டார்கள். அவர்களது விசயத்தை, பேச்சை துண்டித்து விடுவார்கள். முன்னேற விடுவதில்லை. வெளியிலுள்ளவர்களுக்கும் இது தெரிய வருகிறது. பிறகு அப்படி கூறி விடுவார்கள், இன்றைக்கு இவரது உடல் ஆரோக்கியம் சரி இல்லை! மற்றபடி வேறொன்றுமில்லை. ஆக, பிறந்த நாள் பரிசாக இந்த பரிசைத் தர முடியுமா? முயற்சி செய்கிறோம் என்று எண்ணுபவர்கள் கை உயர்த்துங்கள்! பரிசு கொடுப்பதற்கு யோசிப்போம், முயற்சி செய்வோம், அவர்கள் கை உயர்த்துங்கள். உண்மையான உள்ளம் உடையோரிடமே பாபா திருப்தி அடைகிறார். அனேக சகோதர, சகோதரிகள் எழுந்து நின்று விட்டனர்? மெது மெதுவாக எழுந்து நிற்கிறார்கள். உண்மையைக் கூறியதற்காக வாழ்த்துக்கள்! யார் முயற்சி செய்வோம் என்று கூறினார்களோ, சரி, முயற்சி செய்யுங்கள், ஆனால் முயற்சிக்கு எவ்வளவு சமயம் வேண்டும்? ஒரு மாதம், 6-மாதம் வேண்டும்,

எவ்வளவு வேண்டும்? விட்டுவிடுவீர்களா? முயற்சி செய்வோம் என்று கூறியவர்கள் மீண்டும் எழுந்திருங்கள். 2-3 மாதங்களில் முயற்சி செய்து விட்டு விடுவோம் என நினைப்பவர்கள் அமருங்கள். 6-மாதம் வேண்டும் என நினைப்பவர்கள், 6-மாதம் முடிந்த பிறகும் (விட முடியவில்லை என்றால்) குறைக்க வேண்டும். விட்டு விட வேண்டாம். ஏனெனில், இது மிகவும் அவசியமானது. இதனால் டிஸ்சர்விஸ் ஏற்படுகிறது. வாய் மூலம் பேசாதீர்கள், முகம் பேசுகிறது. எனவே யார் தைரியம் வைத்துள்ளார்களோ, அவர்கள் அனைவர் மீதும் பாப்தாதா ஞானம், அன்பு, சுகம், சாந்தியின் முத்துக்களை மழையாகப் பொழிகிறார். நல்லது!

பாப்தாதா இதற்குக் கைமாறாக பதிலுக்கு பரிசாக இந்த விசேஷ வரதானத்தை அனைவருக்கும் வழங்குகிறார். எப்போதாவது, தவறுதலாகவோ, விரும்பாவிட்டாலும் கோபம் வந்து விட்டாலும், உள்ளப்பூர்வமாக, இனிமையான பாபா என்னும் வார்த்தையைக் கூறவும் பாபாவின் உபரியான (எக்ஸ்ட்ரா) தைரியமானவர்களுக்கு நிச்சயம் கிடைக்கும். இனிமையான பாபா என்று கூறுங்கள். வெறும் பாபா அல்ல! அப்போது உதவி கிடைக்கும். கட்டாயம் கிடைக்கும். ஏனெனில், லட்சியம் வைத்துள்ளீர்கள் இல்லையா! லட்சியத்தின் மூலம் லட்சணம் வந்தே தீரும். மதுபன் வாசிகள் கை உயர்த்துங்கள். நல்லது செய்தே ஆக வேண்டும் இல்லையா! (ஆம், பாபா) வாழ்த்துக்கள்! மிகவும் நல்லது! இன்று முக்கியமாக மதுபன் வாசிகளுக்கு டோலி தருவோம்! மிகுந்த முயற்சி செய்கின்றனர். கோபத்திற்காகத் (வென்றதற்காக) தரவில்லை. செய்யும் முயற்சிக்காகத் தருகின்றோம். அனைவரும் புரிந்து கொள்வார்கள். கை உயர்த்தி உள்ளனர். எனவே டோலி தருகிறோம். மிக நன்றாக முயற்சி செய்கின்றனர். அனைவரையும் சேவை மூலமாக திருப்தி செய்வது, இது மதுபனின் முன் உதாரணம் எனவே இன்று இனிப்பு வழங்குவோம்! நீங்கள் அனைவரும் இவர்கள் இனிப்பு பெறுவதைப் பார்த்து, இனிப்பை சுவைத்திடுங்கள்! குஷி ஏற்படுமில்லையா? இதுவும் பிராமண குடும்பத்தின் கலாச்சாரமாகும். தற்போது நீங்கள் அமைதியின் கலாச்சாரம் என்னும் நிகழ்ச்சியை நடத்திக் கொண்டிருக்கிறீர்கள் இல்லையா? ஆக இதுவும் முதல் நம்பர் கலாச்சாரமாகும். பிராமண குல நாகரீகம் பாப்தாதா பார்த்திருக்கிறார். தாதி பரிசு தருவார் இல்லையா?

அதில் ஒரு மூட்டை நிறைய கைப்பைகள் இருக்கும். அந்த பையில் குறைவாகப் பேசு, மெதுவாகப் பேசு, இனிமையாகப் பேசு என அச்சிட்டிருக்கும். ஆக பாப்தாதா இன்று அந்த பரிசைத் தருகிறார். அந்த மூட்டையிலள்ள பையைத் தரவில்லை வரதானமாக இந்த வார்த்தைகளைத் தருகிறார். ஒவ்வொரு பிராமணரின் முகம் மற்றும் நடத்தையில் பிராமண கலாச்சாரம் தென்படட்டும். நிகழ்ச்சிகள் நடத்துவீர்கள், சொற்பொழிவும் ஆற்றுவீர்கள் ஆனால் முதலில் தனக்குள் இந்த கலாச்சாரம், நாகரீகம் அவசியம் இருக்க வேண்டும். ஒவ்வொரு பிராமணரும் புன்னகைத்தவாறே ஒவ்வொருவருடனும் தொடர்பில் வர வேண்டும். ஒருவரிடம் ஒருமாதிரி, இன்னொருவரிடம் வேறு மாதிரி, அப்படி கூடாது. எவரையாவது பார்த்து தனது கலாச்சாரத்தை விட்டு விடாதீர்கள். கடந்த கால விசயங்களை மறந்து விடாதீர்கள். புதிய சம்ஸ்காரத்தை, நாகரீக வாழ்வில் காண்பியுங்கள். இப்போதே காண்பிக்க வேண்டும், சரியா! (அனைவரும் சரி பாபா! என்றனர்)

இது மிகவும் நன்று. இரட்டை வெளிநாட்டினர் பெரும்பாலோர் ஆமாம் பாபா! என்று கூறுவதில் நல்லவர்கள். பாரதவாசிகளிடமோ மரியாதையே உள்ளது. ஆமாம், சரிங்க..... என்று சொல்வது! ஆனால் மாயாவிற்கு இல்லை என்று சொல்லுங்கள். ஆத்மாக்களிடம் சரிங்க சரிங்க.... என்று சொல்லுங்கள். மாயாவிற்கு இல்லை.... இல்லை... என்று கூறுங்கள். நல்லது. அனைவரும் பிறந்த நாள் கொண்டாடினீர்கள்? கொண்டாடினீர்கள், பரிசு கொடுத்தீர்கள், பரிசு பெற்றும் கொண்டீர்கள் நல்லது!

நாலா புறங்களிலுமுள்ள சர்வ சிரேஷ்ட பிராமண ஆத்மாக்கள், சதா பாபாவின் துணையில் இருக்கக் கூடிய, பாபாவைத் துணைவராக ஆக்கிக் கொள்ளக் கூடிய சினேக ஆத்மாக்கள், சதா பாபாவின் குணக்கடலில் மூழ்கி இருக்கும் பாப்தாதா சமானமாக சிரேஷ்ட ஆத்மாக்கள், சதா ஒரே வினாடியில் பிந்தி இடக்கூடிய, மாஸ்டர் சிந்து (குணம்) சொரூப ஆத்மாக்களுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்! நமஸ்தே என ஒவ்வொரு சமயமும் ஒவ்வொரு குழந்தைக்கும் கூறிக் கொண்டே இருக்கிறார். இன்றும் நமஸ்தே!

பின்பு கல்வித் துறையினர், இளைஞர் குழு, பஞ்சாப் சேவாதாரிகள், இரட்டை வெளி நாட்டினர் என ஒவ்வொரு குழுவாக கை உயர்த்தச் செய்து சந்தித்தார்.

பாப்தாதா தனது திருக்கரங்களால் கொடி ஏற்றி, **64'**வது சிவஜெயந்தியின் ஞாபகார்த்தமாக **64-**மெழுகுவர்த்திகள் ஏற்றி, எல்லா குழந்தைகளுக்கும் சிவஜெயந்திக்கான வாழ்த்துக்கள் அளித்தார்! அனைவரும் தங்களது பிறந்தநாளை கொண்டாடி, கொடி ஏற்றினீர்கள். இப்போது ஒவ்வொரு ஆத்மாவின் இதயத்திலும் இந்தக் கொடியை ஏற்றுங்கள். உங்கள் அனைவரின் இதயங்களிலும் தந்தையின் கொடி அசைந்து கொண்டே இருக்கிறது, இப்போது உலகம் கூறட்டும் -என்னுடைய பாபா -இந்த குரல், எப்படி முரசு அடிக்கும்போது பலத்த ஓசையுடன் அடிக்கிறார்கள் -இதைப் போலவே -என்னுடைய பாபா என்ற இந்த முரசொலி உரக்க ஒலிக்கட்டும். இதுவே அனைத்து குழந்தைகளின் இதயத்தின் ஆசை. செய்யத்தான் வேண்டும். இது பல முறை நடந்துள்ளது, இப்போது அது மீண்டும் நடக்க வேண்டும். அந்த நாள் எல்லோரும் சேர்ந்து என்ன பாடலைப் பாடுவீர்கள்? -ஆஹா பாபா ஆஹா! ஆஹா நாடகம் ஆஹா! எல்லோருடைய இதயத்திலும் பாபா, பாபா, பாபாதான் இருப்பார். அந்த நாள் தெரிகின்றதுதானே! தெரிகிறதா? அந்த நாளும் வந்தது போல்தான்! அனைவருக்கும் வாழ்த்துக்களோ கிடைத்து விட்டது. உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள் மற்றும் இந்த நாளில் அனைவருக்கும் வாழ்த்துக்கள் அளிக்க வேண்டும். அவதரித்த நாள், பிறந்த நாள், மாற்றும் நாள், வெளிப்படும் நாள் வரவிருக்கிறது. நல்லது. அனைவருக்கும் இன்றைய நாளின் 'கோல்டன் நைட்', 'டைமன்ட் நைட்'! நல்லது. ஓம்சாந்தி.

வரதானம்: உலகத்திலிருந்து இருளை நீக்கி, வெளிச்சத்தைக் கொடுக்கக் கூடிய மாஸ்டர் ஞான சூரியன் ஆகுக!

உலகத்திலிருந்து இருட்டை விலக்கி, வெளிச்சத்தை வழங்குவோரே மாஸ்டர் ஞான சூரியனாவார்கள். அவர்கள் தானும் பிரகாஷ் சொரூபமானவர்கள், லைட் மைட் (ஒளி-சக்தி) ரூபமானவர்கள். பிறருக்கும் ஒளி சக்தியை வழங்கக் கூடியவர்கள். எங்கு சதா

வெளிச்சம் இருக்குமோ அங்கு இருளின் பேச்சே இல்லை. இருள் என்பது இருக்கவே முடியாது. யார் உலகிற்கு வெளிச்சத்தைக் கொடுக்க முடியுமோ அவர்கள் தான் சுயம் இருளில் இருக்க முடியாது. தூய்மை என்றால் வெளிச்சம்! அவர்களிடம் இருள், அதாவது சம்பூர்ண விகாரத்தின் அம்சம் கூட இருக்க முடியாது.

சுலோகன்: சுபாவம், சம்ஸ்காரம், சம்மந்தம் தொடர்பில் இலேசாக இருப்பதே இணைந்து சுமுகமாக வாழ்வதாகும்!

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 19.03.2000 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பணிவு மற்றும் படைப்பின் சமநிலை மூலம் ஆசீர்வாதங்களின் கணக்கை சேமிப்பு செய்யுங்கள்!

இன்று பாப்தாதா தன்னுடைய புனித மகிழ்ச்சியான அன்னப்பறவைகளின் சபையில் வந்திருக்கிறார். நாலாபுறங்களிலும் புனித அன்னப்பறவைகள் தென்படுகிறார்கள். புனித அன்னப்பறவைகளின் விசேஷத்தை அனைவரும் நல்ல முறையில் தெரிந்திருக்கிறீர்கள். எப்பொழுதும் புனித மகிழ்ச்சியான அன்னப்பறவை என்றால் தூய்மையான மற்றும் சுத்தமான இதயம். அந்த மாதிரி புனித அன்னப்பறவைகளில் தூய்மையான மற்றும் சுத்தமான இதயம் இருக்கும் காரணத்தினால் ஒவ்வொரு சுபவிருப்பங்களும் சுலபமாக நிறைவேறிவிடுகிறது. எப்பொழுதும் திருப்தியான ஆத்மாவாக இருக்கிறார்கள். உயர்ந்த எண்ணத்தை வைத்தார்கள் மற்றும் நிறைவேறியது. கடின உழைப்பு செய்ய வேண்டியது இருப்பதில்லை. ஏன்? பாப்தாதாவிற்கு அனைவரையும் விட பிரியமான, அனைவரையும் விட நெருக்கமான சுத்தமான இதயம் உள்ளவர்கள் மிகப் பிரியமானவர்கள். சுத்தமான இதயம் உள்ளவர்கள் எப்பொழுதும் பாப்தாதாவின் இதய சிம்மாசனதாரி, அனைத்து உயர்ந்த எண்ணங்களும் நிறைவேறும் காரணத்தினால் உள்உணர்வில், பார்வையில், பேச்சில், உறவு, தொடர்பில் சரளமும், தெளிவும் ஒரே சமமாகத் தென்படுகிறது. சரளத்தன்மையின் அடையாளம் -இதயம், புத்தி மற்றும் வார்த்தை ஒரே சமமாக இருப்பது. இதயத்தில் ஒன்றும், வார்த்தையில் இன்னொன்றுமாக இருப்பது சரளத்தன்மையின் அடையாளம் இல்லை. சரள சுபாவம் உள்ளவர்கள் எப்பொழுதும் பணிவு நிறைந்தவர்களாக, அகங்காரம் அற்றவர்களாக, சுயநலம் அற்றவர்களாக இருப்பார்கள். புனித அன்னப்பறவைகளின் விசேஷம் -சரள புத்தி, சரள வார்த்தைகள், சரள உள்உணர்வு மற்றும் சரள பார்வை.

இந்த வருடத்தில் பாப்தாதா அனைத்து குழந்தைகளின் நடத்தை மற்றும் முகத்தில் இரண்டு விசேஷங்களைப் பார்க்க விரும்புகிறார். இனி என்ன செய்வது என்று அனைவரும் கேட்கிறீர்கள் இல்லையா? இந்த சீசனின் முடிவுக்குப் பிறகு விசேஷமாக என்ன செய்ய வேண்டும்? இனி என்ன ஆகும் என்று அனைவரும் யோசிக்கிறீர்கள் தான் இல்லையா? இனி என்ன செய்ய வேண்டும். சேவையின் சேத்திரத்திலோ பெரும்பான்மையோர் அவரவர்களின் சக்திக்கு ஏற்றபடி மிக நல்ல வளர்ச்சியை அடைந்திருக்கிறார்கள், முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள். இந்த முன்னேற்றத்திற்காக பாப்தாதா மிக நல்லது, மிக நல்லது, மிக நல்லது என்று வாழ்த்துக்களையும் தெரிவிக்கிறார். கூடவே ரிசல்ட்டில் ஒரு விஷயம் தென்பட்டது, அது என்ன? கூறலாமா? டீச்சர்கள் கூறலாமா, இரட்டை வெளிநாட்டினர் கூட்டுமா?, பாண்டவர்கள் கூறலாமா? கையை உயர்த்துங்கள் அப்பொழுது தான் கூறுவோம், இல்லை என்றால் கூற மாட்டோம் (அனைவரும் கையை உயர்த்தினார்கள்). மிகவும் நல்லது. ஒரு விஷயம் என்ன பார்த்தோம்? ஏனென்றால் இன்று வதனத்தில் பாப்தாதாவிடையே அவர்களுக்குள் ஆன்மீக உரையாடல் இருந்தது. எப்படி ஆன்மீக உரையாடல் செய்வார்கள்? இருவரும் எப்படி ஒருவர் இன்னொருவரோடு ஆன்மீக உரையாடல் செய்வார்? எப்படி இங்கே இந்த உலகத்தில் நீங்கள் மோனோ ஆக்டிங் (ஒருவரே இரண்டு கதாபாத்திரங்களை நடிப்பது) செய்கிறீர்கள் இல்லையா? மிக நன்றாகச் செய்கிறீர்கள் -அப்படி உங்களுடைய இந்த பௌதீக உலகத்தில் ஒரு ஆத்மா இருவரின் பங்கைச் செய்கிறது. மேலும் பாப்தாதா இரண்டு ஆத்மாக்கள் ஒரு உடலில் இருக்கிறார்கள். வித்தியாசம் உள்ளதல்லவா? அப்படி மிகவும் மகிழ்ச்சிகரமான விஷயம் நடக்கும்.

அப்படி இன்று வதனத்தில் பாப்தாதாவின் ஆன்மீக உரையாடல் நடந்தது. எந்த விஷயத்தின் மீது பிரம்மாபாபாவிற்கு ஊக்கம் எந்த விஷயத்தில் இருக்கும் என்று நீங்கள் அனைவரும் தெரிந்திருக்கிறீர்கள். நல்ல முறையில் தெரிந்திருக்கிறீர்கள் தான் இல்லையா? அனைத்தும் மிக விரைவில் நடக்க வேண்டும் என்று பிரம்மாபாபாவின் ஆர்வம் இருந்தது. பிரம்மாபாபாவிடம் சிவபாபா கூறினார் -விநாஷம் மற்றும் பரிவர்த்தனை செய்வதோ ஒரு

கைத்தட்டலின் விஷயம் கூட இல்லை. சொடக்கு போடுவதின் விஷயம் ஆகும் ஆனால் முதலில் நீங்கள் 108, இல்லை பாதி மாலையை உருவாக்கிக் கொடுங்கள். அதற்கு பிரம்மாபாபா என்ன பதில் கூறியிருப்பார்? சொல்லுங்கள் (தயாராகிக் கொண்டிருக்கிறார்கள்) நல்லது. பாதி மாலை கூட தயாராகவில்லையா? முழு மாலையின் விஷயத்தை விட்டு விடுங்கள். பாதி மாலையும் தயாராகவில்லையா (அனைவரும் சிரிக்கிறார்கள்). சிரிப்பது என்றால் ஏதோ ஒன்று இருக்கிறது. பாதி மாலை தயார் ஆகி விட்டது என்று உங்களில் யார் கூறுகிறீர்களோ அவர்கள் கையை உயர்த்துங்கள். தயாராகி விட்டதா? மிகக் குறைந்தவர்கள் தான். யார் ஆகிக் கொண்டிருக்கிறது என்று நினைக்கிறீர்களோ அவர்கள் கையை உயர்த்துங்கள். பெரும்பான்மையோர் ஆகிக் கொண்டிருக்கிறது என்றும் குறைவானவர்கள் ஆகி விட்டது என்றும் கூறுகிறார்கள். தயார் ஆகி விட்டது என்று யாரெல்லாம் கை உயர்த்தினீர்களோ அவர்களுக்கு நீங்கள் பெயர் எழுதிக் கொடுங்கள் என்று பாப்தாதா கூறுகிறார். நல்ல விஷயம் தான் இல்லையா? அதை பாப்தாதா மட்டும் தான் பார்ப்பார். வேறு யாரும் பார்க்க மாட்டார்கள். மூடி வைக்கப்பட்டு இருக்கும். அந்த மாதிரி நல்ல நம்பிக்கைக்குரிய இரத்தினங்கள் யார் யார் என்று பாப்தாதா பார்ப்பார். பாப்தாதாவும் ஆகியிருக்க வேண்டும் என்று நினைக்கிறார். எனவே இவரிடம் இருந்து பெயரை வாங்குங்கள், இவருடைய புகைப்படத்தை எடுங்கள்.

பிரம்மாபாபா என்ன பதில் கொடுத்தார்? நீங்கள் அனைவருமே நல்ல நல்ல பதில் கொடுத்திருக்கிறீர்கள். பிரம்மாபாபா கூறினார், நீங்கள் சொடக்கு போடும் அளவு தான் நேரம் தேவையாக இருக்கிறது. அவர்கள் தயாராகி விடுவார்கள். எனவே நல்ல விஷயமாக ஆனது இல்லையா? பிறகு நல்லது. முழு மாலையும் தயாராகி விட்டதா என்று சிவபாபா கேட்டார். பாதி மாலைக்கான பதிலோ கிடைத்தது, முழு மாலைக்காக கேட்டோம். அதற்கு கொஞ்சம் காலம் வேண்டும் என்று கூறினார். இந்த ஆன்மீக உரையாடல் நடந்தது. ஏன் கொஞ்ச காலம் வேண்டும்? ஆன்மீக உரையாடலில் கேள்விப் பதில் இருக்கும் இல்லையா? ஏன் கொஞ்ச காலம் வேண்டும்? முக்கியமாக எந்தக் குறை இருக்கிறது அதன் காரணமாக பாதி மாலையும் தயாராகாமல் நின்றிருக்கிறது. பிறகு நாலாபுறங்களிலுமுள்ள குழந்தைகளை ஒவ்வொரு பகுதியைச்

சேர்ந்தவர்களை எமர்ஜ் செய்து (வெளிப்படுத்திக்) கொண்டே இருந்தார், எப்படி உங்களுடைய மண்டலம் இருக்கிறது இல்லையா, அதே போல் ஒவ்வொரு மண்டலம் இல்லை. மண்டலமோ மிகப் பெரியது. ஒவ்வொரு விசேஷ நகரத்தை எமர்ஜ் செய்து கொண்டே இருந்தார். மேலும் அனைவரின் முகத்தையும் பார்த்தார். பார்த்துக் கொண்டே ஒரு விசேஷத்தை அனைத்து குழந்தைகளும் மிக விரைவில் தாரணை செய்து விட்டார்கள் என்றால் மாலை தயாராகி விடும் என்று பிரம்மாபாபா கூறினார். அது என்ன விசேஷம்? எவ்வளவு சேவையில் முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள், சேவை செய்து கொண்டே முன்னேறி இருக்கிறார்கள். நன்றாக முன்னேறியிருக்கிறார்கள் ஆனால் ஒரு விஷயத்தின் சமநிலையின் குறை இருக்கிறது. அது படைக்கும் காரியம் செய்வதிலோ நன்றாக முன்னேறி விட்டார்கள் ஆனால் படைப்பின் கூடவே பணிவு இரண்டின் சமநிலையில் வேற்றுமை இருந்தது என்று கூறினார். சேவையின் முன்னேற்றத்தில் பணிவுக்கு பதிலாக சில நேரம் அபிமானம் கலந்து விடுகிறது. எந்த அளவு சேவையில் முன்னேறிச் செல்வீர்களோ, அந்த அளவே உள்உணர்வில், பார்வையில், வார்த்தையில், நடத்தையில் பணிவு தென்பட வேண்டும். இந்த சமநிலைக்கு இப்பொழுது மிக அவசியமாக இருக்கிறது. இது வரையிலும் அனைத்து உறவு மற்றும் தொடர்பில் இருப்பவர்களிடமிருந்து என்ன ஆசீர்வாதங்கள் கிடைக்க வேண்டுமோ அது கிடைப்பதில்லை. மேலும் யாராவது அதிக அளவில் முயற்சி செய்கிறார் என்றால், நல்லது தான் ஆனால் முயற்சி செய்வதின் கூடவே ஒருவேளை ஆசீர்வாதங்களின் கணக்கு சேமிப்பு ஆகவில்லை என்றால் வள்ளல் தன்மையின் நிலை, இரக்க மனம் உடையவர் ஆவதற்கான நிலையின் அனுபவம் ஆகாது. சுய முயற்சி மற்றும் கூடவே பாப்தாதா மற்றும் பரிவாரத்தின் சிறியவர்கள், பெரியவர்களின் ஆசீர்வாதங்கள் அவசியமாக இருக்கிறது. இந்த ஆசீர்வாதங்கள் மூலமாக புண்ணிய கணக்கின் சேமிப்பு செய்ய வேண்டும். இந்த மதிப்பெண்களும் சேர்க்கப்படுகிறது. எவ்வளவு விரும்புகிறீர்களோ சேவை செய்யுங்கள். தன்னுடைய சேவையின் ஈடுபாட்டில் முன்னேறிச் சென்று கொண்டே இருங்கள் ஆனால் சேவையின் கூடவே பணிவு கூடவே அனைவருடனும் இணைந்து சகஜமாய் நடந்து கொள்வது என்ற இந்த விசேஷத்தையும் அனைத்து குழந்தைகளிடமும் பாப்தாதா பார்க்க விரும்புகிறார். இந்த புண்ணியத்தின் கணக்கு சேமிப்பு

ஆவது மிக மிக அவசியம். பிறகு நானோ மிகுந்த சேவை செய்தேன், நானோ இதைச் செய்தேன், நான் தானே இதைச் செய்தேன். பிறகு ஏன் என்னுடைய வரிசை எண் பின்னால் ஆனது என்று கூறாதீர்கள். எனவே முன்பாகவே பாப்தாதா சமிக்ஞை கொடுக்கிறார். தற்சமயம் இந்த புண்ணியத்தின் கணக்கை மிகவும் சேமியுங்கள். இவரோ அப்படிப்பட்டவர் தான், இவர் மாறவே மாட்டார் என்று அப்படி நினைக்காதீர்கள். எப்பொழுது இயற்கையை மாற்ற முடிகிறதோ, இயற்கையோடு அனுசரித்து செல்கிறீர்கள் தான் இல்லையா? அப்படியானால் பிராமண ஆத்மாவுடன் அனுசரித்து செல்ல முடியாதா என்ன? எதிர்ப்பை அனுசரித்து நடந்து கொள்ளுங்கள். இது தான் பணிவு மற்றும் படைப்பிற்கான சமநிலை. கேட்டீர்களா?

இறுதியில் வீட்டுப்பாடமோ கொடுப்போம் இல்லையா? ஏதாவது வீட்டுப்பாடம் கிடைக்கும் இல்லையா? வரப்போகும் சீசனில் பாப்தாதா வருவார் ஆனால் ஒரு நிபந்தனை போடுவார். பாருங்கள் சாகார பாபாவின் பங்கும் நடந்தது. அவ்யக்த பங்கும் நடந்தது, இவ்வளவு காலம் அவ்யக்த பங்கு நடக்கும் என்று கனவில் கூட இருந்ததில்லை. அப்படி இரண்டு பங்குகளும் நாடகப்படி நடந்தன. இப்பொழுது ஏதாவது நிபந்தனை போட வேண்டுமா அல்லது இல்லையா. உங்கள் கருத்து என்ன? இந்த மாதிரியே நடந்து கொண்டே இருக்க வேண்டுமா என்ன? இன்று வதனத்தில் நிகழ்ச்சியையும் கேட்டோம். பாப்தாதாவின் ஆன்மீக உரையாடலில் இந்த நாடகத்தின் பங்கு எதுவரையிலும் இருக்கும் என்பதும் பேசப்பட்டது. ஏதாவது தேதி இருக்கிறதா? (டெஹ்ராடூனைச் சேர்ந்த பிரேம் சகோதரியை பார்த்து) எதுவரை இருக்கும் என்று ஜாதகத்தை கூறுங்கள். எதுவரை என்ற கேள்வி இப்பொழுது எழுந்திருக்கிறது. இருந்தாலும் 6-மாதமோ இருக்கிறது தான் இல்லையா? 6-மாதங்களுக்குப் பிறகு தான் அடுத்த சீசன் தொடங்கும். எனவே பாப்தாதா ரிசல்ட்டை பார்க்க விரும்புகிறார். இதயம் சுத்தமானதாக ஆக வேண்டும். இதயத்தில் எந்தவொரு பழைய சம்ஸ்காரத்தின், அபிமானத்தின், அவமானத்தின் உணருதலின் கறை இருக்க வேண்டாம்.

பாப்தாதாவிடமும் இதயத்தின் படத்தை பிடிக்கும் இயந்திரம் இருக்கிறது. இங்கே எக்ஸ்ரேயில் இந்த ஸ்தூல இதயம் தென்படுகிறது

தான் இல்லையா? அப்படி வதனத்தில் இதயத்தின் படம் மிகத் தெளிவாகத் தென்படுகிறது. அனேக விதமான சிறிய பெரிய கறை, தொய்வு தெளிவாகத் தென்படுகிறது.

இன்று ஹோலி கொண்டாடுவதற்காக வந்திருக்கிறீர்கள் தான் இல்லையா? சந்திப்பின் கடைசி வாய்ப்பாக இருக்கும் காரணத்தினால் வீட்டுப்பாடத்தை முதலில் கூறி விட்டோம் ஆனால் ஹோலி என்றால் என்ன அர்த்தம். ஹோலி கொண்டாடுவது என்றால் கடந்ததை கடந்ததாக ஆக்குவது என்று மற்றவர்களுக்கும் கூறுகிறீர்கள். ஹோலி கொண்டாடுவது என்றால் இதயத்தில் எந்தவொரு சிறிய மற்றும் பெரிய கரை இருக்க வேண்டாம். முற்றிலும் சுத்தமான இதயம். அனைத்து பிராப்திகளும் நிரம்பியதாக இருக்க வேண்டும். பாப்தாதாவிற்கு குழந்தைகள் மேல் அன்பு இருக்கும் காரணத்தினால் ஒரு விஷயம் அவருக்கு பிடிப்பதில்லை. இதை முன்பே கூறியிருக்கிறோம். அது கடின (கஷ்டப்பட்டு) உழைப்பு அதிகம் செய்கிறார்கள். ஒருவேளை இதயம் சுத்தமாக இருக்கிறது என்றால் கடின உழைப்பு இருக்காது. திலாராம் (சிவபாபா) இதயத்தில் நிரம்பியிருக்கிறார் என்றால் நீங்கள் திலாராமின் இதயத்தில் நிரம்பியிருப்பீர்கள். இதயத்தில் தந்தை நிரம்பியிருக்க வேண்டும். பிறகு எந்த ரூபத்திலும் அது சூட்சும ரூபமாக இருந்தாலும், ராயல் ரூபமாக இருந்தாலும் பெரிய ரூபமாக இருந்தாலும் எந்த ரூபத்திலும் மாயா வர முடியாது. கனவு அளவில் கூட, எண்ணத்தில் கூட மாயா வர முடியாது. பிறகு கடின உழைப்பில் இருந்து விடுபட்டு விடுவீர்கள் இல்லையா. மனதளவில் கூட கடின உழைப்பிலிருந்து விடுபட்ட நிலையை பாப்தாதா பார்க்க விரும்புகிறார். கடின உழைப்பிலிருந்து விடுபட்டவர் தான் பந்தனமற்ற வாழ்க்கையின் அனுபவம் செய்ய முடியும். ஹோலி கொண்டாடுவது என்றால், கடின உழைப்பிலிருந்து விடுபட்டு பந்தனமற்ற வாழ்க்கையின் அனுபவத்தில் இருப்பது. இப்பொழுது பாப்தாதா மன சக்தி மூலமாக சேவையை சக்திசாலி ஆக்க விரும்புகிறார். வாய்மொழி மூலம் சேவை நடந்தே வந்திருக்கிறது, நடந்து கொண்டே இருக்கும், ஆனால் இதில் நேரம் எடுக்கிறது. இன்னும் இருக்கும் நேரம் குறைவாக இருக்கிறது, செய்ய வேண்டிய சேவையோ இப்பொழுது கூட அதிகமாக இருக்கிறது. ரிசல்ட்டை நீங்கள் அனைவரும் கூறினீர்கள். இதுவரையிலும் 108-ன் மாலையை கூட உருவாக்க முடியவில்லை. 16,000, 9-லட்சம் இதுவோ

மிகத் தொலைவாக ஆகி விட்டது. இதற்காக துரிதமான விதி வேண்டியதாக இருக்கிறது. முதலில் தன்னுடைய மனதை உயர்ந்ததாக, சுத்தமானதாக ஆக்குங்கள். ஒரு விநாடி கூட வீணான எண்ணங்கள் இருக்க வேண்டாம். இது வரையிலும் பெரும்பான்மையோருக்கு வீணான எண்ணங்களின் சதவீதம் இருக்கிறது. அசுத்தமானது இல்லை ,ஆனால் வீணானது இருக்கிறது. எனவே மனம் மூலம் செய்யும் சேவை அதிவேகத்தில் செய்ய முடிவதில்லை. இப்பொழுது ஹோலி கொண்டாடுவது என்றால் மனதை வீணானதிலிருந்தும் தூய்மையாக ஆக்குவது.

ஹோலி கொண்டாடினீர்களா? கொண்டாடுவது என்றால் ஆவது. உலகத்தினரோ விதவிதமான வர்ணங்களினால் ஹோலி கொண்டாடுகிறார்கள் ஆனால் பாப்தாதா அனைத்து குழந்தைகளின் மேல் தெய்வீக குணங்களின், தெய்வீக சக்திகளின், ஞானத்தின் வர்ணங்களைப் போடுகிறார்.

இன்று வதனத்தில் இன்னும் செய்திகள் இருந்தன. ஒன்றோ ஆன்மீக உரையாடலைப் பற்றி கூறினோம். இன்னொன்று யாரெல்லாம் உங்களுடைய நல்ல நல்ல சேவையின் துணைவர்கள் அட்வான்ஸ் பார்ட்டியில் சென்றிருக்கிறார்களோ அவர்களின் ஹோலி இன்று வதனத்தில் கொண்டாடுவதின் தினமாக இருந்தது. உங்கள் அனைவருக்கும் கூட எப்பொழுது வாய்ப்பு வருகிறது என்றால் நினைவோ வருகிறது தான் இல்லையா? தன்னுடைய தாதிகளின், தோழிகளின், பாண்டவர்களின் நினைவோ வருகிறது தான் இல்லையா? அட்வான்ஸ் பார்ட்டியின் மிகப் பெரிய குரூப் ஆக ஆகி விட்டது. ஒருவேளை பெயரைக் கூறினோம் என்றால் மிக அதிகமாக இருக்கிறது. அப்படி வதனத்தில் இன்று அனைத்து விதமான ஆத்மாக்கள் ஹோலி கொண்டாடுவதற்கு வந்திருந்தார்கள். அனைவரும் அவரவர்களின் முயற்சியின் பிராப்திக்கு ஏற்றபடி விதவிதமான பங்கை செய்து கொண்டிருக்கிறார்கள். அட்வான்ஸ் பார்ட்டியின் பங்கு இதுவரையிலும் குப்தமாக இருக்கிறது. என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்கள் தான் இல்லையா? அவர்கள் உங்கள் அனைவரையும் சம்பூர்ணம் ஆகி திவ்ய ஜென்மம் மூலமாக புது உலகம் வருவதற்கு பொறுப்பாளர் ஆகுங்கள் என்று வரவேற்றுக்

கொண்டிருக்கிறார்கள். அனைவரும் அவர்களுடைய பங்கில் குஷியாக இருக்கிறார்கள். நான் சங்கமயுகத்தில் இருந்து வந்திருக்கிறேன் என்ற இந்த நினைவு இருப்பதில்லை. தெய்வீகத் தன்மை, தூய்மை, பரமாத்மா மேல் ஈடுபாடு இவை இருக்கின்றன ஆனால் ஞானம் தெளிவாக வெளிப்படும் ரூபத்தில் அவர்களிடம் இருப்பதில்லை. விலகியிருக்கும் தன்மை இருக்கிறது, ஒருவேளை ஞானம் வெளிப்படும் ரூபத்தில் இருந்து விட்டது என்றால், அனைவரும் மதுபன்னிற்கு ஓடி வந்து விடுவார்கள் ஆனால் இவர்களுடைய பங்கு வித்தியாசமானது, ஞானத்தின் சக்தி இருக்கிறது. சக்தி குறைவடையவில்லை. நிரந்தரமாக மரியாதைப் பூர்வமாக நடக்கும் வீட்டின் சூழ்நிலை, தாய் தந்தையின் திருப்தி மற்றும் ஸ்தூல சாதனமும் அனைத்தும் பிராப்தியாக இருக்கிறது. மரியாதையில் மிகவும் உறுதியானவர்கள். வரிசைக்கிரமமாகவோ இருக்கிறார்கள் ஆனால் விசேஷ ஆத்மாக்கள் மிக உறுதியானவர்கள். என்னுடைய பூர்வ ஜென்மம் மற்றும் புனர்ஜென்மம் மகானாக இருந்தது. மேலும் இருக்கும் என்று உணருகிறார்கள். அவர்களுடைய லட்சணங்கள் கூட பெரும்பான்மையோருக்கு ஒரு ராஜகுடும்பத்தின் திருப்தியான ஆத்மாக்கள், நிரம்பிய ஆத்மாக்கள், மகிழ்ச்சியான ஆத்மாக்கள் மற்றும் தெய்வீக குணம் நிரம்பிய ஆத்மாக்களாகத் தென்படுகிறார்கள். இதுவோ அவர்களுடைய சரித்திரமாக இருந்தது, ஆனால் வதனத்தில் என்ன நடந்தது? ஹோலி எப்படி கொண்டாடினார்கள். நீங்கள் பார்த்திருந்திருக்கலாம். ஹோலி பண்டிகையில் விதவிதமான வர்ணங்களை காய்ந்த வண்ண பொடிகளை தட்டில் நிரப்பி வைப்பார்கள். அதே போல் வதனத்திலும் எப்படி காய்ந்த வண்ண துகள்கள் இருக்கின்றன அதே போல் மிகவும் நுண்ணிய மின்னிக் கொண்டிருக்கும் வைரங்களாக இருந்தன ஆனால் சுமையுள்ளவைகளாக இருக்கவில்லை. எப்படி வண்ணத்தை கையில் எடுத்தீர்கள் என்றால் லேசாக இருக்கும் இல்லையா. அதே போல் பல வண்ணங்களில் வைரங்களினால் தட்டுக்கள் நிரப்பப்பட்டிருந்தன. எப்பொழுது இவர்கள் அனைவரும் வந்து விட்டார்கள் என்றால் வதனத்தின் சொரூபம் என்னவாக இருக்கும் என்று தெரிந்திருக்கிறீர்களா? சொரூபம் ஒளி வடிவமானதாகத் தான் இருக்கும் இல்லையா. பார்த்திருக்கிறீர்கள் தான் இல்லையா. அப்படி ஒளியின் பிரகாசமான உடலோ முன்பே மின்னிக் கொண்டு தான் இருக்கிறது.

## 2000 அவ்யக்த முரளி

பாப்தாதா அனைவரையும் அவர்களுடைய சங்கமயுக உடலில் வெளிப்படுத்தினார். எப்பொழுது சங்கமயுக உடலில் வெளிப்பட்டார்களோ ஒவ்வொருவரும் மற்றவர்களை சந்திப்பதில் மிகவும் ஈடுபட்டார்கள். அட்வான்ஸ் பார்ட்டியின் ஜென்மத்தின் விஷயங்களை மறந்து விட்டார்கள் மற்றும் சங்கமயுகத்தின் விஷயங்கள் வெளிப்பட்டன. சங்கமயுகத்தின் விஷயங்களை எப்பொழுது ஒருவர் மற்றவருடன் பகர்ந்து கொண்டால், எவ்வளவு குஷியில் வந்து விடுகிறார்கள் என்பதை நீங்கள் புரிந்து கொள்வீர்கள். மிகவும் குஷியோடு ஒவ்வொருவருடனும் கருத்துப் பரிமாற்றம் செய்து கொண்டிருந்தார்கள். இவர்கள் மிகவும் மகிழ்ச்சியில் வந்து விட்டார்கள் என்று பாப்தாதா பார்த்தார். எனவே இவர்களை சந்திக்க விடலாம் என்றிருந்தார். அவர்களுக்குள் தங்களுடைய வாழ்க்கையின் மிகுந்த கதைகளை ஒவ்வொருவருக்கும் கூறிக் கொண்டிருந்தார்கள். பாபா அந்த மாதிரி கூறினார், பாபா அந்த மாதிரி என் மேல் அன்பு வைத்திருந்தார், அறிவுரை கூறினார், பாபா அந்த மாதிரி கூறுகிறார். மேலும் பாபா -பாபா, பாபா, பாபா என்று தான் இருந்தது. கொஞ்ச நேரத்திற்குப் பிறகு என்னவானது? அனைவரின் சம்ஸ்காரங்களையோ உங்களுக்குத் தெரியும். அனைவரையும் விட ரமணீகரமானவராக இந்த குரூப்பில் யார் இருந்தார்? (தீதி மற்றும் சந்திரமணி தாதி) தீதி முதலில் எழுந்தார். சந்திரமணி தாதியின் கையைப் பிடித்து நடனமாடத் தொடங்கி விட்டார். மேலும் தீதி எப்படி இங்கே போதையில் சென்று விடுவார் இல்லையா, அதே போல் போதையில் மிகவும் நடனமாடினார். மம்மாவை நடுவில் நிற்க வைத்தார்கள். மேலும் சுற்றி வந்தார்கள். ஒருவர் இன்னொருவரோடு கண்ணாமூச்சி விளையாடினார்கள். நன்கு விளையாடினார்கள். மேலும் பாப்தாதாவும் பார்த்து பார்த்து மிகவும் புன்முறுவல் செய்து கொண்டே இருந்தார். ஹோலி கொண்டாட வந்திருக்கிறார்கள் என்றால் விளையாடட்டுமே. கொஞ்ச நேரத்திற்கு பிறகு அனைவரும் பாப்தாதாவின் கரங்களுக்குள் வந்து விட்டனர். மேலும் அனைவரும் முற்றிலும் அன்பில் மூழ்கி விட்டனர். மேலும் அதற்குப் பிறகு பாப்தாதா அனைவர் மீதும் பல வண்ணங்களில் வைரம் இருந்தது இல்லையா? மிகவும் நுண்ணிய எப்படி ஏதாவது ஒரு பொருளின் மாவு இருக்கும் இல்லையா? அதே போல் இருந்தது ஆனால் மிகவும் மின்னிக் கொண்டிருந்தது. அதை பாப்தாதா அனைவர் மேலும் போட்டார். அப்படி மின்னிக் கொண்டிருக்கும் உடல் இருந்தது

இல்லையா. அதன் மேல் இந்த விதவிதமான வண்ணங்களின் வைரம் விழுந்தவுடன் அனைவரும் மிகவும் அலங்கரிக்கப் பட்டவர்கள் ஆகி விட்டார்கள். சிகப்பு, மஞ்சள், பச்சை . . . அப்படி 7-வர்ணங்கள் கூறுகிறார்கள் இல்லையா. அப்படி 7-வர்ணங்களுமே இருந்தது. எனவே அனைவருமே அந்த மாதிரி மிகவும் மின்னிக் கொண்டிருப்பவர்களாக ஆகி விட்டார்கள், சத்யுகத்தில் கூட அந்த மாதிரியான ஆடை இருக்காது. அனைவரும் மகிழ்ச்சியிலோ இருக்கவே இருந்தார்கள். பின்பு ஒருவர் இன்னொருவர் மேலும் போடத் தொடங்கினார்கள். ரமணீகரமான சகோதரிகளும் அதிகம் இருந்தார்கள் இல்லையா. மிகவும் மகிழ்ச்சியைக் கொண்டாடினார்கள். அதற்குப் பிறகு என்ன நடந்தது? பாப்தாதா முன்பாகவே அனைவருக்கும் 'போக்' அளித்தார், நீங்களோ நாளை 'போக்' ஸ்வீகாரம் செய்வீர்கள் இல்லையா ஆனால் பாப்தாதா மதுபனின், சங்கமயுத்தின் விதவிதமான 'போக்' (பிரசாதம்) அனைவருக்கும் உண்ண அளித்தார். மேலும் அதில் விசேஷமாக ஹோலியின் 'போக்' ஆக என்ன இருந்தது? (ஜிலேபி). நீங்கள் ரோஜா மலரையும் சமைக்கிறீர்கள் தான் இல்லையா? அப்படி வகை வகையான சங்கமயுகத்தின் 'போக்' அவர்களுக்கு கொடுத்தோம். உங்களை விட முன்பாகவே அவர்கள் 'போக்' பெற்றுக் கொண்டார்கள், உங்களுக்கு நாளை கிடைக்கும். நல்லது. அதாவது மிகவும் கொண்டாடினார்கள், ஆடினார்கள், பாடினார்கள். அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து ஆஹா பாபா!, என்னுடைய பாபா!, இனிமையான பாபா! என்ற பாடலைப் பாடினார்கள். அப்படி ஆடினார்கள், பாடினார்கள், அருந்தினார்கள் மேலும் கடைசியில் என்ன ஆனது? வாழ்த்துக்கள் மற்றும் விடையளிப்பு. அப்படி நீங்களும் கொண்டாடினீர்களா அல்லது கேட்க மட்டும் தான் செய்தீர்களா? ஆனால் முதலில் இப்பொழுது பரிஷ்தா ஆகி மின்னும் ஒளி மயமான உடல் உள்ளவராக ஆகுங்கள். ஆக முடியுமா அல்லது இல்லையா? பருமனான உடலாக இருக்கிறதா? இல்லை. ஒரு நொடியில் மின்னிக் கொண்டிருக்கும் டபுள் லைட்டின் சொரூபம் ஆகி விடுங்கள். ஆக முடியுமா? முற்றிலும் பரிஷ்தா -பாப்தாதா அனைவருக்கும் யோகப் பயிற்சி செய்வித்தார்.

இப்பொழுது உங்கள் மேல் விதவிதமான வண்ணங்கள் அடங்கிய மின்னிக் கொண்டிருக்கும் வைரத்தை சூட்சும உடலில் போடுங்கள். மேலும் எப்பொழுதும் அந்த மாதிரி தெய்வீக குணங்களின் வண்ணம்,

சக்திகளின் வண்ணம், ஞானத்தின் வண்ணத்தினால் தன்னை வண்ணம் பூசிக் கொண்டே இருங்கள். மேலும் அனைத்தையும் விட பெரிய வண்ணம் பாப்தாதாவின் சங் கா ரங் (தொடர்பின் வண்ணத்தினால்) வண்ணமாகிக் கொண்டே இருங்கள். அந்த மாதிரி அமரர் ஆகுக. நல்லது.

அந்த மாதிரி பாரதம் மற்றும் வெளிநாட்டின் பரிஷ்தா சொரூப குழந்தைகளுக்கு, எப்பொழுதும் சுத்தமான இதயமுள்ள பிராப்தி நிரம்பிய குழந்தைகளுக்கு, உண்மையான ஹோலி கொண்டாடுவது என்றால் அர்த்தம் நிறைந்த ரூபத்தை பிரத்யக்ஷ ரூபத்தில் கொண்டு வரும் குழந்தைகளுக்கு, எப்பொழுதும் பணிவு மற்றும் படைப்பின் சமநிலை வைக்கும் குழந்தைகளுக்கு, சதா ஆசீர்வாதங்களின் புண்ணிய கணக்கை சேமிப்பு செய்யும் குழந்தைகளுக்கு பல கோடி மடங்கு மிகுந்த அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

வரதானம்: அனைத்து கவலைகளையும் தந்தையிடம் கொடுத்து விட்டு கவலையற்ற நிலையை அனுபவம் செய்யக்கூடிய பரமாத்மா அன்பிற்குரியவர் ஆகுக!

எந்தக் குழந்தைகள் பரமாத்மாவின் அன்பிற்குரியவர்களோ அவர்கள் எப்பொழுதும் இதய சிம்மாசனத்தில் இருக்கிறார்கள். அவர்களை திலாராமின் இதயத்திலிருந்து விலக்குவதற்கு யாருக்கும் தைரியம் கிடையாது. எனவே நீங்கள் உலகின் எதிரில் நாங்கள் பரமாத்மாவின் அன்பிற்குரியவர்கள் ஆகி விட்டோம் என்று பெருமிதமாகக் கூறுகிறீர்கள். இதே பெருமிதத்தில் இருக்கும் காரணத்தினால் அனைத்து கவலைகளிலிருந்தும் விடுபட்டு இருக்கிறீர்கள். நீங்கள் ஒருபொழுதும் தவறுதலாகக் கூட இன்று என்னுடைய மனம் கொஞ்சம் சோர்வாக இருக்கிறது, என்னுடைய மனம் ஈடுபடவில்லை என்று கூற முடியாது... இந்த வார்த்தைகள் தான் வீணான வார்த்தைகள். என்னுடையது என்று கூறுவது என்றால் கஷ்டத்தில் வந்து விடுவது.

சுலோகன்: எந்த விதமான குழப்பத்தையும் முடிவு கட்டுவதற்கான சாதனம் வாழ்க்கை நாடகத்தின் மேல் உறுதியான நிச்சயம்!

✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳
✳✳✳✳✳

# 30.03.2000 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# மனதைச் சரியாக வைத்திருப்பதற்காக இடையிடையே 5-நொடிகள் எடுத்துக் கொண்டு மனதின் பயிற்சி செய்யுங்கள்!

இன்று தூரதேசி பாப்தாதா தனது சாகார உலகினுடைய வெவ்வேறு தேசத்துக் குழந்தைகளைச் சந்திப்பதற்காக வந்துள்ளார். பாப்தாதா வெவ்வேறு தேசத்தவர்களை ஒரு தேசத்தவராக பார்க்கின்றார். ஒரே தேசத்திலிருந்து வந்துள்ளீர்கள் என்றால் தனது அநாதி தேசம் நினைவிருக்கிறதுதானே. பிடித்திருக்கிறதுதானே. தந்தையுடன் கூடவே தனது அநாதி தேசமும் மிகவும் பிடித்திருக்கிறதுதானே.

பாப்தாதா இன்று எல்லாக் குழந்தைகளுடைய 5-சொரூபங்களைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார், 5-சொரூபங்கள் என்ன என்பது தெரியுமா? தெரியும்தானே. 5-முக பிரம்மாவிற்கும் பூஜை நடக்கின்றது என்றால் பாப்தாதா எல்லாக் குழந்தைகளுடைய 5-சொரூபங்களைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார்.

முதலாவது: அநாதி ஜோதி பிந்து சொரூபம்! தனது சொரூபம் நினைவிருக்கிறதுதானே? மறந்து விடவில்லையே?

இரண்டாவது: ஆதி தேவதை சொரூபம்! தேவதை சொரூபத்தை அடைந்து விட்டீர்களா?

மூன்றாவது: நடுவில் பூஜைக்குரிய சொரூபம்! இதுவும் நினைவிருக்கிறதா? உங்கள் அனைவருக்கும் பூஜை நடக்கிறதா அல்லது பாரதவாசிகளுக்கு நடக்கிறதா? உங்களுடைய பூஜை நடக்கிறதா? குமாரர்கள் கூறுங்கள், உங்களுடைய பூஜை நடக்கிறதா? எனில் மூன்றாவது பூஜைக்குரிய சொரூபம்.

நான்காவது: சங்கம யுக பிராமண சொரூபம்!

இறுதியாக: பரிஷ்தா சொரூபம்!

எனில் 5-சொரூபங்களும் நினைவில் வந்து விட்டனவா? நல்லது. ஒரு நொடியில் இந்த 5-சொரூபங்களை உங்களால் அனுபவம் செய்ய முடியுமா? ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, இறுதி... என்றால் செய்ய முடியுமா. இந்த 5-சொரூபங்களும் எவ்வளவு அன்பானவை? எப்போது வேண்டுமோ, எந்த ரூபத்தில் நிலைக்க விரும்புகிறீர்களோ, நினைத்தவுடன் அனுபவம் செய்ய வேண்டும். இது தான் ஆன்மீக மனதினுடைய பயிற்சி. இந்நாட்களில் எல்லோரும் என்ன செய்கிறீர்கள்? உடற்பயிற்சி செய்கிறீர்கள்தானே. எப்படி ஆரம்பத்திலும் உங்களுடைய உலகில் (சத்யுகத்தில்) இயற்கையாக போவது-வருவதன் பயிற்சி இருந்தது. நின்று கொண்டு ஒன்று, இரண்டு, மூன்று...உடற்பயிற்சி அல்ல, என்றால் இறுதியில் கூட பாப்தாதா மனதின் பயிற்சி செய்விக்கிறார். எப்படி ஸ்தூல உடற்பயிற்சி மூலம் உடலும் சரியாக இருக்கிறதல்லவா, எனில் போகும்போதும், வரும்போதும் மனதிற்கான இந்தப் பயிற்சியை செய்து கொண்டேயிருங்கள். இதற்காக நேரம் தேவையில்லை. எப்போது வேண்டுமானாலும் 5-நொடி எடுக்க முடியதா, முடியுமா? 5-நொடிகூட எடுக்க முடியதா அளவு யாராவது பிஸி ஆக இருக்கிறீர்களா! யாராவது இருக்கிறீர்களா, இருந்தால் கை உயர்த்துங்கள். என்ன செய்வது நேரமே கிடைக்கவில்லை என பின்பு கூற மாட்டீர்கள்தானே. எந்த வேலை செய்து கொண்டிருந்தாலும் 5-நொடிக்கான இந்த மனதிற்கான பயிற்சி செய்தீர்கள் என்றால் மனம் சதா சரியாக இருக்கும். பாப்தாதா கூறுகின்றார் -ஒவ்வொரு மணி நேரத்திற்கும் இந்த 5-நொடியின் பயிற்சி செய்யுங்கள். செய்ய முடியுமா? பாருங்கள், முடியும் என எல்லோரும் கூறுகிறீர்கள், நினைவிருக்கட்டும்! ஓம் சாந்தி பவன், நினவிருக்கட்டும், மறக்கக் கூடாது. எனவே மனதினுடைய பல வித புகார்கள் உள்ளன அல்லவா -என்ன செய்வது மனது சரியில்லை, மனதை பாரமாக்கி விடுகிறீர்கள். பழங்காலத்து எடை அளவுகள் (பாவ், ஸேர், மணல்) இருந்தன அவை இப்போது மாறி விட்டன. எனில் மனதை பாரமாக்கி விடுகிறீர்கள் மற்றும் இந்தப் பயிற்சி செய்து கொண்டே இருந்தீர்கள் என்றால் முற்றிலும் லேசாகி விடுவீர்கள். பயிற்சியும் ஆகி விடும். பிராமணன் என்ற சொல் நினைவு வந்தது என்றால் பிராமண வாழ்க்கையின் அனுபவத்தில் வந்து விடுங்கள். பரிஷ்தா என்று கூறினால் பரிஷ்தா ஆகி விடுங்கள். கஷ்டமா, இல்லையா? குமாரர்கள் கூறுங்கள், கொஞ்சம் கஷ்டமாக உள்ளதா? நீங்கள் பரிஷ்தாக்களா,

இல்லையா? நீங்கள்தானா அல்லது வேறு யாராவது? எத்தனை முறை பரிஷ்தா ஆகி இருப்பீர்கள்? கணக்கற்ற முறை ஆகி இருக்கிறீர்கள். நீங்கள்தானே ஆகி இருந்தீர்கள்? நல்லது. கணக்கற்ற முறை செய்த விஷயத்தைத் திரும்பச் செய்வதில் என்ன கஷ்டம்? அவ்வப்போது ஆகிறதா? இப்போது இந்தப் பயிற்சி செய்ய வேண்டும். எங்கிருந்தாலும் 5-நொடி மனதை சுழற்றுங்கள், சுற்றி வாருங்கள். சுற்றுவது நன்றாக இருக்கிறதுதானே. டீச்சர்கள் சரிதானே. சுற்றி வரத் தெரியும்தானே? அவ்வளவுதான், சுற்றி வாருங்கள், பின்பு வேலையில் ஈடுபடுங்கள். ஒவ்வொரு மணி நேரத்திற்கு ஒரு முறை சுற்றி விட்டு, பின்பு வேலையில் ஈடுபடுங்கள் ஏனென்றால் வேலையையோ அப்படியே விட்டுவிட முடியாதல்லவா. கடமையைச் செய்தாக வேண்டும் ஆனால் 5-நொடி, ஒரு நிமிடம்கூட அல்ல. ஒரு நொடி ஒதுக்க முடியாதா? ஒதுக்க முடியுமா? ஐ.நா. சபையின் அலுவலகத்தில் ஒதுக்க முடியுமா? நீங்களோ மாஸ்டர் சர்வ சக்திவான்கள்! என்றால் மாஸ்டர் சர்வ சக்திவானால் என்னதான் செய்ய முடியாது!

பாப்தாதாவிற்கு ஒரு விஷயம் பற்றி குழந்தைகளைப் பார்த்து இனிமையான சிரிப்பு வருகிறது. எந்த விஷயம் அது? பந்தயம் கட்டுகிறீர்கள், படிவம் அச்சடிக்கிறீர்கள், சொற்பொழிவாற்றுகிறீர்கள், 7-நாள் பாடம் நடத்துகிறீர்கள், என்ன செய்விக்கிறீர்கள்? நாம் உலகத்தை மாற்றுவோம். இதையோ அனைவருமே கூறுகிறர்கள்தானே அல்லது இல்லையா? எல்லோரும் கூறுகிறீர்களா அல்லது சொற்பொழிவாற்றுபவர்கள் மட்டுமே கூறுகிறார்களா? எனில் ஒரு பக்கம் கூறுகிறீர்கள் உலகத்தை மாற்றுவோம், மாஸ்டர் சர்வ சக்திவான் ஆவோம் மற்றும் மறு பக்கம் தனது மனதை எனது மனம் என்கிறீர்கள், மனதின் எஜமானர்கள் மற்றும் மாஸ்டர் சர்வ சக்திவான்கள். இருப்பினும் கடினம் என கூறுகிறீர்கள்? எனில் சிரிப்பு வருகிறது. சிரிப்பு வருகிறதுதானே. எந்த நேரம் நினைக்கிறீர்களோ, மனம் கேட்கவில்லை என்றால் அந்த நேரம் தன்னைப் பார்த்தே சிரியுங்கள். மனதில் எந்த ஒரு விஷயம் வந்தாலும் பாப்தாதா பார்த்தார், மூன்று கோடுகள் உள்ளன. ஒன்று தண்ணீர் மீது கோடு, பார்த்திருக்கிறீர்களா, கோடு போட்ட உடனே அழிந்து விடும், கோடோ போடுகிறீர்கள்தான். இரண்டாவது, காகிதத்தின் மீது கோடு, கற்பலகை மீது (slate) எங்காவது கோடு போடுவது. மூன்றாவது பெரிய கோடு,

கல்லின் மீது போடுவது. கல்லின் மீது போட்ட கோடு அழிவது கஷ்டம். எனில் பாப்தாதா பார்த்தார், பல முறை குழந்தைகள் தனது மனதில் கல்லினால் கோடு போட்டதுபோல் உறுதியான கோடு போட்டு விடுகின்றனர்; அதை அழிக்கின்றனர் ஆனால் அழிவதில்லை. இத்தகைய கோடு நன்றாக உள்ளதா? எத்தனை முறை உறுதிமொழியும் செய்கிறீர்கள், இப்போது முதல் செய்ய மாட்டோம், இப்போது முதல் இவ்வாறு ஆகாது ஆனால் மீண்டும் மீண்டும் பிற வசமாகி விடுகிறீர்கள். ஆதலால் பாப்தாதாவிற்கு குழந்தைகள் மீது கோபம் வரவில்லை ஆனால் இரக்கம் வருகின்றது, பிற வசமாகி விடுகின்றனரே என. பிற வசமானவர் மீது இரக்கம் வருகிறது. எப்போது பாப்தாதா இத்தகைய இரக்க பாவனையுடன் குழந்தைகளைப் பார்க்கின்றார் என்றால் டிராமாவின் திரையில் என்ன நடக்கிறது? எப்போது வரை? இதற்கான பதிலை நீங்கள் சொல்லுங்கள். எப்போது வரை? குமாரர்கள் கூற முடியுமா -எப்போது இது முடிவடையும்? நிறைய திட்டங்கள் போடுகிறீர்கள், என்றால் எப்போது வரை என கூற முடியுமா? இறுதியில் எனில் இது எது வரை? கூறுங்கள். பதில் சொல்லுங்கள், எப்போது வரை? தாதிகள் கூறுங்கள். (சங்கம யுகம் உள்ள வரை கொஞ்சம் கொஞ்சம் இருக்கும்). அப்படியானால், சங்கம யுகம் எப்போது வரை? (எப்போது பரிஷ்தா ஆகி விடுவோமோ). அதுவும் கூட எப்போது வரை? (பாபாவே கூறுங்கள்). பரிஷ்தா நீங்கள் ஆக வேண்டுமா அல்லது தந்தையா? எனவே இதற்கான பதிலை சிந்தியுங்கள். தந்தையோ கூறுவார் இப்பொழுதே என ஆனால் நீங்கள் தயாரா? பாதி மாலைக்குக் கூட கை உயர்த்தவில்லை.

பாப்தாதா சதா குழந்தைகளை சம்பன்ன சொரூபத்தில் பார்க்க விரும்புகிறார். எப்போது கூறுகிறீர்களோ, தந்தைதான் என்னுடைய உலகம் என்று, இதுவே அனைவருமே கூறுகிறீர்கள்தான். இரண்டாவதாக ஏதாவது உலகம் உள்ளதா, என்ன? தந்தைதான் உலகம் என்றால் உலகத்தின் வெளியில் இன்னும் என்ன உள்ளது? சமஸ்கார மாற்றம் மட்டுமே செய்ய வேண்டியது. பிரமாணர்களுடைய வாழ்க்கையில் பெரும்பான்மையாகத் தடை ரூபமாவது -சம்ஸ்காரம்! உங்களுடைய சம்ஸ்காரமாக இருக்கலாம், பிறருடைய சம்ஸ்காரமாக இருக்கலாம். ஞானம் அனைவரிடமும் உள்ளது, சக்திகளும் அனைவரிடமும் உள்ளது ஆனால் காரணம் என்ன? எந்த சக்தி, எந்த

நேரத்தில் காரியத்தில் கொண்டு வர வேண்டுமோ, அந்த நேரத்தில் வெளிப்படுவதற்குப் பதில் சிறிது நேரம் கழித்து ஆகின்றது. பின்பு சிந்திக்கிறீர்கள் இப்படிக் கூறாமல் இப்படிக் கூறியிருந்தால் நன்றாக இருந்திருக்கும். இப்படி செய்யாமல் அப்படி செய்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்; ஆனால் எந்த நேரம் பாஸ் ஆகி இருக்க வேண்டுமோ அதுவோ கடந்து விடுகிறது. இப்படி எல்லோரும் தனக்குள் சக்திகளைப் பற்றி நினைக்கிறீர்கள், பொறுமை சக்தி இது, தீர்மானிக்கும் சக்தி இது என, ஆனால் உபயோகப்படுத்த வேண்டும். சிறிது நேரத்திற்கான வித்தியாசம்தான் ஆகி விடுகிறது. மற்றும் இன்னொரு விஷயம் என்ன ஆகிறது? போகட்டும், ஒரு முறை தேவையான நேரத்தில் சக்தி காரியத்தில் வரவில்லை மற்றும் பின்பு உணர்கிறீர்கள் இதைச் செய்யாமல் அதைச் செய்திருக்க வேண்டும். பின்னர் புரிந்து கொள்கிறீர்கள் ஆனால் அந்தத் தவறை ஒரு முறை அனுபவம் செய்த பின், அதன் அனுபவி ஆகி நல்ல முறையில் புரிந்துணர்ந்து இனி மேலும் செய்யக் கூடாது. இருந்தாலும் முன்னேற்றம் ஆகிறது. அந்த நேரத்தில் புரிந்து கொள்ள முடிகிறது, இது தவறு, இது சரி என; ஆனால் அதே தவறை மீண்டும் செய்யக் கூடாது, அதற்காக தனக்குத்தானே நல்ல விதமாக புரிந்துணர வேண்டும், அதிலும் முழுமையாகத் தேர்ச்சி பெற முடியவில்லை. மற்றும் மாயாவும் மிகவும் சாமர்த்தியமானது, அதே விஷயத்தில், உதாரணமாக உங்களுக்கு பொறுமை சக்தி குறைவு என்றால் அத்தகைய பொறுமை சக்தியை உபயோகப் படுத்தக்கூடிய விஷயங்களை, ஒரு முறை நீங்கள் புரிந்துணர்ந்து விட்டீர்கள் ஆனால் மாயா என்ன செய்கிறது எனில் மறு முறை கொஞ்சம் உருவத்தை மாற்றி வருகிறது. அதே விஷயம்தான் ஆனால் இந்நாட்களில் அதே பழைய பொருள்தான் உள்ளது ஆனால் மெருகேற்றி (polish) அதை புத்தம்புதியதாகத் தெரியுமாறு செய்து விடுகின்றனர். எனில் மாயாவும் அப்படி மெருகேற்றித்தான் வருகிறது, எந்த விஷயமாயினும் ரகசியம் அதுதான்; தனக்குள் பொறாமை வந்து விட்டது, எனில் பொறாமையும் விதவிதமான ரூபத்தில் உள்ளது, ஒரு ரூபம் மட்டுமில்லை. எனில் விதை பொறாமையினுடையது ஆனால் பல உருவங்கள். அதே உருவத்தில் வராது என்றால் பல முறை சிந்திக்கிறீர்கள் தான் இந்த விஷயம் முன்பே வந்துள்ளது, இது வேற விஷயம் என, ஆனால் அதே விதைதான், உருவம் மட்டும் மாறியுள்ளது. அதற்காக எந்த சக்தி தேவை? பகுத்தறியும் சக்தி! இதற்காக பாப்தாதா முன்பும்

கூறியிருந்தார், இரண்டு விஷயங்கள் மீது கவனம் தேவை என! ஒன்று, உண்மையான உள்ளம். உண்மையை உள்ளே வைக்காதீர்கள். உள்ளேயே வைப்பதால் 'கேஸ் பலூன்' (gas balloon) ஆகி, பின்பு இறுதியில் என்ன ஆகும்? வெடித்து விடும்! ஆகவே உண்மையான உள்ளம் -சரி, ஆத்மாக்களுக்கு முன்பு கொஞ்சம் தயக்கமாகி விடுகிறது, கொஞ்சம் வெட்கம் வருகிறது, நான் எந்தப் பார்வையில் பார்ப்பது என்பது தெரியவில்லை; ஆனால் உண்மையான உள்ளத்தினால், உணர்வுடன், பாப்தாதா முன் வையுங்கள் கட்டளையிடுவது போல் அல்ல -ஆம், என்னால் இந்த தவறு நடந்து விட்டது. உணர்கின்ற சக்தி மூலம், உண்மையான உள்ளம் மூலம், புத்தியினால் மட்டுமல்ல ஆனால் உள்ளபூர்வமாக ஒருவேளை பாப்தாதாவிற்கு முன் கூறி உணர்கிறீர்கள் என்றால் உள்ளம் காலியாகி விடும், குப்பையும் முடிந்து விடும். பெரிய விஷயம் ஏதும் நடப்பதில்லை, சிறியதுதான் நடக்கிறது ஆனால் ஒருவேளை உங்கள் உள்ளத்தில் சின்னச்சின்ன விஷயங்கள் சேர்ந்து கொண்டே இருந்தது என்றால் அதனால் உள்ளம் நிரம்பி விடுகிறது. காலியாக வைப்பதில்லைதானே. உள்ளம் காலியாக இல்லை என்றால் திலாராம் எங்கு அமர்வார்? அமர்வதற்கு இடமோ இருக்கட்டும், உண்மையான உள்ளத்தில்தான் இறைவன் உறைவார்! என்னவாக இருக்கிறேனோ, எப்படி இருக்கிறேனோ, பாபா நான் உங்களுடையவன்! பாப்தாதாவிற்குத் தெரியும் நம்பர்வார் ஆகத்தான் வேண்டும் என்பது. அதற்காக பாப்தாதா அந்தப் பார்வையில் உங்களைப் பார்க்கவில்லை ஆனால் உண்மையான உள்ளம் மற்றும் இரண்டாவது கூறியிருந்தார் -சதா புத்தியின் 'லைன்' (தொடர்பு) தெளிவாக இருக்கட்டும்! தொடர்பில் எவ்வித தொந்தரவு, அறுபடுவது கூடாது. பாப்தாதா சரியான நேரத்தில் கூடுதல் சக்தியை தர விரும்புகிறார், ஆசீர்வாதங்கள் தர விரும்புகிறார், கூடுதல் உதவி செய்ய விரும்புகிறார், ஒருவேளை தொந்தரவு ஆகியது என்றால் அது கிடைக்காமல் போய் விடும். 'லைன்' தெளிவாகவே இல்லை, சுத்தமாக இல்லை, அறுபடுகிறது, எனில் என்ன பிராப்தி ஆக வேண்டுமோ அது ஆகாது. காரணம் என்ன? தந்தையோ வள்ளல், கடல், யார் எவ்வளவு எடுத்துக் கொள்ள விரும்புகிறாரோ பாப்தாதாவினுடைய களஞ்சியத்தில் பூட்டு-சாவி கிடையாது, காவலாளி கிடையாது. பாபா என கூறியதும் உடனே ஆஜர்! பாபா கூறினார் எடுத்துக் கொள்! வள்ளல் அல்லவா. வள்ளலும்கூட, கடலும்கூட என்றால் என்ன குறை

இருக்கும்? இந்த இரண்டு விஷயங்களின் குறைதான் ஏற்படுகிறது; உண்மையான உள்ளம், மற்றும் தூய உள்ளம், அதிமேதாவித்தனம் கூடாது! அதிமேதாவித்தனம் நிறைய செய்கிறீர்கள், பல்வேறு விதமான அதிமேதாவித்தனம். தூய உள்ளம், உண்மையான உள்ளம் மற்றும் புத்தியின் தொடர்பு தெளிவாக, சுத்தமாக சதா உள்ளதா? என சோதனை செய்யுங்கள். இதை அவசியம் செய்யுங்கள்.

மேலும் விசேஷமான விஷயம் -இந்த சீசனுடைய இறுதி மிலன் ஆதலால் கூறுகிறோம், இரட்டை வெளிநாட்டவருக்காக மட்டுமல்ல அனைவருக்காகவும்! இறுதி மிலனில் நீங்கள் முன்னே அமர்ந்துள்ளதால் உங்களுக்குத்தான் கூற வேண்டியுள்ளது. பாப்தாதா பார்த்தார், சம்ஸ்காரம் அல்லது இயல்பு என்று கூறினாலும் சரி, இயல்போ ஒவ்வொருவருக்கும் தனித்தனியானது ஆனால் எல்லோருடைய சிநேகி, எல்லா விஷயங்களில், சம்பந்தங்களில் பலன், மனதில் வெற்றி மற்றும் வார்த்தையில் இனிமை, இவை எப்போது சரள சம்ஸ்காரம் இருக்குமோ அப்போது தான் வரும். அலட்சியமான இயல்பு கூடாது. அலட்சியத்தன்மை தனிப்பட்ட விஷயம். எப்படி நேரமோ, எப்படி மனிதரோ, எப்படி சூழ்நிலையோ அவற்றைப் பகுத்தறிந்து தன்னை சரளமாக்குவது -இதைத்தான் சரள சம்ஸ்காரம் என கூறப்படுவது. சரளம் (easy) என்றால் எல்லோருடனும் சகஜமாக பழகுவது. இறுக்கமான இயல்பு, அதிகமான அதிகாரப்பூர்வ இயல்பு கூடாது, அதிகாரப்பூர்வமாக இருப்பது நல்லது ஆனால் மிக அதிகமாக கூடாது மற்றும் நேரத்திற்கு ஏற்றவாறு எப்படி நேரமோ, அப்போது ஒருவேளை யாராவது அதிகாரப்பூர்வமாகி விட்டால் அந்த குணத்திற்குப் பதிலாக அவரது சிறப்புகள் அந்த நேரத்தில் செயல்படாது. தன்னை வளைந்து கொடுப்பது, எல்லோருடனும் சகஜமாக பழகுவது, சிறியவரோ பெரியவரோ; பெரியவருடன் பெரியவராக, சிறியவருடன் சிறியவராக, நண்பர்களுடன் நண்பனாக, பெரியவர்களுடன் மரியாதையுடன் நடப்பது. எளிதாக வளைத்துக் கொள்வது, உடலை எளிதாக வைக்கிறீர்கள் என்றால் எங்கு சென்றாலும் மனச்சோர்வடைவது, இறுக்கமாவது என்றால் நல்ல மனநிலை இருக்காது. அலட்சியமும் கூடாது, சரளமாக இருந்தது என்றால் எங்கு வேண்டுமானாலும் சரளமாக இருக்க முடியும்; அலட்சியமாகி விடக்கூடாது. பாப்தாதா கூறினார், சரளமாகி விட வேண்டாம் எனில்

சரளமாகி விடுவதல்ல, இப்படி செய்யக்கூடாது. சுலபமான இயல்பு என்றால் எப்படி நேரமோ அப்படி தனது சொரூபத்தை ஆக்கிக் கொள்வது. நல்லது.

இரட்டை வெளிநாட்டினருக்கு நல்ல வாய்ப்பு கிடைத்துள்ளது. பாருங்கள், மதுபன் வாசிகளுக்கு இந்த சீசனில் வாய்ப்பு கிடைக்கவில்லை ஆனால் வெளிநாட்டினருக்கோ இரண்டு முறை (மிலன்) கிடைத்துள்ளது. செல்லமானவர்கள் ஆகி விட்டீர்கள். பாப்தாதாவிற்கு இரட்டை வெளிநாட்டினர் பிரியமானவராக உள்ளனர் ஏனெனில் தைரியம் வைத்து நன்றாக முன்னேறிக் கொண்டிருக்கிறீர்கள். தைரியமுள்ளவர்கள்தானே. குழப்பமடைபவர்கள் இல்லை. குழப்பமடைகிறீர்களா? சின்னச்சின்ன விஷயங்கள் மீது குழப்பமடைகிறீர்களா? அடைவதில்லை. பாப்தாதா பார்த்தார், ஆரம்பத்தில் மிகுந்த குழப்பமடைந்தீர்கள், இப்போது வித்தியாசம் உள்ளது. தைரியம் நன்றாக வைக்கிறீர்கள் மற்றும் தைரியம் இருப்பதால் தந்தையின் உதவியும் கிடைக்கிறது. வித்தியாசம் உள்ளதல்லவா? ஆரம்பத்தில் இருந்ததை விட வித்தியாசம் உள்ளதல்லவா, இப்போது கதை சொல்வது குறைந்துள்ளது. அதிகமாகப் பேசாதீர்கள். தேவை எனில் கண்டிப்பாக பேசுங்கள், உள்ளத்தில் வைக்காதீர்கள் ஆனால் சுருக்கமாகச் செய்யுங்கள். அதிகமாக விஸ்தாரம் வேண்டாம், 10-வார்த்தைகளில் கூறுவதை, 2-3 வார்த்தைகளில் கூற முடியும் ஏனெனில் அதிகமாகி விடும். இப்போதும் பாருங்கள் அதிகமாகி விட்டீர்கள். இரட்டை வெளிநாட்டவரின் எண்ணிக்கை அதிகமாகி உள்ளது மற்றும் அதிகமாகத்தான் வேண்டும். எப்போது அதிகமாகிக் கொண்டே செல்கிறீர்களோ அப்போது கண்டிப்பாக குறைக்கத் தானே வேண்டும். இருப்பினும், அதிகமான எல்லை வரை இரக்க மனமும் வைக்கிறீர்கள், மறைப்பது மிகக் குறைவே. பாப்தாதா இரக்க மனம் என எதைக் கூறுகிறார் - யாரிடம் சுபாவ, சம்ஸ்காரம், பேச்சு, மனதின் சங்கல்பம், கொஞ்சம் கூட பழைய குப்பை இல்லாதிருப்பது! அந்த நாள் எப்போது வரும் என்றால் யாராயிருப்பினும், பாரதவாசியோ, வெளிநாட்டவரோ வந்தால், சந்திப்பது மற்றும் வரிசையிலுள்ள எல்லோரும் கூற வேண்டும் ஓ.கே., ஓ.கே., ... வருமா அந்த நாள்? எப்படி நீங்கள் விண்ணப்பித்துள்ளீர்கள் ஒரு நொடி திருஷ்டி பெற்று செல்கிறோம் என. பாப்தாதா கூறுகிறார்,

## 2000 அவ்யக்த முரளி

இன்று உங்களது நம்பிக்கையை நிறைவேற்றுவோம் ஆனால் அத்தகைய நாளைக் கொண்டு வாருங்கள், தாதிகள் முன்பாகவும் சரி, பாப்தாதாவிற்கு முன்பாகவும் சரி, அத்தகைய வரிசையில் அனைவரும் உளமாரக் கூற வேண்டும், ஓ.கே.! இது சாத்தியமா? குமாரர்கள், இது சாத்தியமா? (முழு சபையினரையும் கேட்டார்). எனில் இந்த நல்ல செய்தி மிக நன்றாக உள்ளது. எப்போது ஆகும்? என்ற இந்தக் கேள்வி எழுகிறதல்லவா. கூறுங்கள், மூத்த சகோதரர்கள் கூறுங்கள், தேதியைக் கூறுங்கள். (இப்போது)!

நல்லது. பாப்தாதா கால அவகாசம் தருகிறார். இப்போது கூறினால் சிந்திப்பீர்கள் இந்த விஷயமோ நான் நினைத்ததுதான் என்று கூறுவீர்கள் ஆனால் அடுத்த சீசனில் அதே போல கூறுவீர்கள். 6-மாதமோ உள்ளது, 8-மாதம் ஆகி விடுகிறது. இது சம்மதமா? மனதால் ஓ.கே., அப்படியில்லை ஓ.கே., ஓ.கே.,னு அப்படியே சொல்லி விட்டு சென்று விடுவது. குமாரர்களில் யார் தயாரோ கை உயர்த்துங்கள். பாதி பேர்தான், மீதம் யார் கை உயர்த்தவில்லையோ அவர்களுக்கு எவ்வளவு கால அவகாசம் தேவை? முழு வருடம் தேவையா? ஒரு வருடத்தில் தயாராகி விடுவீர்களா? ஒரு வருடத்தில் தயாராகி விடுபவர்கள் கை உயர்த்துங்கள். நல்லது, ஒரு மாதம் வேண்டுமா? யார் கை உயர்த்தவில்லையோ, அவர்கள் கடிதம் மூலம் தெரிவிக்கவும், எவ்வளவு கால அவகாசம் தேவை என்பதை. சரியா. நல்லது. சகோதரிகள் தயாரா, கை உயர்த்துங்கள். நல்லது, யார் இப்போதே தயார் என்பவர்கள் கை உயர்த்துங்கள். (பாப்தாதா சான்றிதழ் கொடுப்பார் எனில்) பாப்தாதாவோ மாலையே அணிவிப்பார். மாலை அணிய வேண்டும்தானே? வெளிநாட்டினர் மதிப்புடன் தேர்ச்சி பெற்றால் மாலையிலோ வந்து விடுவீர்கள்தானே. எனில் மாலை சீக்கிரம் தயாராகட்டும். உறுதியாக இருக்கிறீர்கள்தானே. நன்றாக உள்ளது. தைரியம் வைப்பவர்களுக்கு கூடுதல் உதவி கிடைக்கும். பாருங்கள், யாரை தாதிகள் என கூறுகிறீர்களோ, அவர்கள் எப்படி ஆனார்கள்? தைரியம் வைத்தார்கள் மற்றும் தனக்குத்தானே உறுதியாக உறுதிமொழி செய்தார்கள், நாம் செய்தே ஆக வேண்டும், ஆகியேத் தீர வேண்டும் என! எனில் இன்று தாதிகளுடைய பட்டியலில் உள்ளனர். இரட்டை வெளிநாட்டினரை 108-மணி மாலையில் முன்னே வைக்கின்றோம், தயாராகுங்கள். வெற்றி மாலையில் வருகின்ற

மணிகளுக்கு விழா எடுப்போம். யார் வேண்டுமானாலும் வரலாம், முன்னே அமர்ந்திருப்பவர்கள் மட்டுமல்ல, யார் வேண்டுமானாலும். பாப்தாதா விழா எடுப்பார், வெற்றி ரத்தினம்! முன்னால் இருப்பவர்கள் எல்லோரும் வர வேண்டும். வர வேண்டும்தானே. கூறுங்கள், ஏன் வர மாட்டோம். நாங்கள் வரவில்லை எனில் வேறு யார் வருவார்! பெருமிதம் கொள்ளுங்கள், நிச்சயம் வைத்தீர்கள் என்றால், என்ன பெரிய விஷயம். தந்தையுடைவராகி விட்டீர்கள், இப்போதோ திரும்பிச் செல்ல வேண்டாம். ஒருவேளை திரும்பியும் சென்றீர்கள் என்றால் அந்த உலகிலும் இருக்க மாட்டீர்கள், இந்த உலகிலும் இருக்க மாட்டீர்கள், ஆதலால் திரும்பிச் செல்லக் கூடாது. முன்னேறிக் கொண்டே இருக்க வேண்டும். எப்போது உலகமே தந்தை என ஆகி விட்டதோ, மற்றபடி என்ன உள்ளது. பாப்தாதாவிற்கு இரட்டை வெளிநாட்டினர் மீது மிகுந்த சிரேஷ்ட எதிர்பார்ப்புகளும் நம்பிக்கைகளும் உள்ளது -இரட்டை வெளிநாட்டினருள் அத்தகைய ரத்தினங்கள் வெளிப்படுவார்கள் 'லாஸ்ட் ஸோ ஃபாஸ்ட்' (last so fast) பட்டியலில் வருவார்கள், 'ஃபாஸ்ட் ஸோ ஃபர்ஸ்ட்' (fast so first). பாரதவாசிகளும் வருவார்கள் ஆனால் இன்று இரட்டை வெளிநாட்டினர் முன்னால் அமர்ந்துள்ளார்கள் ஆதலால் அவர்களுக்குக் கூறிக் கொண்டு இருக்கிறோம். 'லாஸ்ட் ஸோ ஃபாஸ்ட் மற்றும் ஃபர்ஸ்ட்' வருவது என்பது எவ்வளவு ஆச்சரியமானது. இருக்கத்தானே வேண்டும். யார் முன்னால் வருகிறார்களோ, அவர்கள் பிரத்யக்ஷம் ஆவார்கள். ஆகத்தானே வேண்டும். சென்டர் நிவாசிகள் என்ன நினைக்கிறீர்கள்? 'ஃபாஸ்ட்' ஆக வருவீர்களா? மிக்க நல்லது! பாப்தாதாவிற்கு குஷியாக உள்ளது, தைரியம் உள்ளவர்கள் அவசியம் வெற்றியாளர் ஆகியேத் தீர வேண்டும். ஆவார்களா, இல்லையா என்பதில்லை. ஆகியேத் தீர வேண்டும். எனில் அத்தகைய நம்பிக்கை தனக்குள் இருக்கிறதா?

எல்லோரையும் விட வெகு தூர தேசத்திலிருந்து யார் வந்துள்ளார்? அதிக தூரத்துவாசி பாப்தாதாவா அல்லது நீங்களா? எவ்வளவு தான் நீங்கள் கூறினாலும் வெகு தூரத்திலிருந்து வந்திருப்பவர், பாப்தாதாவை விட தூரவாசி யாரும் இல்லை, எனில் திருப்திதானே? இரட்டை வெளிநாட்டினர் திருப்தி அடைந்தீர்களா? இது நடந்தது, இது நடக்கவில்லை என பின்னர் கூறக்கூடாது. நல்லது.

## 2000 அவ்யக்த முரளி

இங்கே அமர்ந்துள்ள பாரதவாசிகள் கை உயர்த்துங்கள். மதுபன்வாசிகள் கை உயர்த்துங்கள். மதுபன்வாசிகளோ திறமைசாலிகள். டோலி கிடைக்கவில்லை என்ற மதுபன்வாசிகளின் புகார் ஒன்று உள்ளது; பாப்தாதா கூறுகின்றார் இந்த சீசனில் நீங்கள் பாப்தாதா மூலம் தில்குஷ் மிட்டாய் சாப்பிடுங்கள். மதுபன்வாசிகள், சாந்திவன்வாசிகள், ஞானசரோவர்வாசிகள், ஹாஸ்பிடல்வாசிகள் இவர்களுடைய திட்டம் பாப்தாதாவிடம் உள்ளது, புகார் எதுவும் இல்லை. மதுபன்வாசிகளையோ குஷியாக்க வேண்டும்தானே, இல்லையேல் நீங்கள் எப்படி வருவீர்கள். இவர்களுடைய பாகம் தான் முதலில், எவ்வளவு உழைக்கிறார்கள் நாலாபுறமும், என்றால் உழைப்பிற்கான பிரத்யக்ஷ பலன் கிடைத்தாக வேண்டும். நேரம் இல்லை ஆனால் பாப்தாதா முதலில் மதுபன்வாசிகளைத்தான் நினைவு செய்கின்றார்.

முதன் முறையாக புதிய தேசங்களிலிருந்து யாரெல்லாம் வந்துள்ளனர்? (கரிபியன் பக்கத்திலிருந்து -குவைத், குருஸேவ், எகிப்து). வாழ்த்துக்கள்! எந்த ஒரு குடும்பத்திலும் புதிதாக குழந்தை பிறந்தது எனில் வாழ்த்துக்கள் கூறுகின்றனர். உங்களுடைய பரிவாரத்திலும் சேர்ந்து விட்டீர்கள், குஷி தானே.

நல்லது. சென்டரில் இருப்பவர்கள் முன்னால் அமர்ந்திருக்கிறீர்கள். கை உயர்த்துங்கள். சென்டரில் இருப்பவர்கள் என்பதில் உறுதியாக இருக்கிறீர்களா, இந்த முத்திரையை இட்டுள்ளீர்கள்தானே. சர்வ சக்திவானின் அரசாங்கம் மூலம் 'சதா உறுதியாக இருக்கிறீர்கள்', இந்த முத்திரை இடப்பட்டுள்ளதா? இடப்பட்டுள்ளதா அல்லது லேசாக உள்ளதா? அழியக்கூடியதா? அப்படியில்லைதானே? யாரெல்லாம் சென்டரில் இருப்பவர்களோ, நாம் இறுதி வரை பாப்தாதாவின் துணையாக இருப்போம் மற்றும் கூடவே செல்வோம் என நினைக்கிறீர்களா! இப்போது துணையாக இருப்போம் மற்றும் பின்பு கூடவே செல்வோம். அப்படி இருந்தால் கை உயர்த்துங்கள். டி.வி.யில் படம் பிடியுங்கள். உங்களுடைய ஃபோட்டோ'வை பாப்தாதா வதனத்தில் அலங்கரித்து வைத்திருப்பார். மிக்க நல்லது. முன்கூட்டியே இறுதி வரைக்குமான வாழ்த்துக்கள்! நல்லதுதானே! ஒருவேளை உடனிருப்பவர் ஒருவருக்கு கூட மேலே கீழே ஆனது என்றால் நன்றாக இருக்காது அல்லவா எனில் எல்லோருமே சேர்ந்தே செல்வோம். முன்

பின் இல்லை, கூடவே செல்வோம். இப்போது கூட சேவையில் கூடவே இருப்பீர்கள் மற்றும் தனது வீட்டிற்கு கூடவே செல்வீர்கள் மற்றும் பின்பு ராஜ்யத்திலும் பிரம்மாதந்தையுடன் இருப்பீர்கள். உறுதியாக இருக்கிறீர்கள்தானே. என்ன ஆவீர்கள்? கிருஷ்ணருடைய தோழி ஆவீர்களா? (சகோதரி ஆவோம்) நல்லதுதானே? (பாபா முன்னால் இருப்பவர்களிடம் தனியாக கேட்கின்றார்). ஒருவேளை இங்கு கூடவே இருந்தால், அங்கும் கூடவே இருப்பீர்கள் என தந்தை வாக்குறுதி அளிக்கிறார்; ஒருவேளை இங்கு இருந்தால் அங்கும் நிச்சயம்! நீங்கள் அனைவரும் சேர்ந்தே இருப்பீர்களா அல்லது தூர தூரமாகவா? அவ்வப்போது சந்திக்க வருவீர்கள். ஸ்ரீகிருஷ்ணருடன் படிப்பது, இன்பமாக விளையாடுவது, சுற்றுவது... பாண்டவர்களும் இன்பமாக விளையாடுவீர்களா அல்லது சகோதரிகள் மட்டும் விளையாடுவார்களா? இருவருக்குமே வாய்ப்பு உள்ளது, யாருக்கு என்ன விருப்பமோ அதைச் செய்ய முடியும் ஏனெனில் இப்போது இடம் முடிவாகவில்லை, இரண்டு மட்டுமே முடிவாகி உள்ளது. 3-4'ல் இருந்து காலியாக உள்ளது, அறிவிக்கப்படவில்லை. நம்பர் எடுக்க முடியும். நல்லது. குமரார்கள் நன்றாக பட்டி செய்தனர். டீச்சர் யார்?

(வெளிநாட்டு இளைஞர்களின் கூட்டம் ஞானசரோவரில் நடந்தது). நன்றாக இருந்ததா? நல்லது. எல்லோரையும் பார்த்து அதிகப்படியான குஷி யாருக்கு ஏற்படுகிறது? பாப்தாதாவிற்கு, பின்பு இரண்டாவதாக? ஒவ்வொருவரும் கூறுவீர்கள் -எனக்கு என்று. மிக நல்லது. தாதிகளுக்கு மிகுந்த குஷி. களைப்படையவில்லைதானே? அதிக குஷி தாதிகளுக்கு ஏற்படுகிறதா அல்லது உங்களுக்கா? (இருவருக்குமே!). நல்லது, இப்போது இரட்டை வெளிநாட்டவருடன் தனியாக சந்தித்தோம்தானே. அரட்டையும் அடித்தோம். தூரத்தில் அமர்ந்திருந்தாலும் அருகில்தான் இருக்கிறீர்கள்.

டீச்சர்கள் அதிகம் உள்ளனர், நன்றாக இருக்கிறது இரட்டைப் பாகம் நடித்துக் கொண்டிருக்கிறீர்கள். இரட்டைப் பாகம் நடித்துக் கொண்டிருப்பவர்களுக்கு இரட்டை உதவி கிடைக்கிறது. தைரியம் நன்றாக உள்ளது. நல்லது. எல்லோருக்கும் டிரில் (drill) ஞாபகம் இருக்கா அல்லது மறந்து விட்டீர்களா? உடனே எல்லோரும் இந்த டிரில் செய்யுங்கள், சுற்றி வாருங்கள். நல்லது.

## 2000 அவ்யக்த முரளி

நாலாபுறமும் உள்ள சர்வ சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, நாலாபுறத்திலிருந்தும் அன்பு நினைவுகள், செய்தி அனுப்புகிறவர்கள் மிக நல்ல விதவிதமான சம்பந்தத்தின் மூலம் சிநேகத்தின் கடிதம் மற்றும் தனது நலம் பற்றி எழுதியுள்ளீர்கள், சேவைச் செய்திகளை ஊக்கத்துடன், திட்டங்களை மிக நல்ல விதமாகவும் எழுதியுள்ளீர்கள், அவை பாப்தாதாவிற்குக் கிடைத்தன. எந்த அன்புடன், உழைப்புடன் எழுதப்பட்டதோ, யார் வேண்டுமானாலும் எழுதி இருக்கட்டும், அவர்கள் ஒவ்வொருவரும் தனது பெயரால் பாப்தாதாவிற்கு, திலாராமுடைய இதயத்திலிருந்து அன்பான நினைவுகளை ஏற்றுக் கொள்ளுங்கள். ஆன்மீகக் குழந்தைகள் தந்தையை விட்டுப் பிரிய முடியாது, தந்தையும் குழந்தைகளை விட்டுப் பிரிய முடியாது.

நாலாபுறமும் உள்ள சதா தன்னை தந்தைக்குச் சமமாக ஆக்கக்கூடிய, சதா தந்தையுடைய கண்களில், இதயத்தில், நெற்றியில் அருகில் இருக்கக் கூடிய, சதா ஒரு தந்தையுடைய உலகில் இருக்கக்கூடிய, சதா ஒவ்வொரு அடியிலும் பாப்தாதாவைப் பின்பற்றக்கூடிய, சதா வெற்றியடைந்த, வெற்றியடையும், வெற்றி அடையக்கூடிய -அத்தகைய நிச்சயம் மற்றும் போதையில் இருக்கக்கூடிய, அத்தகைய மிக உயர்ந்த காணாமல் கண்டெடுக்கப்பட்ட, அன்பிலும் அன்பான, எல்லாக் குழந்தைகளுக்கும் பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

தாதிஜீ மற்றும் தாதி ஜானகி பாப்தாதாவைக் கட்டிப்பிடிக்கிறார். எல்லோருக்கும் குஷிதானே அல்லது நாமும் தாதிக்களாக இருந்திருக்கலாம் என நினைக்கிறீர்களா. நல்லது, எல்லோருக்கும் அன்பு உள்ளது, இதுதான் ஆசீர்வாதம் அளிக்கிறது. அன்பு உள்ளது ஆதலால் அனைவருக்கும் குஷி ஏற்படுகிறது. குஷியாக இருக்கணும், ஒருபோதும் மனச்சோர்வு (mood-off) அடையக்கூடாது. சதா ஒரே நிலையான குஷியான முகம் இருக்கட்டும். யார் பார்த்தாலும் அவருக்கு ஆன்மீக குஷியின் அனுபவம் ஆகட்டும். இது சேவையின் சாதனம் ஆகும். முகத்தில் ஆன்மீக குஷி இருக்கட்டும், சாதாரண குஷி இல்லை, ஆன்மீக குஷி. முகம் மாறக்கூடாது. அப்படி ஒரே மாதிரியான நிலை, ஒரே மாதிரியான முகம் இருக்கட்டும். இருக்க முடியுமா? ஒரே

மாதிரியான மனநிலை உள்ளதா? இருக்கிறதா அல்லது இருக்கத்தான் வேண்டுமா? இப்போது முடியுமா? எப்போதாவது யாராவது திடீரென உங்களை ஃபோட்டோ எடுத்தால், ஆன்மீக புன்சிரிப்பின் ஃபோட்டோ ஆக இருக்கட்டும். வேலை தொழில் செய்து கொண்டிருக்கிறீர்கள், வேலையும் மிகுந்த 'டென்ஷன்' ஆக உள்ளது என்றாலும் முகத்தில் குஷி இருக்கட்டும். பின்பு உங்களுக்கு அதிகம் உழைப்பும் கூட செய்ய வேண்டியிருக்காது. ஒரு மணி நேரம் பேசுவதற்குப் பதில் ஒருவேளை உங்களுடைய ஆன்மீக புன்சிரிப்பின் முகம் இருந்தது என்றால் அவர் ஒரு நொடியில் செய்து விடுவார் ஏனெனில் வெளிப்படையானதற்குச் சான்று தருவதற்கு அவசியம் இருப்பதில்லை. யாரைச் சந்தித்தாலும், எப்படி சந்தித்தாலும், திட்டுபவரைச் சந்தித்தாலும், அவமானப்படுத்துபவரைச் சந்தித்தாலும், மரியாதை தராதவர்களைச் சந்தித்தாலும், மதிப்பு கௌரவம் தராதவர்களைச் சந்தித்தாலும் ஆனால் உங்களிடம் ஒரே மாதிரியான முகம், ஆன்மீக புன்சிரிப்பு இருக்குமா? குமாரர்களால் முடியுமா? பாண்டவர்களால் முடியுமா? மற்றும் முயற்சி மூலம் தப்பித்து விடுவீர்கள், உழைப்பு இருக்காது. நான் ஆன்மீக புன்சிரிப்புதான் செய்ய வேண்டும். எது வேண்டுமானாலும் போகட்டும், நான் எனது புன்சிரிப்பை விட்டுவிடக் கூடாது, இப்படி இருக்க முடியுமா? யோசிக்கிறீர்கள்? (செய்து காட்டுவோம்) மிக நல்லது, வாழ்த்துக்கள். யார் முன்னால் அமர்ந்திருப்பவர்களோ செய்யத்தான் வேண்டும். நல்லதுதானே -தானும் குஷி, மற்றவர்களும் குஷி, வேறு என்ன வேண்டும்? பாப்தாதாவோ குஷியாக இருக்கிறார், தாதிகளும் குஷியாக உள்ளனர். (பாபா நீங்கள் இப்படியே சந்தித்துக் கொண்டே இருங்கள்) மற்றும் இல்லையேல் குஷி பறந்து விடும். நீங்கள் சதா புன்சிரித்தபடியே இருங்கள், தந்தையும் சந்தித்துக் கொண்டே இருப்பார். மிக நல்லது. ஓம் சாந்தி.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 11.11.2000 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சம்பூர்ணத்தின் சமீபத்தின் மூலம் பிரத்யக்ஷதாவின் சிரேஷ்ட சமயத்தை சமீபத்தில் கொண்டு வாருங்கள்!

இன்று பாப்தாதா தனது புனிதமான (Holiest) மிக மேலான (Highest) மிக பாக்கியசாலி (Luckiest) மிகவும் இனிமையான (Sweetest) குழந்தைகளை பார்க்கின்றார். முழு உலகிலும் அவ்வப்போது மிகவும் புனிதமானவர் வந்து கொண்டிருக்கின்றனர். நீங்களும் புனிதமானவர்களே ஆனால் நீங்கள் இயற்கையை வென்று அதையும் சதோபிரதானமாக்கி விடுகிறீர்கள். உங்களுடைய தூய்மையின் சக்தி இயற்கையையும் சதோபிரதான தூய்மை ஆக்கி விடுகிறது. எனவே ஆத்மாக்களாகிய நீங்கள் அனைவரும் இயற்கையின் இந்த சரீரம் கூட தூய்மையாக அடைகிறீர்கள். உங்களின் இந்த தூய்மையின் சக்தி உலகத்தின் ஜட மற்றும் சைத்தன்ய மாக்கி விடுகிறது. எனவே உங்களுக்கு சரீரம் கூட பவித்திரமாக கிடைக்கிறது. ஆத்மாவும் தூய்மை, சரீரமும் தூய்மை மற்றும் இயற்கையின் சாதனங்கள் கூட சதோ பிரதான பாவனமாகி விடுகின்றன. எனவே உலகத்தில் மிகவும் புனிதமான ஆத்மாக்கள் நீங்கள். உலகத்தின் மிக புனித ஆத்மாக்களாக உங்களை நீங்கள் உணர்கிறீர்களா? மிக மேலானவர்களும் நீங்களே, ஏன் மேலானவர்கள்? ஏனெனில் உயர்ந்ததிலும் உயர்ந்த பகவானை அறிந்து கொண்டு உள்ளீர்கள். மிக மேலான தந்தையின் மூலம் உயர்ந்ததிலும் உயர்ந்த ஆத்மாக்கள் ஆகி விட்டீர்கள். சதாரண ஸ்மிருத்தி, விருத்தி, திருஷ்டி, கிருத்தி (செயல்) அனைத்தும் மாறி சிரேஷ்ட ஸ்மிருத்தி சொரூபம், சிரேஷ்ட விருத்தி, சிரேஷ்ட திருஷ்டியும் ஆகி விடுகிறது. எவரையேனும் சந்திக்கிறீர்கள் என்றால் எந்த விருத்தியுடன் (உள் உணர்வு) சந்திக்கிறீர்கள்? சகோதரத்துவ உணர்வுடன் ஆத்மீக கண்ணோட்டத்துடன், மங்கள பாவனையுடன், பிரபு (ஈஸ்வரிய) குடும்ப உணர்வுடன் இல்லையா? ஆக மிக உயர்ந்தவர்களாகி விட்டீர்கள். மாறி

விட்டீர்கள் இல்லையா? மேலும் எவ்வளவு அதிர்ஷ்டசாலிகள்! எந்த ஜோதிடரும் உங்கள் பாக்கியத்தின் ரேகையை இழுக்க வில்லை, சுயம் பாக்கியத்தை வாரி வழங்கும் வள்ளல் உங்களது பாக்கிய ரேகையை இழுத்துள்ளார். எவ்வளவு தூரம் உத்திரவாதம் அளித்துள்ளார்! 21-பிறவிகளுக்கான அதிர்ஷ்ட ரேகையின் அழிவற்ற உத்திரவாதத்தை வழங்கியுள்ளார். ஒரு பிறவிக்கல்ல. 21-பிறவிகளுக்கு துக்க அசாந்தியின் அனுபவமே ஏற்படாது. சதா சுகமாயிருப்பீர்கள். வாழ்க்கையில் மூன்று விஷயங்கள் வேண்டும். ஆரோக்கியம், செல்வம் மற்றும் மனமகிழ்ச்சி இம்மூன்றும் உங்கள் அனைவருக்கும் பாபாவின் மூலம் ஆஸ்தியாக கிடைத்து விட்டது. 21-பிறவிகளுக்கான உத்திரவாதம்தான்! அனைவரும் இந்த உத்திரவாதத்தைப் பெற்றுள்ளீர்களா? பின்னால் அமர்ந்துள்ளவர்களுக்கு உத்திரவாதம் கிடைத்துள்ளதா? அனைவரும் கை உயர்த்துகிறார்கள் மிகவும் நல்லது. குழந்தை ஆவது என்பது தந்தையின் மூலம் ஆஸ்தியை பெறுவது. குழந்தையாக ஆகவில்லையா? ஆகிக் கொண்டிருக்கிறீர்களா? ஆகிக் கொண்டிருக்கிறீர்களா? அல்லது ஆகி விட்டீர்களா? குழந்தையாக ஆவது கிடையாது. குழந்தையாகவே பிறந்து ஆவது. பிறந்தவுடனேயே தந்தையினுடைய ஆஸ்திக்கு அதிகாரியாகி விட்டீர்கள். ஆக. இப்படிப்பட்ட சிரேஷ்ட பாக்கியத்தை தந்தையின் மூலம் அடைந்து விட்டீர்கள். அடுத்து மிகவும் செல்வந்தர்களும் நீங்களே. பிராமண ஆத்மாக்கள் நீங்கள்; சத்திரியர்கள் அல்ல. நான் சிரேஷ்ட ஆத்மா, இப்படி அப்படியானவன் அல்ல, உலகிலேயே மிகப் பெரிய செல்வந்தன் என்று பிராமண ஆத்மாக்கள் அனுபவம் செய்கின்றனர். பிராமண ஆத்மாக்கள் என்றால் உலகிலேயே மிகப் பெரிய செல்வந்தர் ஏனெனில் பிராமண ஆத்மாக்களுக்கு பரமாத்மாவின் நினைவின் மூலம் ஒவ்வொரு அடியிலும் பன்மடங்கு செழிப்பாகிறது. ஆக முழு நாளில் எத்தனை அடி எடுத்து வைக்கிறீர்கள் நினைத்துப் பாருங்கள்! அப்படியானால் ஒவ்வொரு அடியிலும் பன்மடங்கு பிராப்தம் என்றால் முழுநாளில் எவ்வளவு மடங்கு ஆகி விட்டது. இப்படிப்பட்ட ஆத்மாக்களாக தந்தையின் மூலம் ஆகி விட்டீர்கள். நான் பிராமண ஆத்மா, எப்படிப்பட்டவன் இந்த நினைவு இருப்பதே பாக்கியமாகும். ஆக இன்று பாப்தாதா ஒவ்வொருவருடைய நெற்றியிலும் பாக்கியத்தினுடைய பிரகாசமான நட்சத்திரத்தைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார். நீங்களும் கூட உங்களின் பாக்கிய நட்சத்திரத்தை

பார்த்துக் கொண்டிருக்கிறீர்களா? பாப்தாதா குழந்தைகளைப் பார்த்து குஷி அடைகிறார்களா? அல்லது குழந்தைகள் தந்தையைப் பார்த்து குஷி அடைகிறார்களா? யார் குஷி அடைகிறார்? தந்தையா? குழந்தைகளா? (குழந்தைகள்) தந்தை குஷியடைவதில்லையா? தந்தை குழந்தைகளை பார்த்து குஷியடைகிறார், குழந்தைகள் தந்தையைப் பார்த்து குஷியடைகிறார்கள். ஏனெனில் இது பிரபுவினுடைய சந்திப்பு, இந்த பரமாத்ம அன்பு, இந்த பரமாத்ம ஆஸ்தி, இந்த பரமாத்ம பிராப்தி இச்சமயத்தில்தான் கிடைக்கிறது. "இப்பொழுதில்லையேல் எப்பொழுதும் இல்லை" என்ற நிலை இருக்கிறதா?

பாப்தாதா இப்பொழுது ஒரே ஒரு விஷயத்தை குழந்தைகளுக்குத் திரும்ப நினைவூட்டுகிறார் அது எந்த விஷயமாக இருக்கும்? புரிந்து விட்டீர்கள் இல்லையா? இப்பொழுது சிரேஷ்ட சமயத்தை அருகில் கொண்டுவாருங்கள்- இதைத்தான் பாப்தாதா நினைவூட்டுகிறார். இது உலக ஆத்மாக்களின் கூக்குரல்; அதை கொண்டுவருவது யார்? நீங்களா? அல்லது வேறு யாருமா? நீங்கள் அனைவரும்தானே? மிகவும் அற்புதமான சிரேஷ்ட சமயத்தை சமீபத்தில் கொண்டு வருபவர்களே நீங்கள் அனைவரும்! அப்படி யென்றால் கை உயர்த்துங்கள். அடுத்து இன்னொரு விஷயமும் உள்ளது. அதையும் புரிந்து கொண்டு விட்டீர்கள். எனவே தான் சிரிக்கிறீர்கள். சரி, அந்தநாள் எந்த நாள்? நாளை குறியுங்கள் பார்ப்போம். வெளிநாட்டுக்காரர்களுக்கெல்லாம் இந்த நாட்கள் என்றெல்லாம் நாட்களை குறிக்கிறீர்களில்லையா? அப்படியென்றால் சமயத்தை அருகில் கொண்டு வரக்கூடிய ஆத்மாக்களே! இந்த விஷயத்தில் எந்த நாள் என்று கூறுங்கள் பார்க்கலாம். அந்த நாள் கண்ணுக்குத் தெரிகிறதா? முதலில் உங்கள் கண்ணுக்குத் தெரிய வேண்டும். அப்பொழுதுதான் உலகக் கண்ணிலும் வரும். பாப்தாதா அமிர்த வேளையில் சுற்றி வரும்போது உலக விஷயங்களைப் பார்த்து பார்த்து, கேட்டுக் கேட்டு மிகவும் இரக்கம் ஏற்படுகிறது. மனமகிழ்ச்சியில் இருக்கிறார்கள் கூடவே மனக்க குழப்பத்திலும் இருக்கிறார்கள். ஆக பாப்தாதா கேட்கிறார், வள்ளலின் குழந்தைகளே! மாஸ்டர் வள்ளலாகி எப்பொழுது உங்கள் மாஸ்டர் வள்ளல் தன்மையை மிக வேகத்துடன் உலகத்தின் முன் வெளிப்படுத்தப் போகிறீர்கள்? அல்லது இப்பொழுது திரைக்குப் பின்னால் தயாராகிக் கொண்டிருக்கிறீர்களா? உலக மாற்றத்தின்

நிமித்தமானே ஆத்மாகளே! இப்பொழுது உலக ஆத்மாக்களின் மீது இரக்கம் கொள்ளுங்கள். எப்படியும் ஏற்படத்தான் வேண்டும். அதுவும் நிமித்தமான ஆத்மாக்களாகிய உங்களின் மூலமாகத்தான் அது ஏற்படும் என்பதும் நிச்சயமானதே! பிறகு ஏன் காலம் தாழ்த்துகிறீர்கள்? ஒவ்வொரு பிராமண ஆத்மாவின் உள்ளத்திலும் முழுமை மற்றும் சம்பூர்ணத்தாவின் கொடி பறக்க வேண்டும். இந்த ஒரு விழாவினை பார்க்க பாப்தாதா விரும்புகின்றார். எப்பொழுது ஒவ்வொரு ஆத்மாக்களின் உள்ளத்திலும் சம்பூர்ணத்தின் கொடி பறக்குமோ, அப்போதே பாப்தாதாவின் பிரத்யக்ஷ கொடியும் பறக்கும். இந்த கொடியேற்ற விழாவினைப் பார்க்க பாபா விரும்புகின்றார். எப்படி சிவராத்திரியில் சிவஅவதாரத்தின் கொடியை பறக்க விடுகிறீர்களோ அப்படி இப்பொழுது சிவசக்தி பாண்டவ அவதாரத்தின் பேரிகை ஒலிக்கட்டும். "சிவசக்திகள் வந்து விட்டார்கள்" என்ற பாடல்களை ஒலிக்கிறீர்களில்லையா? இப்பொழுது உலகமே சிவனின் கூடவே சக்திகள், பாண்டவர்கள் வெளிப்பட்டு விட்டார்கள், என்ற பாடல்களை பாடட்டும். எதுவரை திரைக்குப் பின்னாலே இருப்பீர்கள்? திரைக்குப் பின்னால் இருப்பது நன்றாகயிருக்கிறதா? கொஞ்சம் கொஞ்சம் நன்றாகயிருக்கிறது! பின்னால் இருப்பவர்களே, திரைக்குப் பின்னால் இருப்பது நன்றாக இருக்கிறதா? நன்றாக இருப்ப தில்லை, அப்படியானால் திரையை விலக்குவது யார்? பாபா விலக்குவாரா? யார் விலக்குவார்? விலக்குவது கூட நீங்களா? அல்லது நாடகம் விலக்குமா? அல்லது நீங்கள் விலக்குவீர்களா? நீங்கள் தான் விலக்குவீர்கள் என்றால் நேரமாவது ஏன்? அப்படியானால் திரைக்குப்பின்னால் இருப்பது நன்றாக இருக்கிறதென்று எடுத்துக் கொள்ளவா? அனைவரும் ஆஹா! ஹா! வந்து விட்டனர், வந்து விட்டனர் என்கிற பாடலைப் பாட வேண்டும், இந்த ஒரு சிரேஷ்ட ஆசைதான் பாப்தாதாவிற்குள்ளது. தாதிகள் அனைவருமே இது நடக்கக் கூடும் என்று சொல்லும் போது உங்களுக்கு ஏன் நேரமாகிறது? காரணமென்ன? (அனைவருமே சம்பன்னமாகவில்லை) ஏன் ஆகவில்லை? அந்த நாளை சொல்லுங்களேன். (நாளை பாபா தான் சொல்ல வேண்டும்) பாப்தாதாவின் மஹா மந்திரம் நினைவிலிருக்கிறதா? பாப்தாதா என்ன கூறுகிறார்? எப்பொழுதோ இல்லை, இப்பொழுதே! (பாபா நீங்களே முடிவு கூறுங்கள் என்று தாதிஜீ கூறுகிறார்). பாப்தாதா கூறும் நாளுக்குள் உங்களை நீங்கள் மாறிக் கொண்டு கடைப்பிடிப்பீர்களா?

பாண்டவர்கள் கடைப்பிடிப்பார்களா? உறுதியாக! மாறாக தலைகீழாக செய்தால் என்ன செய்ய வேண்டி வரும்? (நீங்கள் நாள் குறித்தால் யாரும் தலைகீழாக செய்ய மாட்டார்கள்) நல்லது. வாழ்த்துக்கள். இப்பொழுதே கூறுவோம், அந்த நாளைப் பாருங்கள். பாப்தாதா பிறகும் கூட இரக்கமுள்ளவர். எனவே நாளைக் கூறுகிறார் -மிகக் கவனமாகக் கேட்கவும். பாப்தாதா அனைத்துக் குழந்தைகள் மீதும் சிரேஷ்ட பாவனை வைக்கிறார், ஆசையுடன் எதிர்பார்க்கிறார். குறைந்த பட்சம் ஆறு மாதத்தில், ஆறு மாதம் எப்பொழுது முடிவடையும்? (மே மாதத்தில்) மேயில் (மே-மை என்பது ஹிந்தியில் நான்) எனவே இந்த மே, மை இரண்டையும் விட்டொழியுங்கள். பாப்தாதா பிறகும் கூட (இரக்கத்தோடு) ஒரு எல்லையை குறிக்கிறார், இந்த ஆறு மாதத்திலாவது, இதை ஏற்கனவே முந்தைய சீசனில் கூட இந்த வீட்டுப் பாடத்தை தந்திருந்தார். இந்நேரம் அதை மறந்திருப்பீர்கள். இப்போதாவது குறைந்தது ஆறு மாதத்தில் தன்னை ஜீவன் முக்த ஸ்திதியில் அனுபவம் செய்யுங்கள். சத்யுக சிருஷ்டியின் ஜீவன் முக்த நிலை இல்லை, சங்கமயுகத்தின் ஜீவன் முக்த நிலை. எந்த வித தடையோ, பரஸ்திதியோ, சாதனம் அல்லது நான், எனது, என்னுடைய தேக அபிமானம், இந்த அனைத்திலிருந்தும் முக்த நிலையில் இருக்க வேண்டும். அவைகள் வரத்தான் செய்யும் ஆனால் நீங்கள் அதன் பிரபாவத்திலிருந்து முக்த நிலையில் இருக்க வேண்டும். அவ்வாறு முக்த நிலையில் இருக்கத்தான் எனக்கு விருப்பம் ஆனால் இந்த தடை வந்து விட்டதே, இந்த விஷயமே மிக பெரியதாக இருந்ததே! என்று கூறக்கூடாது. சிறிய விஷயமானால் பரவாயில்லை ஆனால் இது பெரிய விஷயமாயிற்றே, இது மிகப் பெரிய பரிட்சை எனக்கு, மிகப் பெரிய தடை, மிகப் பெரிய பரஸ்திதி என்றெல்லாம் கூறக்கூடாது. எவ்வளவு பெரிய பர ஸ்திதியாயினும் சரி, சாதனங்களின் கவர்ச்சியை சந்திக்க நேரலாம். இதை முன்னாலேயே தெரிவித்து விடுகிறோம் ஆனால் குறைந்த பட்சம் 6-மாதத்தில் 75% முக்த நிலை அடைவீர்களா? பாப்தாதா 100% கேட்கவில்லை, 75% தான். முக்கால் பாகம் வந்தால் தானே முழுதாக அடைய முடியும். ஆக 6-மாதத்தில், ஒரு மாதம் கூடயில்லை, 6-மாதம் தருகிறார், 1-வருஷத்தில் பாதி. இந்த நாளை குறிக்க முடியாதா? தாதிகள் கூட குறியுங்கள் என்கின்றனர். தாதிமார்களின் கட்டளையாவது கேட்க வேண்டுமில்லையா? முடிவைப் பார்த்து பாப்தாதா தாமாகவே ஈர்க்கப்பட்டு வருவார்.

சொல்வதற்கு கூட அவசியம் இருக்காது. ஆக 6-மாதத்தில் 75%, 100% என்று கூறவில்லை. அதற்கு (100%) பின்னால் காலம் தருவார். இதில் எவரெடியாக இருக்கிறீர்களா? 6-மாதத்தில் தயார் ஆக வேண்டும். விருப்பம் இருக்கிறதா? அல்லது கொஞ்சம் தைரியம் குறைவாக இருக்கிறதா? என்ன ஆகுமோ, சிங்கமும் வரும், பூனையும் வரும், எல்லாம் வரும், தடையும் வரும், பரஸ்திதியும் வரும், சாதனங்களும் அதிகரிக்கும் ஆனால் சாதனங்களின் பிரபாவத்திலிருந்து விடுதலை அடைய வேண்டும். சரியா? கைத்தூக்குங்கள் பார்க்கும். டி.வி. கேமராவை சுழற்றி படம் பிடிக்கவும். கையை நன்றாக உயர்த்துங்கள். கீழே போட வேண்டாம். இக்காட்சி மிக நன்றாக இருக்கிறது நல்லது, முன்னோடியான வாழ்த்துக்கள்.

இதற்காக உயிரையே விட வேண்டுமே? என்று கூறக்கூடாது. உயிரை விடுங்கள் அல்லது வாழுங்கள் ஆனால் நிச்சயம் ஆகித்தான் தீர வேண்டும். இவ்வாறு உயிரை விடுவது இனிமையான சாவாகும். இந்த சாவில் துக்கம் கிடையாது. இவ்வாறு இறப்பது அநேகருடைய மங்களத்திற்காக உயிரை விடுவதாகும். எனவே இவ்வாறு உயிரை விடுவதே ஒரு ஆனந்தம்! இதில் துக்கம் இல்லை. சுகமே சுகம். யாரும் சாக்குப்போக்கு கூறக்கூடாது. இந்த மாதிரி ஆகி விட்டது அல்லவா? எனவேதான் முடியவில்லை என்கிற சக்குபோக்கெல்லாம் நடக்காது. அவ்வாறு சாக்குபோக்கு கூறுவீர்களா? இல்லைதானே! பறக்கும் கலை என்கிற போக்கு மட்டும் இருக்க வேண்டும். வேறு எந்த சாக்கு போக்கும் கூடாது. கீழே இறங்கு முக போக்கு, சாக்குபோக்கு, பலகீனமான போக்கு இவை அனைத்திற்கும் முற்றுப்புள்ளி. வெறும் பறக்கும் கலையின் போக்கே இருக்க வேண்டும் சரி தானே! அனைவரது முகமும் மலர்ந்து விட்டது. 6-மாதத்திற்கு பிறகு உங்களை சந்திக்க வரும்போது எப்படி இருப்பீர்கள். அப்போதும் கூட போட்டோ எடுப்போம். இரட்டை வெளிநாட்டினர் வந்திருக்கின்றனர், அப்படியானால் இரட்டை உறுதிமொழி எடுக்கும் நாள் வந்து விட்டது. அடுத்து வேறு எவரையும் பார்க்க கூடாது, தந்தையைப் பார், பிரம்மா அம்மாவை பார்! வேறு யார் செய்தாலும் சரி செய்யாவிட்டாலும் சரி. பலகீனமானவர்களுக்கு சுபவனையின் பலத்தை தரவேண்டும். பலகீனத்தைப் பார்க்க கூடாது. இப்படிப்பட்ட ஆத்மாக்களை உங்கள் தைரிய கரங்களால் தூக்கி விட வேண்டும். தைரிய கரங்கள் சதா தனக்காகவும், பிறருக்காகவும் நீட்டிக்

கொண்டே இருக்க வேண்டும். தைரிய கரங்கள் மிகவும் சக்திசாலியானது. குழந்தைகளின் தைரியமான ஒரு அடி பாபாவின் உதவி என்பது 1000-அடி இதுவே பாப்தாதாவின் வரதானம். சுயநலமற்ற புருஷார்த்தத்தில் முதலில் நான். சுயநலமான புருஷார்த்தம் கூடாது. சுயநலமில்லாத புருஷார்த்தம் இதில் யார் முதலில் அடியெடுத்து வைக்கிறார்களோ அவர்களே பிரம்மாபாபாவிற்கு சமானமானவர்கள்.

பிரம்மாபாபாவோடு அன்பு இருக்கிறதல்லவா! எனவே தான் பிரம்மா குமாரி அல்லது பிரம்மா குமார் என்று அழைக்கப்படுகிறீர்கள். ஒரு வினாடியில் ஜீவன் முக்தி என்னும் ஆஸ்தியை பெறுங்கள் என்று அறைகூவல் விடுக்கிறீர்கள். ஆக, இப்பொழுது வினாடியில் முக்தி அடைவதற்கு கவனம் வையுங்கள். இப்பொழுது சமயத்தை அருகில் கொண்டு வாருங்கள். உங்கள் சம்பூரணத்தை நோக்கிய சமீப நிலை சிரேஷ்டமான சமயத்தை அருகில் கொண்டுவரும். எஜமானர்கள் தானே நீங்கள்! இராஜாக்கள் தானே! சுயராஜ்ய அதிகாரிகள் தானே! ஆக ஆர்டர் பண்ணுங்கள். இராஜா கட்டளைதானே இடுவார். ஆம் இதை செய்ய வேண்டும், இதைச் செய்யக்கூடாது என்று கட்டளையிடுங்கள், அவ்வப்போது மனதை சோதித்துப் பாருங்கள் ஏனெனில் மனம் தான் முக்கிய மந்திரி. ஆக இராஜா தனது மன மந்திரியை வினாடியில் கட்டளையிட்டு அசரீரி, விதேகி ஸ்திதியில் ஸ்திரமாக முடியும். ஒரு வினாடியில் கட்டளையிடுங்கள்! நல்லது.

சதா அன்பிலே மூழ்கி இருக்க கூடிய அதிர்ஷ்டசாலி ஆத்மாக்களுக்கு, பாப்தாதாவிடமிருந்து பிராப்தமான அனைத்து பிராப்திகளின் அனுபவி ஆத்மாக்களுக்கு, சுயராஜ்ய அதிகாரியாகி அதிகார உரிமையின் மூலம் சுயராஜ்யம் செய்யக்கூடிய சக்திசாலி ஆத்மாக்களுக்கு, சதா ஜீவன் முக்த அனுபவத்தில் இருக்கும் மிக உயர்ந்த ஆத்மாக்களுக்கு, சதா பவித்திரத்தாவின் திருஷ்டி, விருத்தியின் மூலம் சுய பரிவர்த்தனையும், விஷ்வ பரிவர்த்தனையும் செய்யக் கூடிய புனிதமான ஆத்மாக் களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் நமஸ்காரமும்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋ ❋❋❋❋❋❋❋❋

# 25.11.2000 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# தந்தைக்குச் சமமாக ஆவதற்காக இரண்டு விஷயங்கள் மீது உறுதியாக இருங்கள் -சுய மரியாதையில் இருப்பது மற்றும் அனைவருக்கும் மரியாதை அளிப்பது!

இன்று பாப்தாதா அன்பிலும் அன்பான, இனிமையிலும் இனிமையான சிறிய பிராமண பரிவாரம் என்றாலும் சரி, பிராமண உலகம் என்றாலும் சரி, அதைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறார். இந்த சிறிய உலகம் எவ்வளவு விலகியதாக இருந்தாலும் அன்பாகவும் இருக்கிறது. ஏன் அன்பாக இருக்கிறது? ஏனெனில் இந்த பிராமண உலகத்தினுடைய ஒவ்வொரு ஆத்மாவும் விசேஷ ஆத்மாக்கள். பார்க்கும்போது மிக சாதரண ஆத்மாக்கள் வருகிறார்கள் ஆனால் அனைத்தையும் விட பெரியதிலும் பெரிய விசேஷம் ஒவ்வொரு பிராமண ஆத்மாவுடையது இது தான், பரம் ஆத்மாவை தனது திவ்ய புத்தி மூலம் அடையாளம் கண்டு கொண்டனர். 90-வயது கிழவராக இருக்கலாம், நோய்வாய்ப்பட்டிருக்கலாம் ஆனால் பரமாத்மாவை அடையாளம் காணும் திவ்ய புத்தி, திவ்ய கண் பிராமண ஆத்மாக்களைத் தவிர புகழ் பெற்ற வி.வி.ஐ.பி.'களிடம்கூட இல்லை. இந்த எல்லா மாதாக்களும் ஏன் இங்கு வந்துள்ளீர்கள்? நடக்க முடியுதோ இல்லையோ ஆனால் வந்தடைந்தோ விட்டீர்கள். எனில் அடையாளம் தெரிந்ததால் வந்தடைந்து விட்டீர்கள். இந்த அடையாளம் காணும் கண், அடையாளம் காணும் புத்தி உங்களைத் தவிர வேறு யாருக்கும் பிராப்தி ஆக முடியாது. எல்லா மாதாக்களும் இந்தப் பாடல் பாடுகிறீர்கள்தானே -'ஹம்னே தேகா, ஹம்னே ஜானா'. மாதாக்களுக்கு இந்த பெருமிதம் உள்ளதா? கையாட்டுகிறார்கள், மிக நல்லது. பாண்டவர்களுக்கு பெருமிதம் உள்ளதா? ஒருவர் மற்றவரை விட முன்னால் உள்ளனர். சக்திகளும் குறைந்தவரில்லை, பாண்டவர்களும் குறைந்தவரில்லை

ஆனால் இந்த சிறிய உலகம் எவ்வளவு அன்பாக உள்ளது என்று பாப்தாதாவிற்கு குஷி ஏற்படுகிறது.
பாப்தாதா உள்நாடு, வெளிநாட்டிலுள்ள எல்லா ஆத்மாக்களின் மூலம் இன்று இந்த இதயத்தின் பாடலைக் கேட்டுக் கொண்டிருந்தார் -பாபா, இனிமையான பாபா 'ஹம்னே ஜானா, ஹம்னே தேகா'. இந்தப் பாடலைப் பாடியபடியே நாலா பக்கமும் உள்ள குழந்தைகள் ஒரு பக்கம் குஷியில், மறுபக்கம் சிநேகத்தின் கடலில் மூழ்கியிருந்தனர். நாலா புறமும் உள்ளவர்கள் இங்கு சாகாரத்தில் இல்லை ஆனால் உள்ளத்தின் மூலம், பார்வை மூலம் பாப்தாதாவிற்கு முன்னால் உள்ளனர் மற்றும் பாப்தாதாவும் சாகாரத்தில் தூரத்தில் அமர்ந்திருக்கும் குழந்தைகளை எதிரிலேயே பார்த்துக் கொண்டிருக்கிறார். உள்நாடு ஆனாலும் சரி, வெளிநாடு ஆனாலும் சரி, பாப்தாதா எந்தளவிற்கு அடைய முடியும்? சுற்றி வர முடியும்? பாப்தாதா நாலா பக்கமும் உள்ள குழந்தைகளுக்குப் பிரதிபலனாக நூறாயிரம் கோடிக்கும் மேலான அன்பு நினைவுகளைத் தருகின்றார். நாலா பக்கமும் உள்ள குழந்தைகளைப் பார்த்து பார்த்து எல்லோருடைய மனதிலும் ஒரே சங்கல்பத்தைப் பார்க்கின்றார், எல்லோரும் கண்களால் இதைத்தான் கூறுகின்றனர், எங்களுக்கு பரமாத்மாவின் 6-மாத வீட்டுப்பாடம் நினைவுள்ளது என. உங்கள் எல்லோருக்கும் நினைவுள்ளதல்லவா? மறந்தோ விடவில்லையே? பாண்டவர்களுக்கு நினைவுள்ளதா? நன்றாக நினைவுள்ளதா? பாப்தாதா அடிக்கடி ஏன் நினைவுபடுத்துகிறார்? காரணம்? நேரத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள், பிராமண ஆத்மாக்கள் தன்னையும் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள், மனது வாலிபனாகிக் கொண்டே செல்கிறது, உடல் வயதாகிக் கொண்டே செல்கிறது. நேரம் மற்றும் ஆத்மாக்களுடைய அழைப்பை நன்றாகக் கேட்பதற்கு வருகிறது, என்றால் பாப்தாதா பார்த்தார் -ஆத்மாக்களுடைய அழைப்பு மனதில் அதிகமாகிக் கொண்டே செல்கிறது -ஹே, சுக தேவா, ஹே சாந்தி தேவா, ஹே உண்மையான குஷி தேவா, எங்களுக்கும் கொஞ்சம் ஆறுதல் அளியுங்கள். நினைத்துப் பாருங்கள், அழைப்பவர்களின் வரிசை எவ்வளவு நீண்டதாக இருக்கும். நீங்கள் அனைவரும் நினைக்கிறீர்கள் -தந்தையின் பிரத்யக்ஷம் வெகு விரைவில் ஆகட்டும் ஆனால் பிரத்யக்ஷதா எந்த காரணத்தால் நின்று போயுள்ளது? எப்போது நீங்கள் அனைவருமே இதே சங்கல்பம் செய்கிறீர்களோ மற்றும் மனதார விரும்புகிறீர்களோ, வாயாலும் கூறுகிறீர்களோ -நாம் தந்தைக்குச் சமம்

ஆக வேண்டும்! ஆக வேண்டும்தானே? ஆக வேண்டுமா? நல்லது, பின்பு ஏன் ஆக முடியவில்லை? பாப்தாதாவோ தந்தைக்குச் சமமாக ஆகச் சொல்கிறார், சமம் என்ற சொல்லில் இந்த இரு கேள்விகளும் -என்ன ஆகணும், எப்படி ஆகணும் -என்பது எழ முடியாது. என்ன ஆகணும்? பதில் இருக்கிறதா? தந்தைக்குச் சமம் ஆக வேண்டும். எப்படி ஆகணும்? தந்தையைப் பின்பற்றுங்கள் -தந்தை தாயின் காலடிகளை! நிராகார தந்தை, சாகார பிரம்மா அம்மா! பின்பற்றக்கூட வராதா, என்ன?

இந்நாட்களில் கண்பார்வையற்றோர் கூட பின்பற்றுகிறார்கள். பார்த்திருக்கிறீர்கள், இந்நாட்களில் அவர்கள் கைத்தடியின் ஓசையைக் கேட்டு, அதைப் பின்பற்றியபடியே எங்கிருந்து எங்கு சென்றடைந்து விடுகிறார்கள். நீங்களோ மாஸ்டர் சர்வ சக்திவான், திரிநேத்ரி, திரிகாலதரிசிகள்! பின்பற்றுவது உங்களுக்குப் பெரிய விஷயமா என்ன. பெரிய விஷயமா என்ன? கூறுங்கள், பெரிய விஷயமா? இல்லை, ஆனால் ஆகி விடுகிறது. பாப்தாதா எல்லா இடங்களையும் சுற்றி வருகிறார், சென்டர்கள், இல்லறங்கள் என. பாப்தாதா பார்த்தார், ஒவ்வொரு பிராமண ஆத்மாவிடம், ஒவ்வொரு சென்டரில், ஒவ்வொரு இல்லறத்திலும் ஆங்காங்கே பிரம்மாதந்தையுடைய படங்கள் நிறைய வைத்துள்ளனர். அவ்யக்த தந்தையோ, பிரம்மாதந்தையோ, ஆங்காங்கு படங்கள்தான் கண்ணுக்குத் தெரிகின்றது. நல்ல விஷயம் தான் ஆனால் படத்தைப் பார்க்கும்போது சரித்திரமோ நினைவிற்கு வர வேண்டும் அல்லவா என பாப்தாதா இவ்வாறு நினைக்கின்றார். இல்லை வெறுமனே படத்தை மட்டுமே பார்க்கிறீர்களா? படத்தைப் பார்த்து தூண்டுதலோ கிடைக்கிறதுதானே. எனில் பாப்தாதா வேறு எதுவும் கூறவில்லை ஆனால் ஒரே ஒரு வார்த்தையை மட்டுமே கூறுகிறார், பின்பற்றுங்கள், அவ்வளவுதான். சிந்திக்காதீர்கள், அதிகம் திட்டம் போடாதீர்கள், இது இல்லை அதைச் செய்வோம், இப்படி இல்லை அப்படி, அப்படியில்லை இப்படி -இல்லை. தந்தை என்ன செய்தாரோ அப்படியே காப்பி அடியுங்கள், போதும். காப்பி அடிக்க வரதா? இந்நாட்களில் விஞ்ஞானத்தின் மூலம் '∴போட்டோகாப்பி மிஷின்' (xerox) வெளி வந்துள்ளது. வெளி வந்துள்ளதுதானே. இங்கு '∴போட்டோகாப்பி' என்றால் பிரம்மாதந்தையின் படத்தை வைத்துள்ளீர்கள், நல்லது வைத்துக் கொள்ளுங்கள், நன்றாக வைத்துக் கொள்ளுங்கள், பெரிது

பெரிதாக வைத்துக் கொள்ளுங்கள் ஆனால் 'ஃபோட்டோ'வை காப்பி அடிங்களேன்.
பாப்தாதா இன்று நாலா புறமும் சுற்றி வரும்போது இதைப் பார்த்தார், சித்திரத்தின் மீது அன்புள்ளதா அல்லது சரித்திரத்தின் மீதா? சங்கல்பமும் உள்ளது, ஊக்கமும் உள்ளது, லக்ஷியமும் உள்ளது, மீதம் வேறு என்ன வேண்டும்? பாப்தாதா பார்த்தார், எந்த ஒரு பொருளையும் நல்ல விதமாக உறுதி ஆக்குவதற்கு நான்கு மூலைகளையும் உறுதி ஆக்குவார்கள். பாப்தாதாவோ பார்த்தார், மூன்று மூலைகள் உறுதி ஆக இருக்கின்றன, ஒரு மூலை இன்னும் உறுதியாக வேண்டும் என. சங்கல்பமும் உள்ளது, ஊக்கமும் உள்ளது, லக்ஷியமும் உள்ளது, யாரிடம் வேண்டுமானால் கேளுங்கள், என்ன ஆக வேண்டும் என? ஒவ்வொருவரும் உடனே தந்தைக்குச் சமமாக வேண்டும் என்பார்கள். யாருமே இதைக் கூற மாட்டார்கள் -தந்தையை விட குறைவாக ஆக வேண்டும் என, இல்லை! சமமாக வேண்டும்! நல்ல விஷயம்தான். ஒரு மூலையை உறுதியாக்குகிறீர்கள் ஆனால் போகப்போக தளர்ந்து விடுகிறது, அதுதான் மனஉறுதி! சங்கல்பமும் உள்ளது, லக்ஷியமும் உள்ளது ஆனால் ஏதாவது பர ஸ்திதி வந்தது எனில், சாதாரணமாக அதை நீங்கள் எப்படிக் கூறுகிறீர்கள் -விஷயங்கள் வந்து விடுகிறது, அது மன உறுதியைத் தளர்த்தி விடுகிறது என. இறந்து போகட்டும், அழிந்து போகட்டும் ஆனால் சங்கல்பம் போகக் கூடாது -இதைத்தான் மனஉறுதி எனப்படுகிறது. சின்னச்சின்ன குழந்தைகள் ஓம் நிவாஸ் வந்த போது, பிரம்மாபாபா அவர்களுக்கு சிரித்தபடியே நினைவூட்டுவார், உறுதியாக்கினார், இவ்வளவு தண்ணீர் குடிக்க வேண்டும், இவ்வளவு காரம் சாப்பிட வேண்டும், பயப்பட மாட்டார்கள். பின்பு கையால் இப்படி கண்ணுக்கு முன் கொண்டு வருவார்கள்... பிரம்மாதந்தை சின்னச்சின்ன குழந்தைகளை பக்குவபடுத்தினார், எத்தனை பிரச்சனைகள் வேண்டுமானாலும் வரட்டும், சங்கல்பத்தின் கண்ணை அசைக்கவில்லை. அதுவோ சிவப்பு மிளகாய் மற்றும் தண்ணீர்ப் பானை ஆகும், சிறிய குழந்தைகள்தானே! இப்போதோ நீங்கள் அனைவரும் பெரியவர்களாகி விட்டீர்கள், எனில் பாப்தாதா இன்றும் குழந்தைகளிடம் கேட்கின்றார், உங்களிடம் திட சங்கல்பம் உள்ளதா? தந்தைக்குச் சமம் ஆகியேத் தீர வேண்டும் என்று சங்கல்பம் உறுதியாக உள்ளதா? ஆக வேண்டும் அல்ல, ஆகியேத் தீர வேண்டும்! நல்லது. இதில் கை அசையுங்கள். டி.வி.காரர்கள் படம் பிடித்து விடுங்கள். டி.வி.யும்

காரியத்தில் வர வேண்டும் அல்லவா. நீட்டி உயர்த்துங்கள். நல்லது. மாதாக்களும் உயர்த்துகிறார்கள். பின்னால் இருப்பவர்கள் இன்னும் நீட்டி உயர்த்துங்கள். மிக்க நல்லது. 'கேபின்'காரர்கள் (cabin) கைதூக்கவில்லை! 'கேபின்'காரர்களோ நிமித்தமானவர்கள். நல்லது. சிறிது நேரத்திற்காக கையைத் தூக்கி பாப்தாதாவை குஷிப்படுத்தி விட்டனர்.

இப்போது பாப்தாதா ஒரே ஒரு விஷயத்தை மட்டும் குழந்தைகள் மூலம் செய்ய விரும்புகிறார், கூற விரும்பவில்லை, செய்ய விரும்புகிறார். தனது மனதில் உறுதித்தன்மையைக் கொண்டு வாருங்கள், சின்ன விஷயங்களில் சங்கல்பத்தைத் தளர விடாதீர்கள். யாராவது அவமதிக்கட்டும், யாராவது கோபப்படட்டும், யாராவது அவமானம் செய்யட்டும், தூற்றட்டும், எப்போதாவது யாராவது துக்கம் தரட்டும் ஆனால் உங்களுடைய சுப பாவனை அழிந்து போகக்கூடாது. நாங்கள் மாயாவை, இயற்கையை மாற்றம் செய்யக் கூடியவர்கள், உலகை மாற்றக் கூடியவர்கள் என சவால் விட்டீர்கள் எனில் உங்களுடைய தொழில் ஞாபகம் உள்ளதுதானே? உலகை மாற்றக் கூடியவர்கள்தானே! ஒருவேளை யாராவது தனது சம்ஸ்கார வசமாகி உங்களுக்கு துக்கம் தரட்டும், காயப்படுத்தட்டும், ஆட்டட்டும் என்றால் நீங்கள் துக்கத்தின் விஷயத்தை சுகமாக மாற்றம் செய்ய முடியாதா? அவமதிப்பை பொறுத்துக் கொள்ள முடியாதா? திட்டுவதை ரோஜாவாக ஆக்க முடியாதா? பிரச்சனைகளை தந்தைக்குச் சமமாக ஆகுவதற்காக சங்கல்பத்தில் மாற்றம் செய்ய முடியாதா? உங்கள் அனைவருக்கும் நினைவுள்ளது -எப்போது நீங்கள் பிராமண ஜென்மத்தில் வந்தீர்களோ மற்றும் நிச்சயம் செய்தீர்களோ, ஒரு நொடியில் உங்களுக்கு ஆகியிருக்கலாம் அல்லது ஒரு மாதத்தில் ஆகியிருக்கலாம் ஆனால் எப்போதிலிருந்து நிச்சயம் செய்தீர்களோ, இதயமும் கூறியது 'நான் பாபாவுடையவன், பாபா என்னுடையவர்'! சங்கல்பம் செய்தீர்கள், அனுபவம் செய்தீர்கள்தானே. அப்போதிருந்து நீங்கள் மாயாவிடம் சவால் விட்டீர்கள், நான் மாயாஜீத் ஆவேன்! என. மாயாவிடம் இந்த சவால் விட்டீர்கள்தானே? மாயாஜீத் ஆக வேண்டுமா, இல்லையா? மாயாஜீத் நீங்கள்தானா அல்லது இப்போது வேறு யாராவது வரணுமா? எப்போது மாயாவிடம் சவால் விட்டீர்கள் என்றால் இந்த பிரச்சினைகள், இந்த குழப்பங்கள் மாயாவுடையவை எனில் ராயல் ரூபத்தவை! மாயா

இன்னும் வேற ரூபத்தில் வராது. இந்த ரூபங்களில் தான் மாயாஜீத் ஆக வேண்டும். விஷயம் மாறாது, சென்டர் மாறாது, இடமும் மாறாது, ஆத்மாக்களும் மாற மாட்டார்கள், நாம் மாற வேண்டும்! உங்களுடைய ஸ்லோகன் எல்லோருக்கும் நன்றாக உள்ளது -மாறிக் காட்ட வேண்டும், பழி வாங்கக் கூடாது, மாற வேண்டும். இதுவோ பழைய ஸ்லோகன். புதிய ரூபத்தில், ராயல் ரூபமாகி மாயா இன்னும் வரப் போகிறது, பயப்படாதீர்கள். பாப்தாதா அடிக்கோடு இடுகிறார் -மாயா இந்தந்த ரூபத்தில் வரும் என, வந்து கொண்டிருக்கிறது. இது மாயா என உணர முடியாதவாறு வரும், சொல்லவும் சொல்லாது தாதி, நீங்கள் புரிந்து கொள்ளவில்லை இது மாயா இல்லை, இதுவோ உண்மையான விஷயம் மற்றும் இன்னும் ராயல் ரூபத்தில் வர இருக்கிறது, பயப்பட வேண்டாம், ஏன்? பாருங்கள், எந்த ஒரு பகைவனாகட்டும் தோல்வி அடையட்டும், வெற்றி அடையட்டும், அவரிடம் உள்ள சின்னச் சின்ன ஆயுதங்களை, உபயோகிப்பாரா? மாட்டாரா? உபயோகிப்பாரல்லவா? எனில் மாயாவுக்கும் முடிவு வந்தாக வேண்டும் ஆனால் முடிவு எந்தளவு சமீபத்தில் வந்து கொண்டிருக்கிறதோ, அந்தளவு அது புதிய புதிய ரூபத்தில் தனது ஆயுதங்களை உபயோகித்துத் கொண்டிருக்கிறது, செய்யும். பின்பு உங்கள் பாதங்களில் விழும். முதலில் உங்களை விழ வைக்க முயற்சிக்கும், பின்பு தானே விழுந்து விடும். இதில் மட்டும் இன்று பாப்தாதா ஒரு வார்த்தையை அடிக்கடி கோடிட்டு காட்டுகிறார். தந்தைக்குச் சமம் ஆவது! இந்த லக்ஷியத்தின் சுவமானத்தில் இருங்கள் மற்றும் மரியாதை கொடுங்கள், அதாவது மரியாதை பெறுவது, பெறுவது மூலம் கிடைக்காது, கொடுப்பது என்றால் பெறுவது ஆகும்! மரியாதை கொடுங்கள் -இது சரியானதல்ல, மரியாதை அளிப்பதுதான் பெறுவது ஆகும்! சுவமானம் தேக உணர்வினுடையது அல்ல, பிராமண வாழ்க்கையின் சுவமானம் சிரேஷ்ட ஆத்மாவின் சுவமானம், சம்பன்னதாவின் சுவமானம்! எனில் சுவமானம் மற்றும் மரியாதை பெறுவது அல்ல ஆனால் கொடுப்பதுதான் பெறுவது ஆகும் -இந்த இரு விஷயங்களிலும் உறுதியுடன் இருங்கள்! உங்களுடைய நோக்கத்தின் உறுதியை யாராவது எவ்வளவு வேண்டுமானாலும் அசைக்கட்டும், நோக்கத்தின் உறுதியைத் தளர விடக் கூடாது. உறுதியாக்குங்கள், அசையாதவராகுங்கள். அப்போது பாப்தாதாவிடம் என்ன உறுதிமொழி கொடுத்தீர்களோ, 6-மாதத்திற்கானது! உறுதிமொழி ஞாபகம் உள்ளதுதானே. இதையேப் பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது,

இப்போதுதான் 15-நாள் ஆகியிருக்கிறது, இன்னும் 5½-மாதங்கள் இருக்கிறது என. எப்போது ஆன்மீக உரையாடல் செய்கிறீர்களோ -அமிர்தவேளையில் ஆன்மீக உரையாடல் செய்கிறீர்கள் என்றால் பாப்தாதாவிற்கு மிகுந்த நல்ல நல்ல விஷயங்களைக் கூறுகிறீர்கள். தங்களது விஷயங்களைத் தெரிந்துள்ளீர்கள்தானே? எனில் இப்போது உறுதித்தன்மையைத் தனதாக்குங்கள். தலைகீழான விஷயங்களில் உறுதித்தன்மையை வைக்கக்கூடாது. கோபப்படத்தான் வேண்டும், எனக்கு திடமாக நிச்சயம் உள்ளது, இப்படி செய்யக்கூடாது, ஏன்? இந்நாட்களில் பாப்தாதாவிடம் உள்ள பதிவேட்டில் பெரும்பான்மையாக கோபத்தினுடைய விதவிதமான புகார்கள் வந்தடைந்துள்ளன. இது பற்றி ஒரு வகுப்பு எடுக்க வேண்டும் -கோபத்திற்கு எத்தனை ரூபங்கள் உள்ளது? பின், என்ன கூறுகிறீர்கள், அப்படிப்பட்ட நோக்கம் இல்லை, விருப்பமும் இல்லை ஆனால் அப்படியே கூறி விட்டேன். இது பற்றி ஒரு வகுப்பு எடுக்க வேண்டும்.

டீச்சர்கள் (1200) அதிகம் வந்துள்ளனர். 1200-பேரும் திட சங்கல்பம் செய்தால் நாளையே மாற்றம் ஏற்பட முடியும். பின், இத்தனை விபத்துகள் நடக்காது, எல்லோரும் தப்பித்து விடுவீர்கள். டீச்சர்கள் கை உயர்த்துங்கள், அதிகம் உள்ளனர். டீச்சர் என்றால் நிமித்த அஸ்திவாரம். ஒருவேளை அஸ்திவாரம் சரியில்லை, அதாவது உறுதியாக இருந்தால் கட்டிடமும் உறுதியாக இருக்கும். இந்நாளில் உலகிலும் சரி, பிராமண உலகிலும் சரி, ஒவ்வொருவருக்கும் தைரியம் மற்றும் உண்மையான அன்பு தேவைப்படுகிறது. அன்பு இல்லை ஆனால் நிபந்தனையற்ற அன்பு தேவை. ஒன்று உண்மையான அன்பு மற்றும் இரண்டாவது தைரியம். உதாரணமாக, ஒருவர் 95-சதவிகிதம் சம்ஸ்கார வசமாகி, பிற வசமாகி அரைகுறையாக ஏதாவது செய்தாலும்கூட ஆனால் 5-சதவிகிதம் நன்றாகச் செய்துள்ளார், இருப்பினும் நீங்கள் 5-சதவிகித நன்மையை முதலில் கூறி அவருள் தைரியத்தை நிரப்பி, மிக நன்றாகச் செய்துள்ளீர்கள் என்று கூறி பின்பு அவரிடம் மீதமுள்ளதையும் இவ்வாறே சரி செய்து விடுங்கள் என்று கூறினால், அவரும் தவறாக நினைக்க (feel) மாட்டார். ஒருவேளை நீங்கள் அவரிடம் இதை ஏன் இவ்வாறு செய்தீர்கள், இப்படித்தான் செய்வதா, இப்படி கூடாது என்றால் அவர் ஏற்கெனவே சம்ஸ்கார வசமானவர், பலகீனமானவர், எனில் அவரும் பதட்டமாகி விடுவார். முன்னேற முடியாது. அந்த

5-சதவிகிதத்தின் தைரியம் அளியுங்கள், உங்களிடம் இந்த விஷயம் மிக நன்றாக உள்ளது என, இதை உங்களால் நன்றாகச் செய்ய முடியும் மற்றும் அவரது நேரம் மற்றும் சொரூபத்தைப் புரிந்து கொண்டு கூறினோம் என்றால் மாறி விடுவார். தைரியம் கொடுங்கள், பர வசமான ஆத்மாவில் தைரியம் இருக்காது. தந்தை உங்களை எவ்வாறு மாற்றினார்? உங்களுடைய குறைகளைக் கூறினாரா, நீங்கள் விகாரிகள், நீங்கள் கெட்டவர்கள் என? உங்களுக்கு நினைவூட்டினார் நீங்கள் ஆத்மாக்கள் மற்றும் இந்த சிரேஷ்ட நினைவின் மூலம் உங்களுக்குள் திறமை வந்தது, மாற்றம் ஆனது. எனில் தைரியத்தின் மூலம் நினைவூட்டுங்கள். நினைவு திறமையைத் தானாகவே கொடுக்கும். புரிந்ததா. இப்போது சமம் ஆகி விடுவீர்கள் தானே? ஒரே ஒரு வார்த்தையை நினைவு வையுங்கள் -தந்தையை, தாயைப் பின்பற்றுங்கள்! டிராமா சின்னச்சின்ன விளையாட்டைக் காட்டிக் கொண்டே இருக்கும். ஆச்சரியக்குறி இட்டு விடுவதில்லையே? நல்லது.

அநேக குழந்தைகளின் மடல்கள், கடிதங்கள், இதயத்தின் பாடல் பாப்தாதாவிடம் வந்தடைந்தன. எங்களுடைய நினைவையும் தாருங்கள், எங்களுடைய நினைவையும் தாருங்கள் என எல்லோரும் கூறினார்கள். தந்தையும் கூறுகின்றார் எங்களுடைய அன்பு நினைவுகளை அளியுங்கள் என. தந்தையும் கூட நினைவு செய்கின்றார், குழந்தைகளும் செய்கின்றனர் ஏனெனில் இந்த சிறிய உலகில் தான் பாப்தாதா மற்றும் குழந்தைகளும் உள்ளனர் மேலும் விஸ்தாரமோ ஆக முடியாது. என்றால் யார் நினைவுக்கு வருவார்? குழந்தைகளுக்கு தந்தையும், தந்தைக்கு குழந்தைகளும்! ஆகவே உள்நாடு, வெளிநாடு குழந்தைகளுக்கு பாப்தாதாவும் மிக மிக மிக மிக அன்பு நினைவுகளை அளிக்கின்றார்.

இந்த மாதாக்களின் குழு மிக நன்றாக வந்துள்ளது. இம்முறை சென்று சந்தித்து விட்டு வருவோம், பின்னர் பார்த்துக் கொள்ளலாம் என சதா வயதான மாதாக்கள் நினைத்துக் கொண்டு வருகின்றனர். இப்படி நினைத்து நினைத்தே பல முறை வந்துள்ளனர். நன்றாகச் செய்கிறீர்கள். பாப்தாதா மாதாக்களின் தைரியத்தைப் பார்த்து குஷி அடைகின்றார். கை தட்டியதும் உடனே வந்து விடுகிறார்கள். (அனைவரும் நன்றாக கை தட்டுகிறார்கள்). நன்றாக உள்ளது, கை தட்டுவதால் குஷி

வருகிறது. மாதாக்களின் ஆனந்தம் மிக நன்றாக உள்ளது. பாருங்கள், டிராமாவில் மாதாக்களிடம் தந்தைக்கு, பரிவாரத்திற்கு அன்பு உள்ளது ஆதலால் முதல் வாய்ப்பு மாதாக்களுக்குத்தான் கிடைத்துள்ளது. மாதாக்களுடைய (மிலன்) முறையின்போது தண்ணீர்கூட வந்து விட்டது. ஏதாவது கஷ்டம் ஏற்பட்டதா, இல்லைதானே. சிக்கனம் செய்கிறீர்களா, இல்லையா? சிக்கனம் செய்தீர்கள். எல்லோருடைய மனதும் பெரியதுதானே. எப்போது உள்ளம் பெரிதாகிறதோ அப்போது எல்லாமே சரியாக நடக்கும். கொஞ்சம் சிடுசிடுப்பு ஆகிறது, அது ஒன்றும் பெரிய விஷயமில்லை. சரிதானே. மதுபனுடைய, சாந்தி வனத்தினுடைய பாண்டவர்கள் வலுவாக இருக்கிறீர்களா, கொஞ்சம் உதவுவீர்களல்லவா? கூறுங்கள், தாதி ஒருவேளை தண்ணீர் வரவில்லை எனில் நாங்கள் 'பக்கெட்'ல் பிடித்துக் கொண்டு வருவோம் என. எப்போது இவ்வளவு குழந்தைகள் வந்துள்ளீர்கள் என்றால் தண்ணீர் எப்படி வராமல் போய் விடும். நல்லது.

நாலா புறமும் உள்ள பிராமண உலகினுடைய விசேஷ ஆத்மாக்களுக்கு, சதா உறுதித்தன்மை மூலம் வெற்றியை பிராப்தி செய்யக்கூடிய வெற்றி நட்சத்திரங்களுக்கு, சதா தான் சம்பன்னமாகி ஆத்மாக்களுடைய கூக்குரலை முடிக்கக்கூடிய சம்பன்ன ஆத்மாக்களுக்கு, சதா பலமற்றவரை, பிற வசமானவரை தனது தைரியத்தின் வரதானம் மூலம் தைரியத்தை அளிக்கக்கூடிய தந்தையுடைய உதவிக்குத் தகுதியான ஆத்மாக்களுக்கு, சதா உலகை மாற்றுபவராகி சுய மாற்றம் மூலம் மாயா, இயற்கை மற்றும் பலகீனமான ஆத்மாக்களை மாற்றம் செய்யக்கூடிய பரிவர்த்தக் ஆத்மாக்களுக்கு, பாப்தாதாவுடைய நாலா புறமும் உள்ள சிறிய உலகிலுள்ள எல்லா ஆத்மாக்களுக்கும் நேரில் வந்துள்ள சிரேஷ்ட ஆத்மாக்களுக்கும் நூறாயிரம் கோடி மடங்கு அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்!

கர்நாடகா சேவாதாரிகள்: நன்றாக பாகத்தை நடித்துக் கொண்டிருக்கிறீர்கள், எல்லோரையும் நன்றாக மீட்டெடுத்துள்ளீர்கள். கர்நாடக வாசிகளுக்கு சேவையில் திருப்திக்கான மிக்க வாழ்த்துக்கள். எல்லா வித பாகத்தையும் நன்றாக நடித்தீர்கள். திருப்திக்கான சகஜ ஆதாரம் 'முதலில் நீங்கள்' என்பதே. 'முதலில் நீங்கள்' என்று கூறிக்

கொண்டே செல்லுங்கள், உடனிருப்பவராக ஆக்கிக் கொண்டே செல்லுங்கள் மற்றும் முன்னேறிக் கொண்டே செல்லுங்கள். முதலில் நான் இல்லை, முதலில் நீங்கள்! கர்நாடக வாசிகளும் கூட நன்றாக தைரியத்தைக் காட்டியுள்ளீர்கள். பரிவாரமும் குஷி, பாப்தாதாவும் குஷி, சேவாதாரிகள் கைதூக்குங்கள். எல்லோருடைய சகயோகத்தின் மூலம் திருப்தியின் வரதானத்தைப் பெற்று விட்டீர்கள். நல்லது.

தாதியுடன்: உங்களுக்கு பாப்தாதா நிறைய உழைப்பைத் தந்து விட்டார். அன்பின் காரணமாக உழைப்பு தெரியவில்லை. (பாபா நீங்கள் அமர்ந்திருக்கிறீர்கள், நானோ பொம்மலாட்ட பொம்மை). இருப்பினும் நல்லது, மிக நல்ல பாகத்தை நடித்துக் கொண்டிருக்கிறீர்கள். (கேட்க முடியவில்லை) பரவாயில்லை, எப்போது காது கேட்பது மந்தமாகி விட்டது என்றால் கண்களின் பாஷை மூலம் சீக்கிரமாகவே புரிந்து கொள்கிறீர்கள். எல்லோரிடமும் அன்பு உள்ளது. எல்லா தாதிகளும் அனைவருக்குமே உயிரானவர்கள். நன்றாக இருக்கிறது. யாரெல்லாம் நிமித்தமாகி இருக்கிறார்களோ, குப்த ரூபத்தில் அல்லது பிரத்யக்ஷ ரூபத்தில், உதவி அளிப்பது என்ற இந்த பாகத்தை மிக நன்றாகச் செய்து கொண்டிருக்கிறீர்கள், பார்க்கும்போது இரண்டு தாதிகள் போலத் தெரிந்தாலும் இருவருமே ஒன்றாக இணைந்தே இருக்கிறீர்கள். நீங்கள் மதுபன் வருவதே பெரிய உதவி செய்வதாகும், யாரெல்லாம் நிமித்தமாகி இருக்கிறார்களோ, உங்களுடைய நாடிநரம்புகளில் பகவான் ஆஜராகி இருக்கிறார். எப்போது பகவான் ஆஜராகி இருக்கிறார் என்றால் நீங்கள் வருவதில்தான் எல்லாமே உள்ளது. பாலனை பெற்றுள்ளீர்கள். அத்தகைய பாக்கியம் எவ்வளவு குறைவானவர்களுக்கே கிடைத்துள்ளது. ஒன்று பாலனையைப் பெறுவது மற்றும் இரண்டாவது, நிமித்தம் ஆவது, இதுவும் கூட நாடகத்தில் கதாநாயகன் பாகம் ஆகும். திரும்ப அளித்துக் கொண்டிருக்கிறீர்கள். எனில் திரும்ப அளிப்பதும் குப்தமாக கணக்கில் சேர்ந்து கொண்டேயிருக்கிறது. கேட்டீர்களா!

(24.11.2000 அன்று மதுபன் வருகின்றபோது ஆக்ரா சேவை நிலையத்து மாதாக்களின் வண்டி ஒரு டிரக் மீது மோதியதால் குறைந்தது 6-மாதாக்கள், ஒரு டீச்சர் மற்றும் டிரைவர், மொத்தம் 8-பேர் தனது பழைய சரீரத்தை விட்டனர், இந்த செய்தியை பாப்தாதாவிற்குக் கூறுகின்றனர்). இப்படி சில நடக்கும். அவர்களது மனதில் அந்த

நேரமும் பாபாவேத் தான் இருந்தார் பாபா, பாபா என்றே கூறிக் கொண்டிருந்தனர். எல்லோருக்கும் பாபா பாபா என்ற நினைவுதான் இருந்தது. அருகில் வந்து மேலே சென்று விட்டனர். பழையவர்கள் அல்லவா ஆதலால் அவர்களுக்கு பாபா பாபா என்ற நினைவுதான் இருந்தது மற்றும் பாபா பாபா என்று கூறிக் கொண்டே சென்று விட்டனர். ஸ்திதி மிக நன்றாக இருந்தது, கத்தவோ கதறவோ இல்லை. வலி அதிகமாகவே இருந்தது. இருப்பினும் ஸ்திதி மிக நன்றாகவே இருந்தது. பாருங்கள், அட்வான்ஸ் பார்ட்டியில் அனைவரும் தேவை. இப்போது நீங்கள் சென்றீர்கள் என்றால் அட்வான்ஸ் பார்ட்டி கூட தயாராக இருக்க வேண்டுமல்லவா. இத்தனை பேர் தேவை எனில் அட்வான்ஸ் பார்ட்டி தயாராகிக் கொண்டுள்ளது, ஏனெனில் எல்லா மாதாக்களும் பக்குவமானவர்களாக இருந்தனர். சாகார தந்தையின் பாலனையை எடுக்கக் கூடியவர்கள் என்றால் பாலனையோ தருவார்கள்தானே. (ஒரு குமாரி 18-வருடம்) அவரும் ஈடுபாடுடையவர், அட்வான்ஸ் பார்ட்டியில் தனது பாகத்தை நடிப்பார். நேரம் அருகில் வந்து கொண்டிருக்கிறது எனில் எல்லாமே தயாராக வேண்டும் அல்லவா! நல்லது. ஓம் சாந்தி.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋❋

## 16.12.2000 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சாக்ஷாத் பிரம்மாதந்தைக்குச் சமமாக கர்ம யோகி பரிஷ்தா ஆகுங்கள் அப்போது சாக்ஷாத்காரம் ஆரம்பமாகும்!

இன்று பிராமண உலகினுடைய படைப்பாளர் பாப்தாதா தனது பிரமாண உலகைப் பார்த்து பார்த்து மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கின்றார். எவ்வளவு சிறிய அன்பான உலகம். ஒவ்வொரு பிராமணரின் நெற்றியிலும் பாக்கியத்தின் நட்சத்திரம் மின்னிக் கொண்டிருக்கிறது. நம்பர்வாராக இருந்தாலும் ஒவ்வொருவருடைய நட்சத்திரத்திலும் பகவானைக் கண்டறியும் மற்றும் ஆவதனுடைய சிரேஷ்ட பாக்கியத்தினுடைய ஜொலிப்பு இருக்கிறது. எந்தத் தந்தையை ரிஷி, முனி, தபஸ்விகளும் தெரியாது தெரியாது என்று கூறிச் சென்று விட்டனரோ, அந்தத் தந்தையைப் பிராமண உலகினுடைய சாதாரண ஆத்மாக்களும் கூட கண்டறிந்து கொண்டனர், அடைந்து விட்டனர். இந்த பாக்கியம் எந்த ஆத்மாக்களுக்குப் பிராப்தி ஆகிறது? சாதாரண ஆத்மாக்களுக்கு! தந்தையும் சாதாரண உடலில் வருகிறார் என்றால் குழந்தைகளும் சாதாரண ஆத்மாக்களே, கண்டறிந்து கொண்டனர். இன்று இந்த சபையில் பாருங்கள், யார் அமர்ந்திருக்கிறார்கள்? யாராவது கோடீஸ்வரர் அமர்ந்திருக்கிறாரா? சாதாரண ஆத்மாக்களுடைய மகிமைதான் உள்ளது. தந்தை ஏழைகளுக்குத் தயை புரிபவர் (ஏழைப்பங்காளன்) என பாடப்பட்டுள்ளது. கோடீஸ்வரருக்குத் தயை புரிபவர் என பாடப்படவில்லை. புத்திவானுடைய புத்தி, எந்த கோடீஸ்வரரின் புத்தியையும் மாற்ற முடியாதா, என்ன? என்ன பெரிய விஷயம்! ஆனால் டிராமாவுடைய மிக நல்ல நன்மைக்கான நியமம் உருவாக்கப்பட்டுள்ளது, பரமாத்ம காரியத்தில் துளித்துளி குளம் (சிறு துளி பெரு வெள்ளம்!) ஆக வேண்டும். அநேக ஆத்மாக்களுடைய எதிர்காலம் உருவாக வேண்டும். 10-20 பேருக்கு அல்ல, அநேக ஆத்மாக்களுக்குப் பலன் ஏற்பட வேண்டும். ஆதலால், சிறு துளி பெரு

வெள்ளம்! என்று மகிமை செய்யப்பட்டுள்ளது. இப்போது எல்லோரும் எந்தளவு உடல், மனம், பொருளை பயனுள்ளதாக்கிக் கொண்டிருக்கிறீர்களோ அந்தளவே வெற்றி நட்சத்திரம் ஆவீர்கள். எல்லோரும் வெற்றி நட்சத்திரம் ஆகி விட்டீர்களா? ஆகி விட்டீர்களா அல்லது இப்போது ஆக வேண்டுமா, யோசித்துக் கொண்டிருக்கிறீர்களா? யோசிக்காதீர்கள். செய்வோம், பார்ப்போம், செய்யத்தான் வேண்டும்... இப்படி யோசிப்பதும் கூட நேரத்தை இழப்பதாகும். எதிர்காலம் மற்றும் நிகழ்காலத்தினுடைய பிராப்தியை இழப்பதாகும்.

பாப்தாதாவிடம் சில குழந்தைகளுடைய ஒரு சங்கல்பம் வந்தடைந்தது. வெளியில் உள்ளவர்களோ ஒன்றும் அறியாதவர்கள் ஆனால் பிராமண ஆத்மாக்கள் ஒன்றும் அறியாதவர்கள் அல்ல, சிந்தனையாளர்கள், புத்திசாலிகள் ஆனால் அவ்வப்போது சில குழந்தைகளிடம் ஒரு பலவீனமான சங்கல்பம் எழுகிறது, கூறட்டுமா? கூறட்டுமா? எல்லோரும் கை உயர்த்துகிறார்கள், மிக்க நன்று. அவ்வப்போது நினைக்கிறார்கள் விநாசம் ஆகுமா, இல்லையா. 99'ம் முடிந்து விட்டது, 2000'ம் முடியப் போகிறது, இப்போது எது வரை? பாப்தாதா நினைக்கின்றார் -சிரிப்பூட்டும் விஷயம் என்னவெனில் விநாசத்தை நினைப்பது என்றால் தந்தைக்குப் பிரியாவிடை அளிப்பதாகும் ஏனெனில் விநாசமானால் தந்தையோ பரந்தாமம் சென்று விடுவார். ஆகவே இந்த சங்கமத்தில் களைப்படைந்து விட்டீர்களா என்ன? வைரத்திற்குச் சமமாகக் கூறுகிறீர்கள் மற்றும் தங்கத்தை அதிகம் நினைக்கிறீர்கள், ஆகத்தான் போகிறது ஆனால் ஏன் காத்திருக்கிறீர்கள்? பல குழந்தைகள் நினைக்கின்றனர் பயனுள்ளதாக்குவோம் ஆனால் நாளையோ, அதன் மறுநாளோ விநாசம் ஆனது என்றால், நம்முடையதோ காரியத்தில் வரவேயில்லை, நம்முடையதோ சேவையில் ஈடுபடுத்தவேயில்லை, எனவே சிந்தித்து செயல்படுவோம். கணக்காக செய்வோம், கொஞ்சம் கொஞ்சமாகச் செய்வோம். இந்த சங்கல்பம் தந்தையிடம் வந்தடைகிறது; ஆனால் இவ்வாறு வைத்துக் கொள்ளுங்கள், இன்று குழந்தைகள் நீங்கள் தங்களுடைய உடலை சேவையில் சமர்ப்பணம் செய்தீர்கள், மனதை உலக மாற்றத்திற்கான அதிர்வலைகளைப் பரப்புவதிலேயே நிரந்தரமாக ஈடுபடுத்தினீர்கள், செல்வம் என்ன உள்ளதோ, இருந்தால் பிராப்திக்கு முன் ஒன்றுமே இல்லை ஆனால் என்ன உள்ளதோ, இன்று நீங்கள் செய்கிறீர்கள் மற்றும்

நாளை விநாசமாகி விடுகிறது எனில் உங்களுடையது உபயோகமானதா அல்லது வீணானதா? நினைத்துப் பாருங்கள், சேவையிலோ ஈடுபடுத்தவில்லை என்றால் என்ன உபயோகமானது? நீங்கள் எவருக்காக உபயோகப்படுத்தினீர்கள்? பாப்தாதாவுக்காக உபயோகப்படுத்தினீர்கள்தானே? என்றால் பாப்தாதாவோ அவிநாசியானவர், அவரோ விநாசமாவதில்லை. அவிநாசி கணக்கில், அவிநாசி பாப்தாதாவிடம் நீங்கள் இன்று சேமித்தது, ஒரு மணி நேரம் முன்பு சேமித்தது, அவிநாசி தந்தையிடம் தங்களுடைய கணக்கு, ஒன்றுக்கு கோடி மடங்கு சேமிப்பாகி விடுகிறது. ஒன்றுக்கு கோடி மடங்கு தருவதற்கு தந்தையும் கட்டுப்பட்டிருக்கிறார் என்றால் தந்தையோ சென்று விட மாட்டார்தானே. பழைய சிருஷ்டி விநாசமாக வேண்டுமல்லவா! ஆதலால் தங்கள் மனதார செய்தவற்றுக்கு, கட்டாயத்தின் பேரில் செய்தவற்றுக்கு, பிறர் செய்வதைப் பார்த்து செய்தவற்றுக்கு, அதற்கு முழுமையாகக் கிடைக்காது. நிச்சயம் கிடைக்கும் ஏனெனில் வள்ளலுக்குத் தந்தீர்கள் ஆனால் முழுமையாகக் கிடைக்காது. ஆதலால் இப்படி நினைக்காதீர்கள் -நல்லது, இப்போது விநாசமோ 2001-வரைத் தென்படவில்லை, இப்போதோ நிகழ்ச்சிகள் நடத்திக் கொண்டுள்ளனர், கட்டிடம் கட்டிக் கொண்டுள்ளனர்; பெரிய பெரிய திட்டம் போட்டுக் கொண்டிருக்கின்றனர் எனில் 2001-வரைத் தென்படவில்லை, தென்படாது. எப்போதும் இத்தகைய விஷயங்களைத் தனது ஆதாரமாக்கி, அலட்சியத்தில் வந்து விடாதீர்கள். திடீரென நடக்கும்! இன்று இங்கு அமர்ந்துள்ளீர்கள், ஒரு மணி நேரம் கழித்தும்கூட ஆகலாம். ஆகாது, பயப்படாதீர்கள், தெரியவில்லையே ஒரு மணி நேரம் கழித்து என்ன ஆகுமோ என. சாத்தியமுண்டு. அந்தளவு எவர் ரெடியாக இருக்க வேண்டும். சிவராத்திரி வரை செய்ய வேண்டும் என நினைக்காதீர்கள். நேரத்திற்காக காத்திருக்காதீர்கள். நேரம் உங்களுடைய படைப்பு, நீங்கள் மாஸ்டர் படைப்பவர். படைப்பவர், படைப்பினுடைய வேலைக்காரன் ஆவதில்லை. நேரம் படைப்பு, உங்களுக்குக் கீழ்படிந்து நடக்கக் கூடியது. நீங்கள் நேரத்திற்காக காத்திருக்காதீர்கள் ஆனால் இப்போது நேரம் உங்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது. பல குழந்தைகள் நினைக்கின்றனர், 6-மாதத்திற்காக பாப்தாதா கூறினார் என்றால் 6-மாதமோ ஆகி விட்டது. ஆகத்தான் செய்யும் ஆனால் பாப்தாதா கூறுகின்றார் இந்த எல்லைக்குட்பட்ட விஷயங்களின் ஆதாரங்களை

எடுக்காதீர்கள், எவர் ரெடி ஆகுங்கள். ஆதாரமற்றவை, ஒரு நொடியில் ஜீவன்முக்தி! சவால் விடுகிறீர்கள் ஒரு நொடியில் ஜீவன்முக்திக்கான ஆஸ்தியை எடுங்கள் என. எனில் நீங்கள் ஒரு நொடியில் தன்னை ஜீவன்முக்தியாக்க முடியாதா என்ன? ஆதலால் காத்திருக்காதீர்கள், சம்பன்னம் ஆவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுங்கள்.

பாப்தாதாவிற்கு குழந்தைகளின் விளையாட்டைப் பார்த்து சிரிப்பும் வருகிறது. எந்த விளையாட்டைப் பார்த்து? கூறட்டுமா? இன்று முரளி கூறவில்லை, சமாச்சாரம் கூறுகிறோம். இது வரையில் பல குழந்தைகளுக்குப் பொம்மைகளுடன் விளையாடுவது மிகவும் நன்றாக உள்ளது. சின்னச் சின்ன விஷயங்களுடைய பொம்மைகளுடன் விளையாட, சின்ன விஷயத்தைத் தனதாக்குவது, இதனால் நேரத்தை இழக்கின்றனர். இவை பக்க காட்சிகள். விதவிதமான சம்ஸ்காரங்களின் விஷயங்கள் அல்லது நடத்தைகள் இந்த சம்பூர்ண குறிக்கோளுக்கு இடையில் பக்க காட்சிகள். இதில் நிற்பது என்றால் சிந்திப்பது, பிரபாவத்தில் வருவது, நேரத்தை இழப்பது, ஆர்வத்தோடு கேட்பது, சொல்வது, வாயுமண்டலத்தை உருவாக்குவது,... இவையே நிற்பது என்பது, இதனால் சம்பூரணத்தின் குறிக்கோளிலிருந்து தூர சென்று விடுகிறீர்கள். உழைப்பு அதிகம், விருப்பமும் அதிகம், 'தந்தைக்குச் சமம் ஆகவே வேண்டும்', சுப சங்கல்பம், சுப ஆசைதான் ஆனால் உழைத்தும் கூட தடை வந்து விடுகிறது. இரண்டு காதுகள் உள்ளன, இரண்டு கண்கள் உள்ளன, முகம் இருக்கிறது என்றால் பார்க்கவும் முடிகிறது, கேட்கவும் முடிகிறது, பேசவும் முடிகிறது ஆனால் தந்தையின் மிகப் பழைய ஸ்லோகன் சதா நினைவில் இருக்கட்டும் -பார்த்தும் பார்க்காமல் இருப்பது, கேட்டும் கேளாமல் இருப்பது, கேட்டுக் கொண்டே சிந்திக்கக் கூடாது, கேட்டுக் கொண்டே உள்ளடக்க வேண்டும், பரப்பக் கூடாது! இந்த பழைய ஸ்லோகனை நினைவில் வைப்பது மிக அவசியம் ஏனெனில் நாளுக்கு நாள் என்னவெல்லாம், எல்லோரைப் போலவே எப்படி பழைய சரீரத்தின் கணக்கு முடிந்து கொண்டிருக்கிறதோ, அதே போல பழைய சம்ஸ்காரமும், பழைய நோய்களும் கூட எல்லோருடையதும் வெளிப்பட்டு முடிய வேண்டும், ஆதலால் பயப்படக்கூடாது இப்போது என்னவென்று தெரியவில்லை இன்னும் அதிகமாகிக் கொண்டே போகிறது, முன்னாடி இப்படி இருக்கவில்லை என. எது இல்லையோ, அது கூட இப்போது

வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது, வெளிப்படுகிறது. உங்களுடைய எதிர்கொள்ளும் சக்தி, பொறுத்துக்கொள்ளும் சக்தி, உள்ளடக்கும் சக்தி, தீர்மானிக்கும் சக்தியினுடைய பேப்பர் தான் இவை. என்ன, 10-வருஷத்து முந்திய பேப்பர் வருமா என்ன? பி.ஏ. (B.A.) வகுப்பின் பேப்பர், எம்.ஏ. (M.A.) வகுப்பில் வருமா என்ன? ஆதலால் என்ன நடந்து கொண்டிருக்கிறது என பயப்பட வேண்டாம். இது நடந்து கொண்டிருக்கிறது, நடந்து கொண்டிருக்கிறது... விளையாடடைப் பாருங்கள். பேப்பரில் தேர்ச்சி பெறுங்கள், மதிப்புடன் தேர்ச்சி பெறுங்கள்.

பாப்தாதா முன்பும் கூறியிருந்தார், தேர்ச்சி பெறுவதற்கு அனைத்தையும் விட மிக எளிய சாதனம், பாப்தாதாவுடன் இருங்கள், எது உங்களுடைய வேலையில்லையோ, அதை கடந்து செல்ல விடுங்கள், கூடவே (pass) இருங்கள், கடந்து (pass) செல்லுங்கள், தேர்ச்சி (pass) பெறுங்கள்! என்ன கஷ்டம் உள்ளது? டீச்சர்கள் கூறுங்கள், மதுபன்வாசிகள் கூறுங்கள். மதுபன்வாசிகள் கை உயர்த்துங்கள். மதுபன்வாசிகள் புத்திசாலிகள், முன்னே வந்து விடுகிறார்கள், நல்லது வாருங்கள். பாப்தாதாவிற்கு மகிழ்ச்சி. தங்களுடைய உரிமையை எடுத்துக் கொள்கிறீர்கள்தானே? நன்றாக இருக்கிறது, பாப்தாதாவிற்கு கோபம் இல்லை, நல்லது, முன்னால் அமருங்கள். மதுபனில் இருக்கிறீர்கள் எனில் கொஞ்சமாவது அருகில் உபசரிப்பு வேண்டுமல்லவா ஆனால் 'பாஸ்' (pass) என்ற வார்த்தை சதா ஞாபகத்தில் இருக்க வேண்டும். மதுபனில் புதுப்புது விஷயங்கள் நடக்கின்றன, கொள்ளைக்காரன் கூட வருகிறான். நிறைய புதுப்புது விஷயங்கள் நடக்கின்றன, இப்போது தந்தை பொதுவாக என்ன கூறினாரோ, கொஞ்சம் ரகசியமும் உள்ளது ஆனால் மதுபன்வாசிகளுக்குத் தெரியும்! பொழுதுபோக்குங்கள், குழப்பமடையக் கூடாது. குழம்ப வேண்டுமா அல்லது பொழுதுபோக்கு என புரிந்து கொண்டு மகிழ்ச்சியாக கடக்க வேண்டுமா? குழம்புவது நன்றாக உள்ளதா அல்லது தேர்ச்சி பெற்று மகிழ்ச்சியாக இருப்பது நன்றாக உள்ளதா? தேர்ச்சி பெற வேண்டும்தானே. எனில் தேர்ச்சி பெறுங்கள். என்ன பெரிய விஷயம்? ஒன்றும் பெரிய விஷயமில்லை. விஷயத்தைப் பெரியதாக்க வேண்டுமா அல்லது சிறியதாக்க வேண்டுமா, நமது புத்தியைப் பொறுத்தது. யார் விஷயத்தைப் பெரியதாக்கி விடுகிறாரோ, அவருக்கு அஞ்ஞான காலத்திலும் கூட

கூறுகிறார்கள், இவர் கயிறை பாம்பு ஆக்கி விடுபவர் என; எனவே இந்த மாதிரி விளையாடாதீர்கள். இப்போதே இந்த விளையாட்டை முடித்து விடுங்கள்.

இன்று விசேஷ சமாச்சாரமோ கூறப்பட்டது, இப்போது பாப்தாதா ஒரு சகஜ முயற்சியைக் கூறுகின்றார், கஷ்டமானது இல்லை. தந்தைக்குச் சமமாக ஆகவே வேண்டும் என்ற இந்த சங்கல்பமோ எல்லோருக்கும் உள்ளது. ஆக வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறீர்களா. வெளிநாட்டினர் ஆக வேண்டுமா? டீச்சர்கள் ஆக வேண்டுமா? இத்தனை டீச்சர்கள் வந்துள்ளனர். ஆஹா, டீச்சர்களுடைய அதிசயம்! பாப்தாதா இன்று நல்ல செய்தி கூறுவார், டீச்சர்களுக்கு. என்ன நல்ல செய்தி, கூறுங்கள். டீச்சர்களுக்கு இன்று தங்கத்திலான பேட்ஜ் (golden badge) கிடைத்துள்ளது, கை உயர்த்துங்கள். பாண்டவர்களுக்கும் கிடைத்துள்ளதல்லவா? தந்தையை ஒத்தவர்கள் எனில் வைத்துக் கொள்ளக் கூடாது. பாண்டவர்கள் பிரம்மாதந்தையை ஒத்தவர்கள். (அவர்களுக்கு வேறு விதமான தங்க-பேட்ஜ் கிடைத்துள்ளது). பாண்டவர்களுடையது ராயல் கோல்டன் பேட்ஜ் (royal golden badge). தங்க-பேட்ஜ் காரர்களுக்கு பாப்தாதாவுடைய நூராயிரம் கோடி முறை வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள்!

பாப்தாதா உள்நாடு, வெளிநாட்டில் கேட்டுக் கொண்டிருப்பவர்களுக்கு மற்றும் தங்க-பேட்ஜ் கிடைத்தவர்களுக்கு, அவர்கள் அனைவரும் கூட புரிந்து கொள்ளுங்கள் நமக்கும் கூட பாப்தாதா வாழ்த்துக்களை அளித்துள்ளார் என்று, பாண்டவர்களாகட்டும், சக்திகளாகட்டும், எந்த ஒரு காரியத்திற்கும் நிமித்தம் ஆகக் கூடியவர்களுக்கும் முக்கியமாக இந்த தாதிகளுக்கும், பரிவாரத்தில் இருப்பவர்களுக்கும் ஏதாவது விசேஷத்தின் ஆதாரத்தில் தங்க-பேட்ஜ் அளிக்கின்றார். யாருக்கு வேண்டுமானாலும் எந்த விசேஷத்தின் ஆதாரத்தில் -'சரண்டர்' ஆனதின் ஆதாரத்தில், ஏதாவது சேவையில் விசேஷமாக முன்னேறக்கூடியவர்களுக்கு -தாதிகளின் மூலமாகவும் தங்க-பேட்ஜ் கிடைத்துள்ளது, எனில் தூரத்தில் அமர்ந்து கேட்டுக் கொண்டிருப்பவர்களுக்கும் கூட மிக்க வாழ்த்துக்கள்! நீங்கள் அனைவரும் தூரத்தில் அமர்ந்து முரளி கேட்பவர்களுக்காக, தங்க-பேட்ஜ் காரர்களுக்காகவும் ஒரு கை தட்டுங்கள், அவர்கள்

உங்களது கைத்தட்டலை பார்த்துக் கொண்டிருக்கின்றனர். அவர்களும் சிரிக்கின்றனர், குஷி அடைகின்றனர்.

பாப்தாதா சகஜ முயற்சி பற்றிக் கூறிக் கொண்டிருந்தார் -இப்போது சமயமோ 'அசானக்' ஆகப் போகிறது, ஒரு மணி நேரம் முன்னதாகவே பாப்தாதா அறிவிக்க மாட்டார், அறிவிக்க மாட்டார், அறிவிக்க மாட்டார்! நம்பர் எவ்வாறு உருவாகிறது? ஒருவேளை 'அசானக்' ஆகவில்லை எனில் பேப்பர் எப்படி வரும்? மதிப்புடன் தேர்ச்சி பெற்ற சான்றிதழ், இறுதிச் சான்றிதழோ 'அசானக்'ல்தான் கிடைக்க வேண்டும். ஆதலால் தாதிகளுடைய ஒரு சங்கல்பம் பாப்தாதாவை வந்தடைந்தது. தாதிகள் விரும்புகின்றனர், இப்போது பாப்தாதா சாக்ஷாத்காரத்தின் சாவியைத் திறக்க வேண்டும், இது இவர்களின் சங்கல்பம். நீங்கள் அனைவரும் கூட விரும்புகிறீர்கள்தானே? பாப்தாதா சாவியைத் திறக்கட்டுமா அல்லது நீங்கள் நிமித்தம் ஆவீர்களா? நல்லது, பாப்தாதாவே சாவியைத் திறக்கட்டும், சரிதான். பாப்தாதா ஹான் ஜீ என்கிறார், (கை தட்டுகின்றனர்) முதலில் முழுமையாகக் கேளுங்கள். பாப்தாதாவிற்குச் சாவியைத் திறப்பதற்கு நேரமாகுமா என்ன, ஆனால் யார் மூலமாகச் செய்ய வேண்டும்? யாரைப் பிரத்யக்ஷம் செய்ய வேண்டும்? குழந்தைகளையா அல்லது தந்தையையா? தந்தையையும் கூட குழந்தைகள் மூலம் செய்ய வேண்டும் ஏனென்றால் ஒருவேளை ஜோதிபிந்துவின் சாட்சாத்காரமும் ஆனது என்றாலும், அதிகமானோர் இரக்கத்திற்குரியவர்கள்..., இரக்கத்திற்குரியவர்கள்தானே! எனில் இது என்னவென்று புரிந்து கொள்ளவோ மாட்டார்கள். இறுதியில் சக்திகளும் மற்றும் பாண்டவக் குழந்தைகள் மூலம் தந்தையின் பிரத்யக்ஷம் ஆக வேண்டும். எனில் பாப்தாதா இதைத்தான் கூறுகின்றார், எப்போது எல்லாக் குழந்தைகளும் ஒரே சங்கல்பம் செய்வீர்களோ, தந்தைக்குச் சமமாக ஆகவே வேண்டும் என, இதிலோ இரண்டு சிந்தனை இல்லையல்லவா, ஒன்றே ஒன்றுதானே உள்ளது! ஆதலால் பிரம்மாதந்தையைப் பின்பற்றுங்கள், அசரீரி, பிந்தி தானாகவே ஆகி விடுவீர்கள். பிரம்மாதந்தையிடம் அனைவருக்கும் அன்பு உள்ளதல்லவா. எல்லோரையும் விட அதிகமாகப் பார்த்தவர், அனைவரிடமும் இருந்தாலும், ஆனால் வெளிநாட்டவருக்கு பிரம்மாதந்தையிடம் மிகுந்த அன்பு உள்ளது. இந்த கண் மூலம் பார்க்கவில்லை ஆனால் அனுபவத்தின் கண் மூலம் வெளிநாட்டினர்

பெரும்பான்மையோர் பிரம்மாபாபாவைப் பார்த்துள்ளனர் மற்றும் மிகுந்த அன்பும் உள்ளது. அப்படியே பாரதத்தின் கோபிகைகள், கோபர்கள் இருந்தாலும்கூட பாப்தாதா வெளிநாட்டினருக்கு அவ்வப்போது அனுபவத்தின் கதையைக் கூறுகின்றார், பாரதவாசிகள் கொஞ்சம் குப்தமாக உள்ளனர், அவர்கள் பிரம்மாபாபாவைப் பற்றிக் கூறுகின்றனர் என்றால் அவர்களின் கதையையும் பாப்தாதாவும் கேட்கின்றார் மற்றும் மற்றவர்களுக்கும் கூறுகின்றார், வெளிநாட்டினருக்கு வாழ்த்துக்கள். லண்டன், அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஆப்பிரிக்கா, ஆசியா, ரஷ்யா, ஜெர்மனி,... அதாவது நாலாபுறமும் உள்ள வெளிநாட்டினருக்கு, தூரத்தில் அமர்ந்திருந்தாலும் கேட்டுக் கொண்டிருக்கின்றனர், அவர்களுக்கும் கூட பாப்தாதா வாழ்த்துக்களை அளிக்கின்றார், முக்கியமாக பிரம்மாபாபா வாழ்த்துக்களை அளிக்கின்றார். பாரதவாசிகள் கொஞ்சம் குப்தமானவர்கள், இந்தளவு பிரசித்தம் செய்வதில்லை, குப்தமாக இருக்கிறார்கள். இப்போது பிரத்யக்ஷம் செய்யுங்கள். மற்றபடி பாரதத்திலும் மிக நல்ல நல்லவர்கள் உள்ளனர். இத்தகைய கோபிகைகள், ஒருவேளை அவர்களது அனுபவம், இந்நாட்களில் இருக்கும் பிரதமமந்திரி, ராஷ்டிரபதி ஆகியோர் கேட்டார்கள் என்றால் அவர்களது கண்களிலும் கண்ணீர் வந்து விடும். இத்தகைய அனுபவம் உள்ளது ஆனால் குப்தமாக இருக்கிறார்கள், அவ்வளவாகக் கூற மாட்டார்கள், வாய்ப்பும் குறைவாகக் கிடைக்கிறது. எனில் பாப்தாதா இதைத்தான் கூறுகின்றார், பிரம்மாதந்தையிடம் அனைவருக்கும் அன்பு உள்ளது, ஆதலால் தன்னை என்னவென்று கூறுகிறீர்கள்? பிரம்மாகுமாரி அல்லது சிவகுமாரி? பிரம்மாகுமாரி என்று தானே கூறுகிறீர்கள், எனில் பிரம்மாதந்தையையிடம் அன்போ உள்ளது தானே; என்றால், போகட்டும் அசரீரி ஆவதில் கொஞ்சம் உழைக்க வேண்டியிருக்கிறது என்றால், ஆனால் பிரம்மாதந்தை இப்போது அந்த ரூபத்தில் இருக்கின்றார்? எந்த ரூபத்தில்? கூறுங்கள். (பரிஷ்தா ரூபத்தில்) எனில் பிரம்மாவிடம் அன்பு என்றால் பரிஷ்தா ரூபத்துடன் அன்பு! போகட்டும் பிந்தி ஆவதற்கு கடினமாக இருக்கிறது என்றால், பரிஷ்தா ஆவதோ அதை விட எளிதல்லவா. கூறுங்கள், பிந்தி ரூபத்தை விட பரிஷ்தா ரூபமோ எளிதுதானே. உங்களால் 'அகௌண்ட்'ன் வேலை செய்தபடியே பிந்தி ஆக முடியுமா? பரிஷ்தாவோ ஆக முடியும்தானே. பிந்தி ரூபத்தில் காரியம் செய்தபடியே அவ்வப்போது இந்த சரீரத்தில்

வர வேண்டியிருக்கிறது ஆனால் பாப்தாதா பார்த்தார். விஞ்ஞானிகள் ஒரு ஒளியின் ஆதாரத்தில் 'ரோபோ' (robot) தயாரித்துள்ளனர், கேள்விப்பட்டீர்கள்தானே. பார்த்திருக்க மாட்டீர்கள், கேள்விப்பட்டிருப்பீர்கள். மாதாக்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? உங்களுக்கு அதன் படத்தைக் காண்பிப்போம். அந்த ஒளியின் ஆதாரத்தில் 'ரோபோ' செய்துள்ளனர் மற்றும் அது எல்லா வேலைகளையும் செய்கிறது. மேலும் மிக விரைவாகவும் செய்கிறது, ஒளியின் ஆதாரத்தில். இன்னும் விஞ்ஞானத்தின் பிரத்யக்ஷ சான்றுகள் உள்ளன. எனில் பாப்தாதா கூறுகின்றார், அமைதிசக்தி மூலம், அமைதியின் ஒளி மூலம் உங்களால் காரியங்கள் செய்ய முடியாதா, என்ன? செய்ய முடியாதா, என்ன? பொறியியலாளர்கள் மற்றும் விஞ்ஞானிகள் இங்கு அமர்ந்திருக்கிறீர்கள்தானே. எனில் நீங்களும் ஒரு ஆன்மீக ரோபோவின் ஸ்திதியை உருவாக்குங்கள். அதை ஆன்மீக கர்மயோகி, பரிஷ்தா கர்மயோகி எனக் கூறுவோம். முதலில் நீங்கள் தயாராக வேண்டும். பொறியியலாளர், விஞ்ஞானிகள் என்றால் முதலில் நீங்கள் அனுபவம் செய்ய வேண்டும். செய்வீர்களா? செய்ய முடியுமா? நல்லது, இப்படி ஒரு திட்டம் செய்யுங்கள். பாப்தாதா அத்தகைய ஆன்மீக போகும்போதும் வரும்போதும் கர்மயோகி பரிஷ்தாக்களைப் பார்க்க விரும்புகிறார். அமிர்தவேளை எழுந்திரியுங்கள், பாப்தாதாவுடன் சந்திப்பு செய்யுங்கள், ஆன்மீக உரையாடல் செய்யுங்கள், வரதானம் பெற்றுக் கொள்ளுங்கள்! என்ன செய்ய வேண்டுமோ, அதைச் செய்யுங்கள் ஆனால் பாப்தாதாவிடம் தினமும் அமிர்தவேளையில் 'கர்மயோகி பரிஷ்தா பவ' என்ற வரதானத்தைப் பெற்றுக் கொண்டு வேலை தொழிலில் ஈடுபடுங்கள். இது செய்ய முடியுமா?

உங்களுடைய துறை (accounts) எல்லாவற்றையும் விட மூளைக்கு வேலை அதிகம் உடையது, உங்களால் ஆக முடியுமா? மதுபன் வாசிகள் கை உயர்த்துங்கள். யார் செய்ய முடியும் என நினைக்கிறீர்களோ அவர்கள் கையை நீட்டி உயர்த்துங்கள். மதுபனின் சகோதரிகள் கை உயர்த்தினார்கள். மதுபனின் அதிர்வலைகள் நாலாபுறம் பரவும். இதில் பரிஷ்தா சொரூபத்தில் கர்ம யோகி, டபுள் லைட், லைட் ஆன சரீரம் மூலம், லைட் ஆகி கர்மம் செய்யுங்கள். பேசும்போதும் பரிஷ்தா ரூபத்தில், வேலை செய்யும்போதும் பரிஷ்தா ரூபத்தில். யாருடன்

வேலையோ அவர் மட்டும் கேட்க வேண்டும், மற்றவர்கள் கேட்கக் கூடாது. வாயுமண்டலம் ஏன் உருவாகிறது? பாப்தாதாவும் பார்த்தார், எந்த ஒரு சிறிய விஷயத்தின் வாயுமண்டலம் உருவாகக் காரணம், யார் பேசுகிறாரோ அவர் அவ்வாறு செய்கிறார் யாருக்கு அந்த விஷயத்தில் எந்த சம்பந்தமும் இல்லையோ, அவருடைய காதிலும் போட்டு விடுகிறார். அவருக்கும் கூட வீண் எண்ணம் ஓட ஆரம்பித்து விடுகிறது. ஆதலால் பரிஷ்தா என்றால் யாருடைய வேலையோ அவருக்கு மட்டும் கூறுபவர். எவ்வளவு வேலை உள்ளதோ அவ்வளவே கூறுவார், கதையாக்கிக் கூற மாட்டார். கதை சொல்லாதீர்கள், கதை எப்போதும் கலந்தும் விடுகிறது மற்றும் நீளமாகி விடுகிறது. பிரம்மாதந்தையுடைய அன்பிற்கான கைம்மாறு -பிரம்மாதந்தைக்குக் சமமாக கர்மயோகி பரிஷ்தா ஆவது!

பாப்தாதா இதைக் கூறுகின்றார் -இந்த ஸ்திதியினுடைய பூமியைத் தயார் செய்தீர்கள் என்றால் பாப்தாதா முன்னால் குழந்தைகள் மூலம் சாக்ஷாத்காரம் அவசியம் செய்விப்பார். முன்னால் தந்தை மற்றும் சாக்ஷாத்காரம் -இந்த இரு வார்த்தைகளையும் நினைவில் வையுங்கள். அவ்வளவுதான், பரிஷ்தாக்கள் மட்டுமே உள்ளனர். சேவையும் செய்கிறீர்கள், மேல் நிலையிலிருந்து பரிஷ்தாக்கள் வந்தனர், செய்தி அளித்தனர், பின்னர் மேலே சென்று விட்டனர், அதாவது உயர்ந்த நினைவில் சென்று விட்டனர். இப்போது நேரத்தின் அனுசாரம் எப்படி எங்கெல்லாம் தண்ணீருக்கான தாகத்திலிருக்கின்றனரோ, அது போல் தற்சமயம் சுத்த, அமைதியான, சுகமான அதிர்வலையினுடைய தாகத்தில் உள்ளனர். பரிஷ்தா ரூபத்தின் மூலம் தான் அதிர்வலைகளைப் பரப்ப முடியும். பரிஷ்தா என்றால் சதா உயர்ந்த ஸ்திதியில் இருப்பவர். பரிஷ்தா என்றால் பழைய உலகம் மற்றும் பழைய சம்ஸ்காரத்தின் தொடர்பு அற்றவர். இப்போது உலக மாற்றம் உங்கள் அனைவருடைய சம்ஸ்கார மாற்றத்திற்காக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இந்த புதிய வருடத்தில் லக்ஷியம் வையுங்கள் -சமஸ்கார மாற்றம், தனக்காகவும் மற்றும் சகயோகத்தின் மூலம் பிறருக்காகவும்! யாராவது பலகீனமாக இருந்தால் சகயோகம் கொடுங்கள், வர்ணனை செய்யாதீர்கள், வாயுமண்டலத்தை உருவாக்காதீர்கள். பரிஷ்தா

சம்ஸ்காரம், பிரம்மாதந்தைக்குச் சமமான சம்ஸ்காரம்! எனில் சகஜ முயற்சியா அல்லது கஷ்டமானதா? கொஞ்சம் கொஞ்சம் கஷ்டமாக இருக்கிறதா? எப்போதும் எந்த விஷயமும் கஷ்டமாவதில்லை, தனது பலவீனங்கள் தான் கஷ்டமாக்குகின்றன. ஆதலால் பாப்தாதா கூறுகிறார், ஹே மாஸ்டர் சர்வ சக்திவான் குழந்தைகளே, இப்போது சக்திகளுடைய வாயுமண்டலத்தைப் பரப்புங்கள். இப்போது வாயுமண்டலத்திற்கு உங்களை மிக மிக மிக தேவைப்படுகிறது. எப்படி இந்நாளில் உலகில் தூய்மைக்கேடு (pollution) உள்ளது, அது போல உலகில் ஒரு நிமிடம் மனதில் சாந்தி சுகத்தினுடைய வாயுமண்டலத்தின் தேவை இருக்கிறது ஏனெனில் மனதினுடைய மாசு அதிகம் உள்ளது, காற்றினுடைய மாசுகளை விட அதிகம் உள்ளது. நல்லது!

நாலாபுறமும் உள்ளவர்கள் பாப்தாதாவிற்குச் சமம் ஆகவே வேண்டும் என்ற லக்ஷியம் வைத்துள்ளவர்களுக்கு, நிச்சய புத்தி வெற்றி பெறும் ஆத்மாக்களுக்கு, சதா பழைய உலகம் மற்றும் பழைய சம்ஸ்காரத்தை திட சங்கல்பம் மூலம் மாற்றம் செய்யக்கூடிய மாஸ்டர் சர்வ சக்திவான் ஆத்மாக்களுக்கு, சதா எவ்வித காரணத்தாலும் சூழ்நிலையாலும் சுபாவ சம்ஸ்காரத்தாலும், பலகீனமான துணைவர்களுக்கு, ஆத்மாக்களுக்கு உதவி அளிக்கக்கூடிய, காரணத்தைப் பார்க்காமல் நிவாரணம் செய்யக்கூடிய அத்தகைய தைரியசாலி ஆத்மாக்களுக்கு, சதா பிரம்மாதந்தையின் சிநேகத்திற்குப் பிரதிபலன் தரக்கூடிய கர்மயோகி பரிஷ்தா ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்!

**சேவையின் வாய்ப்பு -பஞ்சாப்:** பஞ்சாப்காரர்களுக்கு பிரம்மாதந்தையிடம் மிக்க அன்புள்ளவர்கள். நன்றாக உள்ளது, பிரம்மாதந்தையுடைய பாலனையும் பெற்றுள்ளீர்கள் எனில் எப்படி இந்நாளில் பரிசளிப்பதற்கான நிகழ்ச்சி நடத்துகின்றனர், எனில் பாப்தாதா நினைக்கின்றார், எப்படி 'கல்ச்சர் ஆப் ஃபீஸ்' (culture of peace) நிகழ்ச்சியில் நம்பர்-1 பரிசை ஏதோ ஒரு மண்டலம் பெற்றது, சென்டர் பெற்றது, அப்படி இந்த கர்ம யோகி பரிஷ்தா சொரூபத்தின் நிலையில் நம்பர்-1 பரிசை பஞ்சாப் பெறட்டும். முடியுமா? பஞ்சாப்காரர்கள் கை உயர்த்துங்கள். முதல் பரிசு பெறுவீர்களா? பஞ்சாப்காரர்கள் யார் முதல்

பரிசு பெறுவீர்களோ அவர்கள் ஒரு கை ஓசை எழுப்புங்கள். ரொம்ப நேரமாக உட்கார்ந்து இருக்கிறீர்கள், டிரில் செய்யுங்கள், எழுந்திரியுங்கள் மற்றும் சென்டர்களுடைய முக்கிய பாண்டவர்களும் எழுந்திரியுங்கள். முதல் பரிசு பெறுவீர்களா? நல்லது, இப்போது பார்ப்போம் மூன்று பரிசுகள் யார் பெறுகிறார்கள் என்பதை. முதலாவது, இரண்டாவது, மூன்றாவது என மூன்று பரிசுகள் பாப்தாதா தருவார். டீச்சர்கள் கூறுங்கள், 6-மாதம் வேண்டுமா? யாருக்கெல்லாம் 6-மாதம் தேவையோ அவர்கள் கை உயர்த்துங்கள். நல்லது, மற்றவர்களுக்கு எவ்வளவு காலம் தேவை, 12-மாதம்? இன்னும் குறைவாகத் தேவையா! சரி, பாப்தாதா மார்ச் மாதம் பார்ப்பார்? பின்பு சதவிகிதம் அல்லது முழுமை, இதன்படி பரிசு வழங்குவார். சரிதானா. மார்ச் மாதம் இறுதி மிலனில். (இப்போது இறுதி மிலன் சிவ ராத்திரி அன்று). பிப்ரவரி இறுதி அல்லது மார்ச், விஷயம் ஒன்று தான்; ஆனால் இதன் அர்த்தம் இதுவல்ல, இது பஞ்சாப்காரர்களுக்கு மட்டுமே, எல்லா ஜோன்கள், எல்லா சென்டர்களும் தயாராக வேண்டும். முடியுமா, பஞ்சாபை விட வேறு யாராவது முதல் எண்ணை விட இன்னும் முன்னே செல்ல முடியுமா, ஏ-1 (A-1). ஆதலால் எல்லா ஜோன்களுடைய பேப்பரை எடுப்பார்? மதுபனும் கூட ஜோன்தான், அப்படி நினைக்காதீர்கள் நாம் எந்த ஜோனிலும் இல்லை என, முதலில் மதுபன். நல்லது!

**ஜகதீஸ் சகோதரருடன்:** நன்றாக இருக்கிறீர்களா. (அதிகமாக உங்களுக்கேத் தெரியும்). நன்றாக இருக்கிறீர்கள். இப்போது இயற்கையான சாதனங்கள் மூலம் தான் நன்றாக இருக்கிறீர்கள். சேவையோ நீங்கள் ஆரம்பத்திலிருந்தே நிறைய செய்துள்ளீர்கள் (பொறுப்பை மீதமில்லாமல் முடித்து விட்டீர்கள், தனது பாக்கியத்தை உருவாக்கி விட்டீர்கள்). இப்போதும் கூட விரும்பினால் சரீரம் மூலம் அதிகம் செய்ய முடியாது ஆனால் எந்த ஆத்மாக்கள் எந்த சேவையில் நிமித்தமாகி சேவையினுடைய கண்டுபிடிப்பிற்கு நிமித்தமானார்களோ, அவர்களுக்கு அந்த சேவையின் வெற்றியின் பங்கு சேமிப்பாகிறது. எப்படி பட விளக்கத்தின் கண்டுபிடிப்பு ஆனது, என்றால் அதன் மூலம் அதிகமானோருக்கு செய்தி கிடைத்துக் கொண்டிருக்கிறது, விழா நடந்தது இதுவும் எண்ணிக்கையின் சேவை, வி.ஐ.பி. வருகின்றனர் எனில் சிலரே ஆனால் கான்ஃபிரன்ஸ் எனில் இந்த சேவையின் மூலம் சொற்கவர்ச்சியின் மூலம் வி.ஐ.பி. வருகின்றனர் அவர்களுக்கு சேவை

நடக்கிறது என்றாலும் அதிலும் சிலரே. இப்போது பல்வேறு துறையிருக்கான சேவை; எந்த துறை நடந்து கொண்டிருக்கிறதோ, இதிலும் விதவிதமான துறையைச் சேர்ந்த வி.ஐ.பி.'கள் வந்து கொண்டிருக்கின்றனர் மற்றும் துறையினருடைய சேவை மூலம் நெருக்கத்தில் சகயோகத்திலும் வருகின்றனர், ஏன்? ஒன்றோ, 15-துறைகள், அதிகமாக உள்ளது எனில் 15-துறையுமே தனித்தனியாக சேவை செய்து கொண்டிருக்கின்றனர், தனித்தனியான வி.ஐ.பி.'களை அழைக்கின்றனர் மற்றும் இரண்டாவது, 2-3 நாட்கள் வைப்பதற்கான சாதனமும் கிடைக்கிறது. கான்பிரன்ஸ்'ல் வருகின்றனர் ஆனால் வி.ஐ.பி. யாரெல்லாம் உள்ளனரோ அவர்கள் சொற்பொழிவாற்றி பெரும்பான்மையோர் சென்று விடுகின்றனர், பின்பும் கூட சாதனம் இருக்கிறது, ஈர்ப்பும் உள்ளது வி.ஐ.பி.கள் சொற்பொழிவாற்றுவதற்கு. யாரெல்லாம் என்ன கண்டுபிடித்தனரோ, நிமித்தமானரோ, அவர்களுக்கு அந்த சேவையின் பங்கு கிடைக்கிறது. ஆதலால் நீங்கள் கவலைப்பட வேண்டாம், என்னால் சேவை செய்ய முடியவில்லை என, இல்லை, சேவை ஆகிக் கொண்டிருக்கிறது. விதவிதமான சேவைக்கு நிமித்தமானீர்கள். இவர் (ச-ர் ரமேஷ்) பட விளக்கத்தை உருவாக்கினார், அவர் (ச-ர் நிர்வைர்) ஏணிப்படியை உருவாக்கினார், யாராவது சேவைக்கு நிமித்தமானார்கள், சிலர் கான்பிரன்ஸ்'கு நிமித்தமாகின்றனர் மற்றும் தாதிகளோ அனைத்திலும் உள்ளனர். நீங்கள் பல பிரிவுகளுக்கு (wings) நிமித்தமானவர்கள். தாதிகளுடைய குடைநிழலும் உள்ளது. ஆம், வெளிநாட்டிலும் சேவை செய்துள்ளீர்கள். அஸ்திவாரம் போடுவதில் உழைப்பு தேவைப்படுகிறது. ஆதலால் கவலைப்பட வேண்டாம், உங்களுடைய பங்கு சேர்ந்து கொண்டிருக்கிறது. கொஞ்சம் கவலையுள்ளது. (பாபாவை பிரத்யக்ஷம் செய்யவில்லை என, இந்தக் கவலை உள்ளது). இந்த வாயுமண்டலம் மூலம் நடந்தேறி விடும். நேரமும் காத்துக் கொண்டிருக்கிறது, திரையை விலக்கவதற்காக! இப்போது இந்த வருஷத்தில் பரிஷ்தா ரூபம் ஆகி விடுங்கள், நாலா புறமும் சாக்ஷாத்காரம் ஆரம்பமாகி விடும். பார்ப்பார்கள் யார் இவர் வந்துள்ளார், இந்த பிரம்மாபாபாவை எப்படி முதன் முதலில் பார்த்தீர்கள், அப்படி பிரம்மாதந்தையுடன் கூடகூடவே பாண்டவ சக்திகள் உங்களையும் பார்ப்பார்கள். யார் இவர்கள், எங்கே இருக்கிறார்கள் எனத் தேடுவார்கள். முதன் முதல் ஆத்மாவாக டில்லி சேவையில் வெளிப்பட்டீர்கள். மற்றும் வந்தவுடனேயே சேவையை

ஆரம்பித்து விட்டீர்கள்; முதன் முதல் நீங்கள் எழுதிய புத்தகம் ஞாபகம் இருக்கிறதா? கும்ப மேளாவிற்காக எழுதினீர்கள். எனில் வந்தவுடனேயே சேவை செய்தீர்கள்தானே. ஆதலால் உங்களுக்குப் பலன் கிடைக்கும் எனில் நடனம் ஆடுங்கள். கணபதி நடனம், ஆடுங்கள். (ச-ர் ஜகதீஸ் கணபதி நடனம் ஆடினார்!). நன்றாக இருக்கிறது. நிமித்த சேவை ஆனால் பாக்கியத்தின் ரேகையை நீளமாக போட்டுக் கொண்டிருக்கிறீர்கள். (டான்சானியாவிலிருந்து ச-ர் ஜகதீஸ்'காக இயற்கை மருத்துவர் (naturopathy) வந்துள்ளார்). நல்லது, நிமித்தம் ஆவதற்கான பொன்னான வாய்ப்பு கிடைத்துள்ளது என இப்படி அனுபவம் செய்கிறீர்களா? நல்லது. சகயோகம் அளிப்பது, சகயோகி ஆவது என்றால் தன்னுடைய கணக்கை அதிகரிப்பது. நல்லது. ஓம் சாந்தி!

**முரளி தாதா, ரஜனி பெஹறன் உடன் (சகோதரி ஜெயந்தியின் லௌகீக தாய்-தந்தை):** பாப்தாதாவின் கையும் துணையும் ஆதியிலிருந்தே உள்ளது மற்றும் இறுதி வரைக்கும் இருக்கும். (தாதி ஜானகி கூறுகிறார் -அவ்வப்போது சிறிய மனதாகி விடுகிறது). இல்லை. பாப்தாதாவின் கையும் துணையும் மேலேயே உள்ளது. ஏன்? காரணம்? உங்களுடைய பங்கின் கணக்கு மிகப் பெரியது. யார் கன்யாதானம் செய்கிறாரோ, அந்தக் கன்யாவின் சேவையுடைய பங்கு உங்களுடைய கணக்கிலும் சேமிப்பாகிறது, ஆதலால் குஷியாக இருங்கள். கவலையற்ற ராஜா! கவலையற்ற ராஜாதானே. உதவி கிடைத்துக் கொண்டே இருக்கும். நல்லது. எந்தக் கவலையும் படாதீர்கள், பாப்தாதா யாரையாவது நிமித்தமாக்குவார். மிக நன்றாகச் செய்தீர்கள்.

✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳

# 31.12.2000 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சேமிப்பின் கணக்கை அதிகரித்து அகண்ட மகாதானி ஆகுங்கள்!

புது யுகத்தைப் படைப்பவர் இன்று தன்னுடைய புது யுக அதிகாரி குழந்தைகளைப் பார்க்கின்றார். இன்று பழைய யுகத்தில் சாதாரணமானவர்கள். நாளை புது ,யுகத்தின் இராஜ்ய அதிகாரிகள், பூஜைக்குரியவர்கள். இது இன்று, நாளை என்னும் விளையாட்டு. இன்றைய நிலை என்ன? மற்றும் நாளைய நிலை என்ன? ஞானி ஆத்மாக்களான, மிக நெருக்கமாக உள்ள குழந்தைகளுக்கு, நாளை வரவிருக்கின்ற நாளும்கூட, இன்று எப்படி தெளிவாக இருக்கிறதோ, அப்படியே தெளிவாக இருக்கிறது. நீங்கள் எல்லோரும் புத்தாண்டை கொண்டாட வந்திருக்கிறீர்கள் ஆனால் பாப்தாதா புது யுகத்தைப் பார்க்கின்றார். புத்தாண்டிற்காக, ஒவ்வொருவரும் தத்தம்முடைய திட்டத்தை தயாரித்திருப்பார்கள். இன்றுடன் பழையது முடிகிறது. ஆண்டு முடிவில் ரிசல்ட் பார்ப்பது வழக்கம். ஆதலால் இன்று பாப்தாதா ஒவ்வொரு குழந்தையினுடைய ஆண்டுக் கணக்கின் முடிவைப் பார்த்தார். பாப்தாதாவுக்கு, பார்ப்பதற்கு நேரம் ஒன்றும் பிடிக்காது. ஆதலால் இன்று விசேஷமாக எல்லாக் குழந்தைகளின் சேமிப்புக் கணக்கைப் பார்த்தார். எல்லாக் குழந்தைகளுமே புருஷாரத்தம் செய்திருக்கிறார்கள். நினைவில் இருந்திருக்கிறார்கள். சேவையும் செய்திருக்கிறார்கள். லௌகீக சம்மந்தம் மற்றும் தொடர்பு, அலௌகிக பரிவாரத்தில் நிர்வாக மும் செய்திருக்கிறார்கள் ஆனால் இந்த மூன்று விஷயங்களிலும் சேமிப்பு கணக்கு எவ்வளவு இருக்கிறது?

இன்று வதனத்தில் பாப்தாதா ஜகதம்பா மம்மாவை எமர்ஜ் செய்தார். (இருமல் வந்தது) இன்று இசைக்கருவி (தொண்டை) சரியில்லை. கெட்டுப் போயிருந்தாலும், எப்படியாவது வாசிக்கத் தான் வேண்டுமல்லவா? ஆதலால் பாப்தாதாவும், மம்மாவும் சேர்ந்து எல்லோருடைய சேமிப்புக் கணக்கைப் பார்த்தார்கள். எவ்வளவு

சேமித்திருக்கிறார்கள்? அப்படியானால் என்ன பார்த்தார்கள்? எல்லோரும் நம்பர்வாராக இருக்கிறார்கள் என்பது சரி தான். என்றாலும் எவ்வளவு சேமித்திருக்க முடியுமோ, அவ்வளவு சேமிப்பு கணக்கில் இல்லை. குறைவாகவே இருந்தது. ஆகவே ஜகதம்பா மம்மா ஒரு கேள்வி எழுப்பினார். அதாவது "நினைவு" என்ற பாடத்தில் அநேக குழந்தைகளினுடைய இலக்ஷியம் நன்றாகவே இருந்தது. புருஷாரத்தமும் நன்றாகத்தான் இருந்தது. இப்படியிருக்கும்போது, கணக்கில் சேமிப்பின் அளவு குறைந்திருப்பதன் காரணம் என்ன? பாப்தாதாவுடன் இது பற்றிப் பேசிப்பேசி ஒரு முடிவு எடுக்கப்பட்டது. "நினைவு" பயிற்சி செய்து கொண்டுதானிருக்கிறார்கள் ஆனால் யோகத்தின் அனுபவ நிலை சாதாரணமாக இருந்ததால், சேமிப்புக் கணக்கும் சாதாரணமாகவே இருக்கிறது. யோகத்தின் லக்ஷியம் நன்றாக இருக்கிறது ஆனால் யோகத்தின் பலன், யோகயுக்த் பேச்சு யுக்தியுக்த் நடத்தை இருக்க வேண்டும் என்பதாகும். இதில் குறை இருப்பதன் காரணமாக யோகம் செய்யும் போது யோகம் நன்றாக இருக்கிறது ஆனால் யோகி என்றால் யோகி வாழ்க்கையில் பிரபாவம் (இதில் குறை என்பது) ஆதலால் சேமிப்பு கணக்கு சில சமயங்களில் சேமிப்பாகிறது ஆனால் எல்லா நேரங்களிலும் சேமிப்பு ஆவதில்லை. போகப் போக நினைவு விகிதாச்சாரம் சாதாரணமாகி விடுகிறது. ஆதலால் சேமிப்பும் குறைவாகவே இருக்கிறது.

இரண்டாவது, சேவையைப் பற்றி சம்பாஷனை நடந்தது. நிறைய சேவை செய்கிறார்கள். இரவு பகலாக தொடர்ந்து செய்கிறார்கள். நல்ல, நல்ல திட்டமெல்லாம் போடுகிறார்கள். சேவையில் விருத்தியும் ஆகிக் கொண்டிருக்கிறது. இருந்தாலும் மெஜாரிட்டியினருடைய சேமிப்பு கணக்கு குறைவாகத்தான் இருக்கிறது. ஏன்? பேசி ஒரு முடிவுக்கு வந்தனர். சேவை என்னமோ எல்லோரும் செய்கிறார்கள். உற்சாகமுடனிருக்க நல்ல புருஷாரத்தமும் செய்கிறார்கள். பிறகு என்ன காரணம்? சேவை காரணமாக சக்தியும் கிடைக்கிறது. பலனும் கிடைக்கிறது. சக்தி (பலம்) என்பது மனதில் சுய திருப்தி. பலன் என்பது எல்லோருடைய திருப்தி. சரி. சேவை செய்தீர்கள். முயற்சி எடுத்துக் கொண்டீர்கள், நேரம் செலவழித்தீர்கள். தனக்கும் திருப்தி ஏற்பட்டது. உடன் சேவை செய்தவர்களுக்கும் திருப்தி ஏற்பட்டது யாருக்கெல்லாம் சேவை செய்தீர்களோ அவர்களுக்கும் கூட நன்றாக இருந்தது, மிகவும்

நன்றாக இருந்தது என்று சொன்னார்கள். திருப்தியுடன் சென்றார்கள். இது போதாது. அவர்களுடைய உள்ளத்தில் திருப்தி என்னும் அலை அனுபவம் ஆக வேண்டும். கொஞ்சம் கிடைத்து. மிக நன்றாக கேட்டார்கள். இது வேறு விஷயம். கொஞ்சம் கிடைத்தது, கொஞ்சம் அடைந்தார்கள் என்பது பற்றி பாப்தாதா இதற்கு முன்பு கூட கூறியிருக்கின்றார். அதாவது ஒன்று புத்தி வரை சென்றடைவது, இன்னொன்று உள்ளம் (மனம்) வரை சென்றடைவது. சேவை செய்வதென்பது சுய திருப்திக்காக, தனது மனமகிழ்ச்சிக்காக மட்டுமல்ல. நன்றாக நடந்தது. நன்றாயிருந்தது என்பதுமல்ல. உள்ளத்தில் முழு திருப்தி இருக்க வேண்டும். மற்றவருக்கும் உளமார இருக்க வேண்டும். அடுத்தது, சேவை செய்தீர்கள். அதனுடைய ரிசல்ட் எப்படி இருந்தது? கஷ்டப்பட்டுச் செய்தீர்களா? நான் தான் செய்தேன்.. செய்தது நான் தான் என்பதாக இருந்ததா? இப்படியிருந்தால், சேவையின் பலனை அனுபவித்து விட்டீர்கள். (சாப்பிட்டு விட்டீர்கள்) என்பதாகும். சேமிப்பு ஆக வில்லை. பாப்தாதா தான் செய்தார். பாப்தாதாவின் பக்கம் மற்றவர் கவனத்தைத் திருப்பினோம் என்பதாக இருக்க வேண்டு மே தவிர, தன் பக்கமாகக் கவர்ந்த சேவையாக இருக்கக்கூடாது. இந்த சகோதரியின் சேவை நன்றாக இருக்கிறது. இந்த சகோதரர் நன்றாக சேவை செய்கிறார்.... பாப்தாதா இவர்களைச் செய்வித்தார். இந்த அனுபவம் செய்விக்க வேண்டும். இம்மாதிரி சேமிப்புக் கணக்கை அதிகரிக்க வேண்டும். ஆகவே தான் கணக்கின் முடிவான ரிசல்ட் பார்க்கப்பட்டது. இதில் உழைப்பு அதிகம், நேரம் அதிகம், சக்தி அதிகம் மேலும் கொஞ்சம் கொஞ்சம் நடிப்பு அதிகம். இதன் காரணமாகவே, சேமிப்பு கணக்கு குறைந்து விடுகிறது. சேமிப்புக் கணக்கின் சாவி மிகவும் எளிதானது. அது டைமண்டு (வைரம்) சாவி. கோல்டன் சாவியை உபயோகிக்கிறீர்கள். டைமண்டு சாவியின் சேமிப்பு நிமித்தம் (கருவி) மற்றும் நிர்மாண் (பணிவு) பாவனை மூலமானதாகும். சேவை செய்யும்போது, இதற்கு முன்போ அல்லது பின்போ அல்ல, சேவை செய்யும்போது, நிமித்த பாவனை, நிர்மாண் பாவனை மற்றும் ஒவ்வொரு ஆத்மாவுக்காகவும் உடன் சேவை செய்பவராகட்டும் அல்லது யாருக்குச் சேவை செய்கிறோமோ அந்த ஆத்மா ஆகட்டும் இருவரிடமும் நிஸ்வார்த் (சுய நலமற்ற) சுப பாவனை, சுபமான சிநேகம் இருக்க வேண்டும்.

இந்த விதிப் பிரகாரம் சேவை செய்பவர்களுடைய சேமிப்பு கணக்கு அதிகமாகிக் கொண்டேயிருக்கின்றது. இந்த ரிசல்ட்டை பாப்தாதா மம்மாவிடம் காண்பித்தார். ஆம். ஒரு வினாடியில் பல மணி நேரத்தின் சேமிப்பு கணக்கில் சேர்ந்து விடுகிறது. டிக், டிக் என்று வேகவேகமாக விரல் சொடுக்கு விடுவதுபோல மெஷின் இயங்கிக் கொண்டேயிருக்கிறது. சேமிப்புக் கணக்கில், சேமிப்பது என்பது இவ்வளவு எளிதானதா என்று ஜகதம்பா குஷியடைந்து விட்டார். பாப்தாதாவும், ஜகதம்பாவும் ஒரு முடிவுக்கு வந்தனர். இந்த புத்தாண்டு ஆரம்பமாகிறது. இதில் சேமிப்புக் கணக்கை சோதித்துப் பார்க்க வேண்டும். முழு நாளில் எவ்வளவு தவறு செய்தோம் என்பதல்ல. நேரம் (சமயம்) சங்கல்பம், சேவை, சம்மந்தம் தொடர்பில் அன்பு, திருப்தி மூலமாக எவ்வளவு சேமித்தோம் என்று பார்க்க வேண்டும். சில குழந்தைகள் இன்று தவறு நடக்கவில்லை என்பது பற்றியும், யாருக்காவது துன்பம் கொடுத்தோமோ? என்பதையும் சோதிக்கிறார்கள் ஆனால் இப்போது, முழு நாளில் சிரேஷ்ட சங்கல்பத்தின் கணக்கு எவ்வளவு சேமிப்பாகியிருக்கிறது? எத்தனை ஆத்மாக்களுக்கு ஏதாவதொரு காரியத்தில் சுகம் கொடுத்தோம் என்று பார்க்க வேண்டும். யோகம் செய்தோம் ஆனால் யோகத்தின் அனுபவ நிலையின் விகிதாச்சாரம் எவ்வளவு இருந்தது? இன்று ஆசீர்வாதம் என்ற கணக்கு எவ்வளவு சேமிப்பு ஆகியிருக்கிறது, ஆகியன பார்க்க வேண்டும்.

இந்த புத்தாண்டில் என்ன செய்ய வேண்டும்? என்ன செய் தாலும் மனம், சொல், செயல் மூலமாக, இந்த சமயத்தில் "நான் அகண்ட மகாதானி ஆக வேண்டும்" என்ற ஆர்வம் இருந்து கொண்டேயிருக்க வேண்டும். அகண்ட மகாதானி, வெறும் மகாதானி அல்ல. அகண்ட (நிரந்தர) மனதின் மூலமாக சக்தியை தானம் செய்தல். பேச்சின் மூலம் ஞான தானம். செயல் மூலம் (நடத்தை) குண தானம். இன்றைய உலகில், பிராமண பரிவார உலகமாயினும் சரி, அஞ்ஞானிகளின் உலகமானாலும் ச ரி, கேட்பதற்குப் பதிலாக, பார்க்க விரும்புகின்றனர். பார்த்து செய்ய விரும்புகின்றனர். உங்களுக்கு எளிதாக இருக்கிறது. எப்படி? பிரம்மாபாபா செயல்களில் குணம் தானம் செய்யும் மூர்த்தியாக விளங்கினார். ஞான தானம் செய்கின்றீர்கள். ஞான தானம் செய்து கொண்டிருக்கிறீர்கள் ஆனால் இந்த ஆண்டு விசேஷமாக, ஆத்மாக்களுக்கு குண தானம் செய்ய வேண்டும் என்பதில் கவனம்

செலுத்த வேண்டும். அதவாது குணவானாக வாழும் வாழ்க்கை மூலமாக சகயோகம் செய்ய வேண்டும். பிராமணர்களுக்கு தானம் கொடுப்பதில்லையல்லவா? தானமல்ல, சகயோகம் (உதவி) என்ன நடந்தாலும் சரி, யார் எவ்வளவு கெட்ட குணமுடையவராயிருந்தாலும் சரி, நான் என்னுடைய வாழ்க்கை மூலமாக, கர்மம் மூலமாக அணுகுமுறை மூலமாக குணதானம் அதாவது சகயோகியாயிருக்க வேண்டும். இதில் மற்றவரைப் பார்க்க வேண்டிய அவசியமில்லை. இவராலேயே செய்ய முடியவில்லை என்றால், என்னால் எப்படி செய்ய முடியும்? இவர் கூட இப்படித்தானே இருக்கின்றார்? பிரம்மாபாபா சிவ பாபாவை மட்டுமே பார்த்தார். நீங்கள் பார்க்க வேண்டுமானால், பிரம்மாபாபாவைப் பாருங்கள். இதில் மற்றவரைப் பார்க்காமல், இலக்ஷியம் வைக்க வேண்டும். பிரம்மாபாபாவின் சுலோகம் தெரியுமல்லவா? " ஓட்டே சோ அர்ஜுன்" அதாவது யார் தன்னை நிமித்தமாக்கிக் கொண்டாரோ, அவர் நம்பர் ஒன் அர்ஜுனனாகி விட்டார். மாறாக மற்றவரைப் பார்த்த பிறகு செய்தாரானால் நம்பர் ஒன் ஆக மாட்டார். நம்பர்வார் என்பதில் தான் வருவார். நம்பர் ஒன் ஆக முடியாது. கை உயர்த்துங்கள் என்று சொன்னால், நம்பர்வார் என்பதற்கு கை உயர்த்துவார்களா? அல்லது "நம்பர் ஒன்"னில் வருவேன் என்பதில் கை உயர்த்துவார்களா? அப்படியானால் இலக்ஷியம் என்ன வைப்பீர்கள்? அகண்ட குணதானி, அட்டல் (உறுதி) யார், எவ்வளவு அசைத்தாலும் சரி, அசைந்து விடக் கூடாது. ஒருவருக்கொருவர் இப்படியும் கூறுகிறார்கள். எல்லோரும் எப்படி இருக்கிறார்கள் பார், நீ மட்டும் உன்னை ஏன் இவ்வளவு வருத்திக் கொள்கிறாய்? எல்லோரையும் போல இருக்க வேண்டியது தானே! இப்படி பலவீனப்படுத்தக் கூடியவர்களும் நிறைய பேர் கூடவே இருக்கிறார்கள் ஆனால் பாப்தாதாவுக்கு யார் வேண்டும்? துணிச்சல் மிக்கவர்கள், உற்சாகப்படுத்துபவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பது இப்போது புரிந்ததா? சேவை செய்யுங்கள் ஆனால் சேமிப்பை அதிகப்படுத்திக் கொள்ளும் வண்ணம் செய்யுங்கள். நன்றாக சேவை செய்யுங்கள். முதலில் தனக்கு சேவை, பிறகு அனைவருக் கும் சேவை. இன்னொரு விஷயம் கூட பாப்தாதா பார்த்தார். சொல்லலாமா?

இன்று சந்திரமா மற்றும் சூரியனுடைய சந்திப்பு இல்லையா? ஜகதம்பா பாப்தாதாவுக்கு மிக மெதுவாக எப்படிச் சொல்ல வேண்டுமோ அந்த

முறைப்படி ஒரு விஷயத்தைச் சொன்னார். ஜகதம்பா என்ன கூறினார் என்றால் அட்வான்ஸ் பார்ட்டி எது வரை காத்திருக்க வேண்டும்? ஏனெனில் அட்வான்ஸ் ஸ்டேஜில் முன்னேறினால் தானே அட்வான்ஸ் பார்ட்டியின் காரியம் முடிவுக்கு வரும்! ஆதலால் ஜகதம்பா மம்மா என்ன கூறினார்? பாப்தாதாவுக்குத் தெரியும் என்றாலும் இன்று சம்பாஷனை நடக்கிறதல்லவா? ஜகதம்பா என்ன கூறினார் என்றால், நான் கூட நாலா பக்கமும் சுற்றிப் பார்க்கிறேன். மதுபன்னிலும் சுற்றிப் பார்க்கிறேன். மற்ற சென்டர்களுக்கும் சென்று பார்க்கிறேன். பாப்தாதா சிரித்தவாறே ஜகதம்பாவைப் பார்க்க, அவரும் சிரித்துக் கொண்டே தயங்கித் தயங்கி சைகை மூலம் கூறினார். அப்பட்டமாகச் சொல்லவில்லை. ஜாடையாகச் சொன்னார். தற்சமயம் எல்லா இடங்களிலும் ஒரு விஷயம் விசேஷமாகத் தெரிகிறது என்றார். என்ன விசேஷம்? இன்று மெத்தனப்போக்கு பல விதத்தில் வந்து விட்டது. ஒரு சிலரிடம் ஒருவிதம். இன்னும் சிலரிடம் வேறு விதம். இப்படி இருக்கிறது. ஆகி விடும், செய்து விடலாம், இப்படித்தானிருக்கும், நடந்து கொண்டு தானே இருக்கிறார்கள்! நாமும் கூட செய்து விடலாம், இப்படித்தானிருக்கும், நடந்து கொண்டுதானிருக்கிறது. இந்த மாதிரியான அலக்ஷிய தன்மை சங்கல்பத்தில் இருந்து கொண்டுதானிருக்கிறது. என்றாலும் பேச்சிலும் வந்திருக்கிறது. ஆதலால் பாப்தாதா ஜகதம்பா மம்மாவிடம் இந்த புத்தாண்டில் இது பற்றி குழந்தைகளுக்கு ஒரு யுக்தி சொல்லுங்கள் என்று கூறினார். ஜகதம்பா மம்மாவிடம் தாரணைக்காக சதா ஒரு சுலோகம் இருந்தது, அதுபற்றி எல்லோருக்கும் தெரியுமா என்று பாப்தாதா கேட்டார். யாருக்கு நினைவிருக்கிறது? (ஹூக்கிமி ஹுகும் சலாயே ரஹே) கட்டளை இடுபவர் கட்டளை இட்டுக் கொண்டேயிருந்தார் என்பது. பிறகு ஜகதம்பா கூறினார். பாப்தாதா நடத்திக் கொண்டிருக்கிறார், அவரது கட்டளைப்படியே ஒவ்வொரு அடியும் எடுத்து வைக்க வேண்டும் என்பதை தாரணை செய்ய வேண்டும். என்னை நடத்துபவர் "டைரக்ட் பாபா" என்பது நினைவிருந்தால், பார்வை நடத்துபவருடைய பக்கம் தான் இருக்கும். வேறு எந்தப் பக்கமுமல்ல. நடத்துபவர், நிமித்தமாக்கி நடத்திக் கொண்டிருக்கின்றார். பொறுப்பு நடத்துபவருடையது. இதனால் சேவையில் தலை பாரமாகி விடுகிறதல்லவா! அது இலகுவாகி ஆன்மீக ரோஜா போல ஆகி விடும். புரிந்ததா? என்ன செய்ய வேண்டும்? அகண்ட மகாதானி. நல்லது.

## 2000 அவ்யக்த முரளி

புத்தாண்டைக் கொண்டாடுவதற்காக, எல்லோரும் ஓடோடி வந்து சேர்ந்து விட்டார்கள். நல்லது. ஹவுஸ்புல் ஆகி விட்டது. தண்ணீர் நிறைய கிடைத்ததல்லவா? தண்ணீர் கிடைத்ததா? என்றாலும் தண்ணீர் கொண்டு வந்து சேர்த்தவர்களின் முயற்சிக்கு வாழ்த்துக்கள். இத்தனை ஆயிரம் பேர்களுக்கு தண்ணீர் வேண்டுமானால், இரண்டு அல்லது நான்கு வாளி இல்லை யல்லவா? எல்லோரும் சௌகரியமாக இருந்தீர்களா? கொஞ்சம் சூறாவளிக் காற்று மூலமாக சோதனை வந்தது. காற்று கொஞ்சம் வீசியது. எல்லோரும் பத்திரமாக இருந்தீர்களா? பாண்டவர்கள் பாதுகாப்பாக இருந்தீர்களா? நல்லது கும்பமேளாவை விட எவ்வளவோ மேல், சரிதானா? சரி, மூன்றடி பூமி கிடைத்ததல்லவா? கட்டில் கிடைக்காமலிருக்கலாம். மூன்றடி பூமி கிடைத்ததல்லவா?

சரி. இந்த புத்தாண்டில் நாலா பக்கங்களிலுமுள்ள குழந்தைகள், வெளிநாடுகளில், உள் நாட்டில் கூட புத்தாண்டு விழா நிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். புத்தி மூலமாகப் பார்க்கின்றனர். காதுகள் மூலமாகக் கேட்கின்றனர். மதுபனில் கூட பார்க்கின்றனர். மதுபன் வாசிகள் கூட யக்ஞ ரக்ஷகர் ஆகி சேவையில் தாங்கள் செய்ய வேண்டிய பார்ட் செய்தார்கள். மிக நன்றாக இருந்தது. பாப்தாதா வெளிநாடு மற்றும் உள் நாட்டினருடன் சேவையில் நிமித்தமாயிருக்கும் மதுபன் வாசிகளுக்கும் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார். நன்று. மற்றபடி புத்தாண்டு வாழ்த்து கார்டுகள் நிறைய வந்து சேர்ந்திருக்கின்றன. கார்டு ஒன்றும் பெரிய விஷயம் அல்ல ஆனால் இதில் மறைந்துள்ளது உள்ளன்பு. பாப்தாதா கார்டு எப்படி இருக்கின்றது என்று பார்ப்பதில்லை ஆனால் அதில் எவ்வளவு விலை மதிக்க முடியாத அன்பு இருக்கிறது என்பதை பார்க்கின்றார். இதன் மூலமாக தத்தமது உள்ளன்பை அனுப்பியிருக்கின்றார்கள். ஆகவே இப்படிப்பட்ட அன்பான ஆத்மாக்களுக்கு, விசேஷமாக ஒவ்வொருவருடைய பெயரையும் குறிப்பிடவில்லை தான் என்றாலும் கார்டுக்குப் பதிலாக குழந்தைகளுக்கு அன்பு நிறைந்த நல்வாழ்த்துக்களைத் (Regard) தெரிவிக்கின்றார். நினைவுக்கடிதம், டெலிபோன், கம்யூட்டர், இ.மெயில் இம்மாதிரி என்னென்ன சாதனங்கள் இருக்கின்றனவோ, அவை எல்லாவற்றின் மூலமாக பாப்தாதாவுக்கு

முதலில் சங்கல்பத்தின் மூலமாகவே வந்து சேர்ந்து விட்டது. இதன் பிறகு உங்களுடைய கம்யூட்டர், இ.மெயில் வந்தது. குழந்தைகளுடைய அன்பு ஒவ்வொரு சமயத்திலும் வந்து கொண்டுதானிருக்கிறது. என்றாலும் இன்று விசேஷமாக புத்தாண்டு தினத்தில் அநேகர் தங்களுடைய பிளான் (திட்டம்) பற்றியும் எழுதியிருக்கிறார்கள். உறுதிமொழி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நடந்ததை, கடந்து போனதாக நினைத்து, முன்னேறுவதற்கு துணிவு கொண்டிருப்பதாகவும் எழுதியிருக்கின்றனர். எல்லோருக்கும் பாப்தாதா கூறுகின்றார் சபாஷ் குழந்தைகளே! சபாஷ்!

எல்லோருக்கும் மகிழ்ச்சியாக இருக்கிறதல்லவா? ஆதலால் மற்றவர்களும் கூட மகிழ்ச்சியடைகின்றனர். இப்போது பாப்தாதாவுக்கு உளப்பூர்வமான விருப்பம் ஒன்றிருக்கிறது. அது என்ன தெரியுமா? வள்ளலினுடைய குழந்தை ஒவ்வொருவரும் வள்ளல் ஆகி விடுங்கள். கேட்காதீர்கள், இது வேண்டும். அது நடக்க வேண்டும், இதைச் செய்ய வேண்டும். கேட்காதீர்கள். வள்ளலாகுங்கள். ஒருவரையொருவர் முன்னேற்றுவதில் பெருமனம் படைத்தவராகுங்கள். சில சிறு குழந்தைகள், எங்களுக்கு பெரியவர்களிடமிருந்து அன்பு கிடைக்க வேண்டும் என்று பாப்தாதாவிடம் கேட்கின்றனர். பாபா கூறுகின்றார்: நீங்கள் பெரியவர்களிடம் மரியாதை வையுங்கள், உங்களுக்கு அன்பு கிடைக்கும். மரியாதை கொடுப்பது தான் மரியாதை பெறுவதாகும். மரியாதை சும்மா கிடைத்து விடாது. கொடுப்பதுதான் பெறுவது. தேவதா என்றால் கொடுப்பவர். தேவி என்பதன் பொருள் கொடுப்பவர். உங்களுடைய ஜட சித்திரங்களே கொடுக்கின்றன. ஆதலால் சைத்தன்ய தேவி தேவதைகளான நீங்கள் வள்ளலாகுங்கள். கொடுங்கள். இவ்வாறாக எல்லோருமே கொடுப்பவர்கள் ஆகி விட்டால், வாங்குபவர்களே இருக்க மாட்டார்கள் அல்லவா? பிறகு நாலா பக்கங்களிலும் திருப்தி எனும் ஆன்மீக ரோஜாவின் மணம் பரவி விடும். கேட்டீர்களா?

ஆதலால் இந்த புத்தாண்டில் பழைய பேச்சு பேசக்கூடாது. கேட்கவே பிடிக்காத சிற்சில பழைய பாஷை சிலர் பேசுகிறார்கள். இப்படிப்பட்ட பழைய பேச்சு, பழைய நடத்தை, இம்மாதிரி எந்த ஒரு பழைய பழக்கத்தின் காரணமாக பலவீனமாகி விடாதீர்கள். ஒவ்வொரு

சமயத்திலும், நீங்களே உங்களை கேளுங்கள், இது புதிதா? புதியது என்ன செய்தோம்? போதும். 21வது நூற்றாண்டை கொண்டாட வேண்டும். அவ்வளவு தான். 21-ஜன்மத்திற்கான ஆஸ்தியை சம்பூரணமாக 21வது நூற்றாண்டில் பெறத்தான் வேண்டும். அடையத்தான் வேண்டும். அச்சா.

நாலா பக்கங்களிலுமுள்ள புது யுகத்தின் அதிகாரி சிரேஷ்ட ஆத்மாக்களுக்கும், எல்லா குழந்தைகளுக்கும், யார் சதா ஒவ்வொரு அடியிலும் நூறுமடங்கு சேமிக்கிறார்களோ அப்படிப்பட்ட ஆத்மாக்களுக்கும், சதா தன்னை பிரம்மாபாபா சமானமாக எல்லோருக்கும் முன்பாக (Sample) முன்னு தாரணமாகி, சிம்பிளாக ஆக்கக்கூடிய ஆத்மாக்களுக்கும், சதா தன்னுடைய வாழ்க்கையில் குணங்களை பிரத்யக்ஷம் செய்து மற்றவர்களையும் குணவான்களாக ஆக்கக்கூடிய சதா அகண்ட மகாதானி மகாசகயோகி ஆத்மாக்களுக்கும் பாப் தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே!

**2001 புத்தாண்டு தினத்தன்று 12-மணிக்குப் பிறகு பாப்தாதா எல்லா குழந்தைகளுக்கும் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.** அவ்யக்த பாப்தாதா அமைதிக் கலாச்சார (கல்ச்சர் ஆப் பீஸ்) சேவைக்கான பரிசுகளையும் வழங்கினார். (பரிசு வென்றவர்களுக்கு).

இந்த நேரம் பழைய மற்றும் புத்தாண்டின் சங்கம சமயமாகும். சங்கம சமயம் என்றால் பழையது முடிந்து விட்டது. புதியது ஆரம்பமாகி விட்டது. இந்த பேகத் சங்கமயுகத்தில் எல்லா பிராமண ஆத்மாக்களாகிய நீங்கள் விஷ்வ பரிவர்த்தனை செய்வதற்கு நிமித்தமாயிருக்கின்றீர்கள். இதுபோல, இன்றைய பழைய மற்றும் புத்தாண்டின் சங்கமத்தில் சுய பரிவர்த்தனைக்காகவும் திட சங்கல்பம் செய்திருக்கிறீர்கள். ஆகவே செய்யத்தான் வேண்டும். ஒவ்வொரு வினாடியும் உறுதியாகவும் (அட்டல்) மற்றும் நிரந்தர (அகண்ட) மகாதானி ஆக வேண்டும். வள்ளலின் குழந்தைகள் மாஸ்டர் வள்ளல் ஆக வேண்டும். பழைய ஆண்டுக்கு விடை கொடுப்பதுடன் பழைய உலக ஆகர்ஷணம் பழைய சம்ஸ்காரம் ஆகியவற்றிற்கு விடை கொடுது சிரேஷ்ட சம்ஸ்காரத்தை வரவேற்க வேண்டும்.

எல்லோருக்கும் கோடான கோடி வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள்!

டெல்லி பவன் பற்றி: டெல்லி தர்பார் எல்லோருக்கும் பிரியமானது. ஏனெனில் அநேக தடவை இராஜ்யம் செய்திருக்கிறீர்கள். மீண்டும் இன்று அல்ல, நாளை இராஜ்யம் செய்ய வேண்டும். இவ்வளவு அருகாமையில் வந்து விட்டீர்கள். ஆதலால் டெல்லி சேவையில் யார் யாரெல்லாம் நிமித்தமாக இருக்கின்றார்களோ (நிமித்தமாகத் தான் வேண்டும்) அந்த எல்லா சேவாதாரிகளுக்கும் நீங்கள் எல்லோரும் எல்லா விதமான சகயோகம் தந்து முன்னேறச் செய்து கொண்டிருக்கிறீர்கள். மேலும் முன்னேறச் செய்து கொண்டேயிருக்க வேண்டும். ஏனென்றால் இராஜதானி தயார் ஆக வேண்டும். ஆதலால் முன்கூட்டியே டெல்லி சேவை ஸ்தானத்திற்கு நல்வாழ்த்துக்கள், நல்வாழ்த்துக்கள்!

இன்ஜினியர்கள் மற்றும் யாரெல்லாம் சேவையில் நிமித்தமாக இருக்கின்றார்களோ, அவர்கள் எல்லோருமே நல்ல சேவை செய்து கொண்டிருக்கிறார்கள். ஆதலால் பாப்தாதா எல்லோருக்கும் வாய் இனிக்க குலோப் ஜாமுன் வழங்குகின்றார். தயாராகி விடும், உங்கள் எல்லோருடைய சகயோகத்தால். உங்கள் எல்லோருடைய வாய்க்கும் குலோப் ஜாமுன் வரும். நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

## பொருளடக்கம்

☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂